# வருடாந்த அறிக்கை

# 2017

இலங்கைத் தேயிலைச் சபை

# இலங்கை தேயிலைச் சபை


அஞ்சல் முகவரி

இலங்கை தேயிலைச் சபை

574

காலி வீதி

கொழும்பு 03

இலங்கை

ஊயடிடநள

தேயிலைச்சபை கொழும்பு

தொலைபேசி

+94-11-2587814

+94-11-2582121

பெக்ஸ்

+94-11-2589132

+94-11-2587341

மின்னஞ்சல்

teaboard@pureceylontea.com

இணையதளம்

www.pureceylontea.com

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நோக்கம் மற்றும் பணிக்கூற்று | 04 |
| இலங்கைத் தேயிலை சபையின் அங்கத்தவர்கள | 05 |
| கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள | 06 |
| ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தும் குழுவின் அங்கத்தவர்கள் | 07 |
| சிரேஷ்ட முகாமைத்துவப் பணியாளர் சபை | 08 |
| தலைவரின் வாழ்த்துச் செய்தி | 09 |
| அடிப்படை ஒப்பீட்டுச் சுட்டி | 14 |
| கூட்டுத்தாபனப் பின்னனி | 15 |
| கைத்தொழிலின் பக்கத் தோற்றம் | 18 |
| இலங்கை தேயிலைச்சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் | |
| தேயிலை ஆணையாளர் பிரிவு | 45 |
| தேயிலை ஏற்றுமதிப் பிரிவு | 58 |
| தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு | 60 |
| தேயிலை சுவை பரீட்சிப்புப் பிரிவு | 89 |
| பகுப்பாய்வு ஆராய்ச்சிக் கூடம் | 92 |
| நிர்வாகப் பிரிவு | 96 |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுமீளாய்வு | 98 |
| தகவல் தொழில்நுட்பப் பிரிவு | 98 |
| நிதி மீளாய்வு | 99 |
| இலங்கைத் தேயிலை சபையின் அலுவலகம் | 120 |
| கணக்காய்வாளர் அறிக்கை | 123 |

# நோக்கம்

இலங்கைத் தேயிலையை கோளமய சந்தையில் அதிஉன்னத கவர்ச்சிமிக்க பாணங்களில் முன்னிலைப் பாணமாக மாற்றியமைத்தல்.

# பணிக்கூற்று

கைத்தொழிலின் நீடித்த நிரந்தர அபிவிருத்தியின் ஊடாக நாட்டிற்குக் கிடைக்கும் அந்திய நாட்டுச் செலாவணி உழைப்பினை மேம்படுத்தல் மற்றும் அதன் மூலம் பொருந்தோட்ட கைத்தொழிலில் ஈடுபடும் சமூகத்தின் பொருளாதார அபிவிருத்தியினை உறுதிப்படுத்தல்.

# இலங்கை தேயிலை சபையின் அங்கத்தவர்கள்

| | |
|---|---|
| தலைவர் | லுசில்லே விஜேவர்தன |
| குழுவின் செயலாளர் | திரு. எஸ்.ஏ. சிறிவர்தன |
| அங்கத்தவர் | மேலதிக செயலாளர், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு<br>திரு. யு.கே.எஸ். மிஹிந்து குலசூரிய (ஜனவரி - பெப்ரவரி 2017)<br>திருமதி. டப்.எம்.டி.ரி.விக்ரமசிங்க (மார்ச் 2017 தொடக்கம் டிசம்பர் 2017 வரை) |
| அங்கத்தவர் | பணிப்பாளர் நாயகம், அபிவிருத்தி நிதித் திணைக்களம், நிதி அமைச்சு<br>திரு. ஏ.எம்.பி.எம்.பி. அத்தபத்து |
| அங்கத்தவர் | கைத்தொழில் மற்றும் வர்த்தக விவகார அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி<br>திரு. ஆர்.எஸ்.கே. துள்வளகே |
| அங்கத்தவர் | தலைவர், இலங்கை சிறுதேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை<br>திரு. டி.எம். விஜேரத்ன |
| அங்கத்தவர் | கொழும்பு தரகர்களின் சங்கம்<br>திரு. தீபால் ஜயமன்னே (ஜனவரி 2017)<br>திரு. செனரத் திசாநாயக்க (பெப்ரவரி 2017 - மார்ச் 2017)<br>திரு. ஜசான் பர்னாந்து (ஏப்ரல் - டிசம்பர் 2017) |
| அங்கத்தவர் | தலைவர் கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கம்<br>திரு அன்சலம் பெரேரா |
| அங்கத்தவர் | தலைவர் தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம்<br>திரு ரொஹான் பர்னாந்து (நவம்பர் 2016 வரை)<br>திரு ஜெயந்த கருணாரத்ண (டிசம்பர் 2016 இல் இருந்து) |
| அங்கத்தவர் | கொழும்பு தேயிலை தரகர்கள் சங்கம்<br>திரு. அன்ஸ்லெம் பெரேரா |
| அங்கத்தவர் | தலைவர், கொழும்பு தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம்<br>திரு. ஜயந்த கருணாரத்ன (ஜனவரி 2017 தொடக்கம் டிசம்பர் 2017 வரை) |
| அங்கத்தவர் | தலைவர், இலங்கை சிறுதேயிலைத் தோட்ட அபிவிருத்தி<br>சங்க பெடரேசன்<br>திரு. நெவில்லே ரத்னாயக்க |
| அங்கத்தவர் | தலைவர், இலங்கை பெருந்தோட்ட கைத்தொழிலாளர் சங்கம்<br>திரு. சுனில் பொஹொலியத்த (ஜனவரி 2017) |
| அங்கத்தவர் | தலைவர், இலங்கை தேயிலை கைத்தொழிலாளர் உரிமையாளர் சங்கம்<br>திரு. அனில் அல்விஸ் (ஜனவரி 2017 தொடக்கம் டிசம்பர் 2017 வரை)<br>திரு. ஹரித் ரணசிங்க (ஒக்டோபர் 2017 தொடக்கம் டிசம்பர் 2017 வரை) |
| அங்கத்தவர் | கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில்துறை அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்<br><br>திருமதி. பி.பி. கமகே<br>திரு. பி.டப். ஹர்சான் சில்வா |
| மேற்பார்வையாளர்கள் | கலாநிதி. எம்.எம்.ஜே.பி. கவறமன்ன<br>திரு. நிராஜ் டி. மெல்<br>திரு. எச்.டி. ஹேமாரத்ன<br>திரு. அனில் பெரேரா<br>திரு. அஜித் என். சில்வா |

# கணக்காய்வு குழுவின் அங்கத்தவர்கள்

| | | |
|---|---|---|
| திரு. ஏ.எம்.பி.எம்.பி. அத்தப்பத்து,<br>பணிப்பாளர் நாயகம்,<br>அபிவிருத்தி நிதித் திணைக்களம்,<br>நிதி அமைச்சு | - | தலைவர் |
| திரு. என்.ஏ.யு.கே.எஸ். மிஹிந்து குலசூரிய,<br>மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)<br>பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு<br>(27/01/2017 வரை) | - | அங்கத்தவர் |
| திருமதி. டப்.எம்.டி.ரி. விக்ரமசிங்க,<br>மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)<br>பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு<br>(05/05/2017 தொடக்கம்) | - | அங்கத்தவர் |
| திரு. அனில் அல்விஸ்<br>தலைவர்,<br>இலங்கை தேயிலை கைத்தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம்<br>(05/05/2017 வரை) | - | அங்கத்தவர் |
| திரு. ஹரித் ருவான் ரணசிங்க,<br>தலைவர்,<br>இலங்கை தேயிலை கைத்தொழில் உரிமையாளர்கள் சங்கம்<br>(20/12/2017 தொடக்கம்)) | - | அங்கத்தவர் |
| திரு. எச்.டி. ஹேமாரத்ன,<br>ஆலோசகர்,<br>கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கம் | - | மேற்பார்வையாளர் |
| திருமதி. எஸ்.டி. கடுவாவள,<br>கணக்காய்வு அத்தியட்சகர்,<br>கணக்காய்வாளர் திணைக்களம் | - | மேற்பார்வையாளர் |
| திரு. எஸ்.ஏ. சிறிவர்தன,<br>பணிப்பாளர் நாயகம்,<br>இலங்கை தேயிலை சபை | - | ஏற்பாட்டாளர் |

# ஊக்குவிப்பு மற்றும் விற்பனைக் குழு உறுப்பினர்கள்

இலங்கை தேயிலை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தும் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கை தேயிலை சபைக்கு வழிகாட்டல்களுக்காக நியமிக்கப்பட்ட உப குழுவாகும்.

திரு. ரொஹான் பேதியகொட
தலைவர், இலங்கை தேயிலை சபை

திரு. எஸ்.ஏ. சிறிவர்தன
பணிப்பாளர் நாயகம், இலங்கை தேயிலை சபை

திருமதி. பிரேமலா சிறிகந்த
பணிப்பாளர் (ஊக்குவிப்பு) இலங்கை தேயிலை சபை

கலாநிதி. எம்.எம்.ஜே.பி. கவரம்மான
தலைவர், தேயிலை ஆராய்ச்சி சபை

திருமதி. எஸ்.என்.ஐ. விஜேரத்ன
வர்த்தகப் பணிப்பாளர் நாயகம், வர்த்தகத் திணைக்களம்

## தனியார் துறை

திரு. ரொகான் பர்னாந்து
தேயிலை ஏற்றுமதியாளர்களின் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி

திரு. ஜயந்த கருணாரத்ன
தலைவர், தேயிலை ஏற்றுமதியாளர் சங்கம்

திரு. முபடால் ஜப்பர்ஜீ
தேயிலை ஏற்றுமதியாளர் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி

திரு. அவி டி சில்வா
தேயிலை ஏற்றுமதியாளர் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி

திரு. அனில் குக்
தலைவர், ஏசியா சியக கொமடிடீஸ் தனியார் கம்பனி

திரு. மலின் குணதிலக
பொதுச் செயலாளர், இலங்கை பெருந்தோட்டக் கைத்தொழிலாளர் சங்கம

திரு. பசிந்து பீரீஸ்
இலங்கை தேயிலை கைத்தொழில் உரிமையாளர் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி

திரு. நெவில்லே ரத்நாயக்க
தலைவர், இலங்கை சிறுதேயிலைத் தோட்ட அபிவிருத்தி சங்க பெடரேசன்

திரு. தையிப் அக்பார்அலி
பணிப்பாளர், அக்பார் பிரதர்ஸ்

திரு. மலிக் பர்னாந்து
பணிப்பாளர் - செயற்பாடு, MJF கூட்டுக் கம்பனி

கலாநிதி. காமினி அபேவிக்ரம
முகாமைத்துவப் பணிப்பாளர், பசியுர்ரீ எக்ஸ்போர்ட் தனியார் கம்பனி

திரு. விஸ் கோவிந்தசாமி
குழு முகாமைத்துவப் பணிப்பாளர், சன்சைன் கோள்டிங் தனியார் கம்பனி

திரு. சமிந்த ஜயவர்தன
முகாமைத்துவப் பணிப்பாளர், லும்பினி தேயிலை கைத்தொழிற்சாலை தனியார் கம்பனி

திரு. பிரேந்ர பெரேரா
பணிப்பாளர், யூரோ ஸ்கான் எக்ஸ்போர்ட் தனியார் கம்பனி

# சிரேஷ்ட முகாமைத்துவ பணியாட்தொகுதியினர்

| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் | திரு. எஸ்.ஏ. சிறிவர்தன |
| தேயிலை ஆணையாளர் | திரு. ஈ.ஏ.ஜே.கே. எதிரிசிங்க |
| பணிப்பாளர் (ஊக்குவிப்பு) | திருமதி. பிரேமலா சிறிகாந்த |
| பணிப்பாளர் (பகுப்பாய்வு சேவைகள்) | கலாநிதி. எம்.ஏ.என். ஜயதிலக |
| உதவிப் பணிப்பாளர் நாயகம் (நிருவாகம்) | திரு. எஸ்.ஜ.சி. பெரேரா |
| சிரேஷ்ட உள்ளகக் கணக்காய்வாளர் | திரு. எச்.டி.கே. ஜயசிங்க |
| கணக்காளர் | திருமதி. டப். ராஜகருணா |

2017

# தலைவரின் செய்தி

2017 ஆம் ஆண்டுக்காக மீளாய்வினைச் சமர்ப்பிக்க கிடைத்தமையை இட்டு மகிழ்ச்சியடைகிறேன்.



**முன்னுரை**

**2017 ஆம் ஆண்டு இலங்கை தேயிலை கைத்தொழிற்துறையின் சிறந்த ஆண்டாக பதிவாகியது.**

தேயிலைக் கைத்தொழில் இலங்கைத் தேயிலை தொடர்பாக 150 வது ஆண்டு நிறைவு கடந்த ஆண்டு கொண்டாடப்பட்டதுடன், அது தொடர்பில் இவ்வாண்டு பூராகவும் உள்நாடு மற்றும் சர்வதேச ரீதியில் பல்வேறுபட்ட விழாக்கள் நடாத்தப்பட்டன. தேசிய தேயிலை விருது, தேயிலை சம்மேளன மற்றும் 32 நாடுகளில் நடாத்தப்பட்ட தேயிலை விழா போன்ற பிரதான விழாக்களில் ஒரு சிலவைகளாகும். 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேயிலை விருது விழாவில் தேயிலைக் தொழிலுக்கு அதன் பல்வேறுபட்ட தரப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட செயற்சாதனைகள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டன.

தேயிலை ஏற்றுமதி வருமானம், உற்பத்தி, ஏல விற்பனையின் விலைகள் மற்றும் தேயிலை ஏற்றுமதி விலைகள் தொடர்பாக கருத்திற் கொள்ளும் போது மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு இணைவாக கூடுதலான முன்னேற்றங்களை எட்டக்கூடிய இயலுமைகள் கிடைத்தன. இத்தேயிலை உற்பத்தியின் வளர்ச்சி சுமார் 5% என்பதுடன், ஏற்றுமதிப் பெறுமதி 1.53 பில்லியன் அ.டொலர்களாகும். அது கடந்த ஆண்டுக்கு இணைவாக 20% அதிகரிப்பாகும். பிரதானமாக ஆண்டு பூராகவும் அமுலில் இருந்த மிகவும் சிறந்த விவசாயக் காலநிலை காரணமாக தேயிலைக் கைத்தொழிற்துறையில் ஒரு சில பிரதான சுட்டிகள் மிகவும் பயன்மிக்க மட்டத்தை எட்டிக் காணப்பட்டன. தடைசெய்யப்பட்ட கிளைபோசெட் மற்றும் குளோபோசெட் - அமோனிய மாற்றுக் களைகொல்லி அழிப்புக்கள் இன்மை மற்றும் பாதக பசளைக் கொள்கை 2017 ஆம் ஆண்டில் தேயிலை கைத்தொழில் வளர்ச்சிக்கு அழுத்தங்களை ஏற்படுத்திய காரணிகளாகும். இது தொடர்பான பிரச்சினைகள் உரிய காலத்திற்கு தீர்க்கப்பட்டிருப்பின் மேற்கூறப்பட்ட கைத்தொழில் சுட்டி மேற்கூறப்பட்ட புள்ளிவிபரங்களில் குறிப்பிட்ட அளவை விடக் கூடுதலான வளர்ச்சியினை எட்ட வாய்ப்புக்கள் காணப்பட்டன.

2017

சந்தையின் பங்குகளை நிலையாகப் பேணுதல் மற்றும் இலங்கைத் தேயிலை வகைகளின் பண்புசார் தரம் மற்றும் போட்டிகரமான ஏல விற்பனை விலைகள் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் இக் கைத்தொழில் எதிர்கொண்ட ஒரு சில சவால்களாகும். தேயிலைக் கைத்தொழிலை பாதுகாப்பதை போன்று இலங்கை தேயிலையை ஊக்குவிப்பதற்காக இலங்கைத் தேயிலை சபை மேலதிக முயற்சிகளை மேற்கொண்டது. ஆண்டு இறுதியில் இலங்கையில் உயிர் வாழாத கப்றா பூச்சி இனம் ரஷ்யாவிற்கு அனுப்பப்பட்ட தேயிலை கொள்கலன்களிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டதுடன், ரஷ்யாவின் தூதுவர் மற்றும் ஏனைய துணைப் பிரதிநிதிகளின் உதவியுடன் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு இலங்கை தேயிலை சபைக்கு முடிந்தது.

**தேயிலை உற்பத்தி**

2017 ஆம் ஆண்டில் இலங்கை தேயிலை உற்பத்தி 307.71 மில்லியன் கிலோகிராமாக பதிவு செய்யப்பட்டதுடன், அது முன்னைய ஆண்டுக்கு இணைவாக 15.4 மில்லியன் கிலோகிராம் அதாவது 5.18% சிறிய அதிகரிப்பு பதிவாகியது. 197.42 கிலோகிராம் தாழ் நிலச் செய்கை மேற்கொள்ளப்பட்ட தேயிலை என்பதினால் தேயிலை உற்பத்திக்காக உயரிய பங்களிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் மலையகத் தேயிலை உற்பத்தி 45.65 கிலோகிராமும், நாட்டின் மத்திய பிரதேசத்தில் தேயிலை உற்பத்தி 45.65 மல்லியன் கிலோகிரமாகவும் காணப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் பச்சைத் தேயிலை உற்பத்தியானது 2016 ஆம் ஆண்டின் பச்சைத் தேயிலை உற்பத்தியான 2.37 மில்லியன் கிலோகிராமிற்கு இணைவாக 12% அதிகரிப்பினை பதிவு செய்து 2.66 கிலோகிராம் மில்லியனாக பதிவாகியது. அதேபோன்று 2017 ஆம் ஆண்டில் CTC தேயிலை உற்பத்தியானது 2016 ஆம் ஆண்டில் CTC தேயிலை உற்பத்தி செய்யப்பட்ட 18.32 மில்லியன் கிலோ கிராமுடன் ஒப்பீடு செய்யும் போது 18.99% வளர்ச்சியினை பதிவு செய்து 21.80 மில்லியன் கிலோகிராமாக மாற்றமடைந்து காணப்பட்டது.

தேசிய உற்பத்தியில் 76% திற்கு மேற்பட்ட அளவு தேயிலை உற்பத்திக்காக பங்களிப்பு செய்து சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தேயிலை உற்பத்தியாளர்களுக்கிடையே முதல் நிலையினை எட்ட முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கொழும்பு தேயிலை ஏல விற்பனை மற்றும் மீண்டும் இலவச (FOB) விலைகள்**

2017 ஆம் ஆண்டில் கொழும்பு தேயிலை ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்ட அளவு 2016 ஆம் ஆண்டின் தேயிலை உற்பத்தி அளவிற்கு இணைவாக 6.66% தினால் அதிகரித்துக் காணப்பட்டது. உயர், மத்தி மற்றும் தாழ் நில உயரங்களுக்கமைய இம்மூன்று மட்டங்களிலும் உயரிய அடைவு மட்டங்களில் பதிவாகியிருந்தன.

2016 ஆம் ஆண்டில் ஒரு கிலோ கிராமிற்கு 466.4 ரூபா என மொத்த ஏல விற்பனை பொதுவான அமைப்பிற்கு இணைவாக 2017 ஆம் ஆண்டில் மொத்த ஏல விற்பனையும் பொதுவாக 01 கிலோ கிராமிற்கு 617.17 ரூபாவாக மாற்றமடைந்து காணப்பட்டதுடன் அது முன்னைய ஆண்டுக்கு இணைவாக 32% அதிகரிப்பாகும்.

2017

கொழும்புத் தேயிலை ஏலவிற்பனை ஒரு கிலோகிராமிற்கு 4.07 அ.டொலர் பொதுவாக பதிவு செய்யப்பட்டதுடன், அதில் ஏனைய ஏல விற்பனை மத்திய நிலையங்களில் பொதுவான தன்மைக்கு மற்றும் 2017 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட பொதுவான ஒரு கிலோ கிராமிற்கு 3.23 அ.டொலர் என்ற அளவிற்கு இணைவாக அதிகூடுதலான அதிகரிப்பு முன்னேற்றங்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டில் ஒரு கிலோகிராம் தேயிலையின் பொதுவான ஏற்றுமதி விலை (மீண்டும் இலவசம் FOB) என்ற ரூபா 639.88 தொடக்கம் 26.2% வளர்ச்சியினைப் பதிவு செய்து 2017 ஆம் ஆண்டில் ஒரு தேயிலை கிலோகிராமின் பொதுவான ஏற்றுமதி விலை ரூபா 807.44 வரை அதிகரித்துக் காணப்பட்டது.

**தேயிலை ஏற்றுமதி**

2016 ஆம் ஆண்டில் இலங்கையில் தேயிலை ஏற்றுமதிக் கொள்ளளவு 288.7 மில்லியன் கிலோகிராம் தொடக்கம் 0.07% வரையான வளர்ச்சியினை பதிவு செய்து 2017 ஆம் ஆண்டில் ஏற்றுமதிக்கு கொள்ளளவு 289.00 மில்லியன் கொள்ளளவு வரை அதிகரித்துக் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலைப் பொதிகள் 24.8 மில்லியன் கிலோகிராமிற்கு இணைவாக 2017 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலைப் பொதிகளின் மொத்தம் 23.5 மில்லியன் கிலோகிராம் என்பதுடன், அதற்கமைய 1.3 மில்லியன் கிலோகிராம் (5.4 ) தேயிலைப் பொதிகளின் அளவில் குறைவு பதிவாகியுள்ளது. 2017 ஆம் ஆண்டில் (1-3 கிலோகிராம்), (3-5 கிலோ கிராம்), (5-10 கிலோகிராம்) பொதிகளில் குறைவு அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் 185 பில்லியன் ரூபா ஏற்றுமதி உழைப்பு 2017 ஆம் ஆண்டில் 233.30 பில்லியன் ரூபா என மொத்தமாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அது 48.6 பில்லியன் ரூபா அல்லது 26.28% அதிகரிப்பாக காணப்படுவதுடன் ஒரு வருடத்திற்குள் அ.டொலருக்கு இணைவாக இலங்கை ரூபா 4.7% தினால் வீழ்ச்சியடைந்திருப்பதை மேற்பார்வை செய்ய முடிந்த இவ் இலாப நிலைமை முழுமையாக மாற்றம் பெற்றிருத்தது.
இலங்கைத் தேயிலை வகைகளில் பிரதான ஏற்றுமதிக் கேந்திர நிலையமாக துருக்கிக்கு 37.81 மில்லியன் கிலோகிராம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன், ஈராக் மற்றும் ரஷ்யா தொடராக இலங்கைத் தேயிலையை 35.03 மில்லியன் கிலோகிராம் மற்றும் 33.37 மில்லியன் கிலோகிராம் இறக்குமதி செய்துள்ளனர்.

**மீள் பயிர்ச் செய்கை மற்றும் தேயிலைக் கைத்தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல்.**

மானிய உதவியினை பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் இருந்தபோதிலும் தேயிலை மீள் செய்கைச் செயற்பாடுகள் மற்றும் தேயிலைக் கைத்தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தும் செயற்பாடுகளில் பாரிய முன்னேற்றங்களை எட்ட முடியவில்லை. தேயிலை உற்பத்தியில் இடம்பெற்ற வீழ்ச்சி காரணமாக மூலதனத்தை விருத்தி செய்வதற்காக போதியளவு நிதியத்தை வழங்க தேயிலைக் கைத்தொழில் தரப்பினரின் கொள்ளளவு மிகவும் வரையறுக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. மீள் பயிர்ச் செய்கைச் செயற்பாடுகளில் காணப்படும்

2017

தேவையற்ற தாமதங்கள் காரணமாக தேயிலைக் கைத்தொழிலின் நிலையான தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக அழுத்தங்கள் மேற்கொள்ளப் பட்டதுடன் இவ்வாறான பாரிய அழிவுகரமான நிலைமைகளை ஒழிப்பதற்காக தொடர்ந்தும் ஊக்குவிப்புக்கள் வழங்க வேண்டியதுடன் உற்பத்தியிலும் தெளிவான மேற்பார்வைகள் மேற்கொள்ள முடியுமான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட வேண்டும். சிறுதேயிலைத் தோட்டங்களில் தோட்ட உரிமையாளர்களினால் தற்போது பெற்றுக் கொள்ளும் 2/3 ஐ விட மேற்பட்ட உற்பத்தியுடன் தேயிலை மீள் செய்கை ஊக்குவிப்புக்களை மேற்கொள்வதற்காக நிதி ஊக்குவிப்புக்கள் அல்லது அரசாங்கச் செயற்பாடுகள் இன்மை பாரியளவில் கவனம் செலுத்த வேண்டிய பிரச்சினையாக காணப்படுகின்றது. மீள் செய்கைகளை மேற்கொள்ளும் செலவினம் ஒரு ஹெக்டேயருக்கு சுமார் 1.5 மில்லியன் ரூபா என்பதுடன், அது கற்கை ஆய்வு ரீதியிலான முதலீடாகும். தேசிய தேயிலைத் தோட்டங்களில் மீள் செய்கையினை மேற்கொள்வதனை இலக்காகக் கொள்ளப்பட்ட 2.5% தை அகற்றி மீள் செய்கையினை மேற்கொள்ள செலவிட வேண்டிய செலவினத்திற்காக வருடாந்தம் சுமார் 6 பில்லியன் ரூபா முதலீடுகளை மேற்கொள்வதற்கான கோரிக்கைகள் உருவாகியிருப்பதுடன் இது எட்ட முடியுமான முதலீடாகும்.

**உலகளாவிய வர்த்தகம்**

உலகளாவிய சந்தையில் “இலங்கைத் தேயிலையின் நாமம்” தொடர்ந்தும் விருத்தி செய்வதற்காக தேயிலை சபையின் உலகளாவிய சந்தைப்படுத்தல் திட்டத்தை விருத்தி செய்வது திட்டங்களில் காண்பிக்கப்படும் முன்னேற்றங்கள் மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் பொறுப்பேற்க முடிந்தது. மிகவும் பயன்மிக்க ஊடகச் செயற்பாட்டின் மூலம் வாடிக்கையாளர்களை எட்டுவதற்காக வியூகங்களை பயன்படுத்துவதை விட கூடிய கவனம் பிரதான செயற்பாடுகள் ஊடாக வர்த்தக விற்பனைக் கூடங்கள் மற்றும் கண்காட்சிகளுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான வர்த்தகச் செயற்பாடுளை மேற்கொள்ள கூடுதலான திட்டங்கள் வகுக்கப்பட்ட போதிலும் 2017 ஆம் ஆண்டில் முன்னேற்றத்தை எட்ட முடியுவில்லை. ஆண்டின் இறுதியில் ஊடகத் திட்டமிடல்கள் மற்றும் வர்த்தக நேர அட்டவணைகளை வகுப்பதற்காக விளம்பர முகவர்களை தேர்ந்தெடுக்கும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. உலகளாவிய விளம்பரச் செயற்பாடுகள் 2018 செப்ரெம்பர் மாதத்தில் அமுல்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

**இலங்கைத் தேயிலைக் கைத்தொழிலை நிலைப்படுத்தல்.**

உலகளாவிய தேயிலைத் துறையில் அதிஉண்ணத நிலையைக் கொண்ட தேயிலை உற்பத்தி செய்யும் பிரதான தேயிலை உற்பத்தியாளராக இலங்கை நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் உலகளாவிய ரீதியில் போட்டிகரமான நிலைமைகள் கிரமமாக குறைவடைந்து செல்கின்றது. சிறந்த இலங்கைத் தேயிலை வகைகளின் அதிஉயரிய சுவையும் அதி தூய்மையும், விஞ்ஞான ரீதியிலான உற்பத்தி தொடர்பிலும் நுகர்வோருக்கிடையே பிரபல்யப்படுத்துவதன் மூலம் தேயிலை சார்ந்த பிரச்சினைகளுக்காக தேயிலை சபையினால் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

2017

கருந்தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளுக்கிடையே இரண்டாவது இடத்தில் இலங்கை காணப்படுகின்றது. (ஏற்றுமதி கொள்ளளவு தொடர்பில்) தூய பெறுமதிக்கமைய உள்நாட்டில் உயரிய ஏற்றுமதி வருமானத்தை ஈட்டுவதாக தேயிலைக் கைத்தொழில் மாற்றமடைந்துள்ளது. ஏற்றுமதி செய்யும் நாடுகளில் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக்காக தேயிலையை நுகரும் நாடுகளில் உயரிய கவர்ச்சியினை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் கூடுதலாக இடம்பெறுவதினால் இவ் வெற்றிக்காக தொடர்ந்தும் பங்களிப்புச் செய்யக்கூடிய காரணியாக அமைவது ஏற்றுமதியின் போது பெறுமதியினை சேர்ப்பதாகும்.

**சவால்கள்**

பச்சைத் தேயிலை மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை ஆகிய இரு வகைகளினதும் பண்புசார் தரத்தை விருத்தி செய்தல் "இலங்கை" இன் அடையாளத்திற்கான பிரபல்யத்தை மேம்படுத்தல், அதிகரித்துச் செல்லும் உற்பத்தி விலையைக் கட்டுப்படுத்தல் மற்றும் காலநிலைப் பேரழிவுகளுக்கு பயன்மிக்கதாக வரவேற்பு வழங்குவதற்காகவும் வியூகங்களை வகுப்பதற்கமைய தேயிலைக் கைத்தொழிலின் எதிர்கால நீடித்த நிலையான தன்மை தீர்மானிக்கப்படுகின்றது. ஆராய்ச்சிகளுக்காக மிகச் சிறிய மட்டத்தில் நிதி முதலீடுகளை மேற்காள்வதன் மூலம் முன்னேற்றங்கள், விசேடமாக இறுதிவரையுள்ள சவால்களை வெற்றி கொள்வதற்கான வாய்ப்புக்கள் தடைப்பட்டுள்ளன. செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளின் சிரமங்களுக்கமைய எமது இலக்காகக் கொள்ளப்பட்ட சந்தை மற்றும் டிஜிட்டல் ஊடகம் ஆகிய இரு வகைகளினதும் துரித மாற்றங்களுக்காக மானிச் செயற்பாடுகள் இலக்காகக் கொள்ளப்பட்ட பயன்மிக்க உலகளாவிய ஊக்குவிப்புத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தேயிலை சபையின் இயலுமை உயரிய மட்டத்தில் கருத்து முரன்பாடுகளுக்குட்பட்டுள்ளன.

**நன்றியுரை**

அப்போதைய தலைவராக கலாநிதி றொகான் பெத்தயாகொட அவர்கள், பணிப்பாளர் சபை மற்றும் இலங்கைத் தேயிலை சபையின் பணியாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் உட்பட பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கௌரவ அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் செயலாளரினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் 2017 ஆம் ஆண்டில் தேயிலைக் கைத்தொழில் தொடர்பில் பதிவாகிய முன்னேற்றங்களை எட்டுவதற்கு பயன்மிக்கதாக அமைந்தாக குறிப்பிடுகிறேன்.

அப்போதைய தலைவர், பணிப்பாளர் சபை மற்றும் இலங்கைத் தேயிலை சபையின் பணியாளர் சபையின் பாரிய ஒத்துழைப்பிற்காக நன்றி தெரிவிக்க இதனை வாய்ப்பாகக் கொள்கிறேன். எதிர்வரும் ஆண்டுகளிலும் தேயிலைக் கைத்தொழிலின் அனைத்து தரப்பினர்களுடனும் மிகுந்த நெருக்கமான முறையில் செயற்பட நான் எதிர்பார்க்கிறேன்.



லுசில்லே விஜேவர்தன
தலைவர்
இலங்கை தேயிலை சபை

# அடிப்படை ஒப்பீட்டுச் சுட்டிகள்

| வகைகள் | அலகு | 2015 | 2016 | 2017 | ஒப்பீடு 2016மற்றும் 2017 (%) |
|---|---|---|---|---|---|
| **தேயிலை உற்பத்தி** | | | | | |
| **மொத்தத் தேயிலை உற்பத்தி** | (மில்.கி.கி) | 328.8 | 292.6 | 307.71 | 5.16 |
| **கடல்மட்டத்திலிருந்து உயரத்திற்கமைய வகைப்படுத்தல்** | | | | | |
| உயர் | | 75.4 | 64.4 | 64.64 | 0.37 |
| மத்தி | (மில்.கி.கி) | 51 | 44.5 | 45.65 | 2.58 |
| தாழ் | | 202.4 | 183.6 | 197.42 | 7.53 |
| **செயற்பாட்டு முறைகளுக்கமைய வகைப்படுத்தல்** | | | | | |
| சம்பிரதாய தேயிலை (உயிரியல், தொழில் நுட்பம், மீளப் பெற்றுக் கொண்ட) | (மில்.கி.கி) | 306.4 | 271.9 | 283.25 | 4.17 |
| சி.ரி.சி. தேயிலை | | 19.5 | 18.3 | 21.81 | 19.18 |
| பச்சைத் தேயிலை | | 2.9 | 2.4 | 2.66 | 10.83 |
| **தேயிலை விற்பனை** | | | | | |
| **தேயிலை விற்பனை - அளவு அடிப்படையில்** | | 306 | 276.3 | 294.69 | 6.66 |
| உயர் | (மில்.கி.கி) | 67.1 | 55.8 | 47.03 | (15.72) |
| மத்தி | | 48.1 | 43.9 | 191.03 | 335.15 |
| தாழ் | | 190.8 | 176.5 | 294.69 | 66.96 |
| **தேயிலை சந்தைப்படுத்தல் - பிரிவு** | | 403.8 | 466.4 | 617.17 | 32.33 |
| உயர் | | 396.3 | 442.7 | 597.81 | 35.04 |
| மத்தி | (ரூபா.கி.கி) | 360 | 414.9 | 560.5 | 35.09 |
| தாழ் | | 417.5 | 486.8 | 636.86 | 30.83 |
| **தேயிலை ஏற்றுமதி** | | | | | |
| **தேயிலை ஏற்றுமதி - அளவு மீள் ஏற்றுமதியை தவிர** | (மில்.கி.கி) | 298.9 | 280.9 | 278.2 | (0.96) |
| **பிரிவுகளுக்கமைய வகைப்படுத்தல்** | | | | | |
| கருந்தேயிலை | | 294.4 | 276.4 | 273.7 | (0.99) |
| பச்சைத் தேயிலை | (மில்.கி.கி) | 2.4 | 2.4 | 2.4 | 0.10 |
| திடீர் தேயிலை | | 2.1 | 2 | 2.1 | 5.99 |
| **தேயிலை ஏற்றுமதி - பெறுமதிக்கமைய (மீள் ஏற்றுமதியைத் தவிர)** | (ரூபா. பில்) | 174.3 | 176.2 | 222.4 | 26.21 |
| **மொத்தத் தேயிலை ஏற்றுமதி - அளவு அடிப்படையில்** | (மில்.கி.கி) | 306.9 | 288.8 | 289.0 | 0.06 |
| **மொத்தத் தேயிலை ஏற்றுமதி - பெறுமதிக்கமைய (மீள் ஏற்றுமதி)** | (ரூபா. பில்) | 182 | 184.8 | 233.3 | 26.27 |

# 01 கூட்டிணைப் பின்புலம்

1985 இலக்கம் 17, 1990 இலக்கம் 44, 2003 இலக்கம் 29 மற்றும் 2006 இலக்கம் 44 கொண்ட சட்டங்களினால் மறுசீரமைக்கப்பட்ட 1975 இலக்கம் 14 கொண்ட இலங்கை தேயிலை சபைச் சட்டத்தின் கீழ் 1976 ஜனவரி 01 ஆம் திகதி இலங்கை தேயிலை சபை தாபிக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் இலங்கை தேயிலை சபையின் நோக்கமாக அமைவது இலங்கையில் தேயிலைக் கைத்தொழிலை விருத்தி செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், இலங்கைத் தேயிலையை கோளமய ரீதியில் (Ceylon Tea) ஊக்குவிப்பதாகும். தேயிலை சபையைத் தாபிக்க முன்னர் தனியார் துறையினால் முன்னெடுக்கப்பட்டது தேயிலை பிரச்சார சபையாகும். 1976 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் தேயிலை பிரச்சார சபை ஒழிக்கப்பட்டு தேயிலைக் கைத்தொழிலுக்குரியதான அதிகாரங்களை கொண்டதாக இலங்கைத் தேயிலை சபை தாபிக்கப்பட்டது.

உற்பத்தி, புதிதாகப் பயிரிடல், மீள் பயிரிடல், பழைய தேயிலைத் தோட்டங்களை மீள் கட்டமைத்தல், கைத்தொழிற்சாலைகளைத் தாபித்தல் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் போன்றவைகள் தேயிலைக் கைத்தொழிலுக்குரிய பணிகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பினையும் கொண்ட அதிகார சபை இலங்கை தேயிலை சபையாகும்.
விற்பனை செய்யும் சந்தர்ப்பங்களில் தேயிலையின் தரத்தினை மேற்பார்வை செய்தல், ஏற்றுமதிக்கு முன்னர் தேயிலை மேற்பார்வை, தரகர்களின் தேயிலை கலப்பு செயற்பாடுகளில் மற்றும் ஏற்றுமதியாளர்களின் களஞ்சியசாலைகளை பரிசோதனை செய்தல் மற்றும் சுகாதார பாதுகாப்பு மிகுந்ததாக தேயிலை கலப்பு மற்றும் பொதியிடல் தொடர்பான ஆலோசனை சேவைகளை வழங்குதல் ஆகிய பணிகள் தொடர்பாகவும் இலங்கைத் தேயிலை சபையினால் முன்னெடுக்கக்கூடிய செயற்பாடுகளாகும். இதற்கு மேலதிகமாக தேயிலைத் தோட்ட முகாமைத்துவம் மற்றும் தேயிலை உற்பத்தி உட்பட விற்பனையில் ஈடுபட்டுள்ள சகல நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களை மேற்பார்வை செய்தல், நிர்வாகித்தல் மற்றும் வழிநடத்தல்களும் இலங்கை தேயிலை சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

உலகளாவிய தேயிலைத் தேவையினை நிவர்த்தி செய்யும் வகையில் அமுலில் உள்ள சட்டங்கள் மற்றும் கோவைகளை அணிதிரட்டுவதற்காக கைத்தொழில் தேவைகளுக்கு அமைவானவாறு செயற்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேற்பார்வைப் பணிகள், அபிவிருத்திச் செயற்பாடுகள், இலங்கை தேயிலை உள்நாட்டை போன்ற சர்வதேச ரீதியில் ஊக்கவிப்பத்றகாகுர்யதாக சகல விடயங்கள் தொடர்பிலான நிருவாகச் செயற்பாடுகள் தேயிலை சபையினால் முன்னெடுக்கப்படுகின்றது. இலங்கை தேயிலை சபை விசேடமாக உற்பத்தி மற்றும் தரத்தை உறுதிப்படுத்தல், உள்நாட்டு தேயிலையினை விநியோகித்தல் மற்றும் ஏற்றுமதியைப் போன்று வெளிநாட்டு ஊக்குவிப்புச் செயற்பாடுகள் தொடர்பில் தமது மேற்பார்வைப் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்கின்றது. கைத்தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக மானிய உதவி மேற்பார்வைக்குட்படுத்தல் மற்றும் தேயிலை வகைகளின் தரத்தினை உறுதிப்படுத்துவது தொடர்பான கொள்கைகளை வகுத்தல் மற்றும் அமுல்படுத்துவது போன்றன அபிவிருத்திப் பணியில் உள்ளடங்கியுள்ளன. ஊக்குவிப்புச் செயற்பாடுகளாக தேயிலை சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்புப் பணிகளை மேற்பார்வை செய்தல், தேயிலை தொடர்பிலான புள்ளிவிபரங்களைச் சேகரித்தல் உட்பட விளக்கமளித்தல் போன்றவைகள் தொடர்பிலும் பொறுப்புக் கூறப்படுகின்றது.

# இலங்கைத் தேயிலைச் சபைக் கட்டமைப்பு

1.1 பிரதான செயலக அலுவலகம

தேயிலைக் கைத்தொழில் துறையினை மேற்பார்வை செய்தல், அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்பதற் குரிய சகல பணிகள் உட்பட சபையின் நிருவாக மற்றும் நிதிச் செயற்பாடுகள் தொடர்பிலான முழுமையான மேற்பார்வைகள் தொடர்பில் உரிய பணிகளை முன்னெடுப்பது பிரதான செயலக அலுவலகத்தின் பொறுப்பாகும். நிர்வாகம், நிதி, மேற்பார்வை, ஊக்குவிப்பு, அபிவிருத்தி, புள்ளிவிபரவியல், உள்ளகக் கணக்காய்வு, செயலக அலுவலகம், தேயிலை சுய பரிட்சிப்பு, பகுப்பாய்வு இரசாயண கூடம், தகவல் தொழில்நுட்பம் உட்பட நூலகம் ஆகிய பல்வேறுபட்ட பிரிவுகள் மூலம் துணை நிலைச் சேவைகளாக முகாமைத்துவப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1.2 நிருவாகப் பிரிவு

**மானிட வள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி, பெறுகை உட்பட களஞ்சியசாலை பராமரிப்புச் செயற்பாடுகள், உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி மற்றும் போக்குவரத்துச் செயற்பாடுகள் தொடர்பிலான முழுமையான பொறுப்புக்கள் உதவிப் பணிப்பாளர் நாயகம் (நிருவாகம்) இன் கீழ் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.**

1.3 நிதிப் பகுப்பாய்வு

இலங்கைத் தேயிலைச் சபையின் ஒட்டுமொத்த நிதி ரீதியான கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றுக்கு நிதிப் பிரிவு பொறுப்பாகவிருக்கும். நிதிப் பிரிவின் ஏனைய பிரதான செயற்பாடுகளாக சபையின் நிதி ரீதியான கொள்கை உருவாக்கங்கள் தொடர்பான விதப்புரைகள், வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை தயார்செய்தல், வருடாந்த நிதி ரீதியான கூற்றுக்கள், மாதாந்த கணக்குகள், குறிப்பிட்ட காலப்பகுதிக்கொருமுறை வெளியிடப்படும் அறிக்கைகள், இருப்புக்களை பேணுதல், வருடாந்த உறுதிப்படுத்தல்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வருடாந்த கணக்குகளைச் சமர்ப்பித்தல்.

## 1.4 தேயிலை ஆணையாளர் பிரிவு

தேயிலைப் பயிர்ச் செய்கை, உற்பத்தி, பண்புசார் விருத்திக்குரிய மேற்பார்வைப் பணிகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட சகல பணிகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக 07 பிராந்திய அலுவலகங்களைக் கொண்ட வலையமைப்பு இப்பிரிவின் கீழ் செயற்படுகின்றது.

அதற்கு மேலதிகமாக முடிவுத் தேயிலையினை வெளியேற்றுதல், களஞ்சியப்படுத்தல், பொதியிடல், தேயிலை ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்குரிய மேற்பார்வைகள் உட்பட அது தொடர்பான சகல செயற்பாடுகள் தொடர்பிலும் தேயிலை ஆணையாளர் பிரிவின் கீழ் செயற்படும் தேயிலை ஏற்றுமதிப் பிரிவின் பொறுப்பாக அமைந்துள்ளது.

## 1.5 தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு

வெளிநாட்டு அலுவலகங்களின் ஒத்துழைப்புடன் இலங்கைத் தேயிலையினை உள்நாட்டைப் போன்று சர்வதேச ரீதியில் ஊக்குவித்தல் மற்றும் அதனுடன் தொடர்பான சகல பொறுப்புக்களும் இப்பிரிவினால் வகிக்கப்படுகின்றன. மேலும் கைத்தொழிலின் கோரிக்கைக்கமைய சந்தை தொடர்பான அறிவினையும் இப்பிரிவினால் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. உள்நாட்டு கொள்வனவாளர்களைப் போன்று வெளிநாட்டவர்களுக்கும் பயன்மிக்கதான தேயிலை விற்பனைக் கூடங்கள் இப்பிரிவின் கீழ் செயற்படுகின்றன.

தேயிலை சுவைப் பரீட்சிப்பாளர்களைக் கொண்டு சுயாதீன குழு மூலம் குறைந்தபட்சம் பண்புசார் தரம், சிங்க இலட்சினையின் கீழ் உரிய தரம் தொடர்பாக பரிசோதனை செய்வதனைப் போன்று ஏனைய தேயிலை வகை தொடர்பாகவும் பரிசோதனை செய்யும் பொறுப்பு தேயிலை உக்குவிப்புப் பிரிவின் கீழ் செயற்படும் தேயிலை செயற்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் ஊடக பிரச்சாரப் பணிகளை மேற்கொள்ளல், வெளிநாடுகளில் இலங்கை தூதுசபையின் சேவைகளுக்கு இணைக்கப்பட்டுள்ள தேயிலை ஊக்குவிப்பு அலுவலகம் மற்றும் வர்த்தக அலுவலகங்களின் உதவியுடன் சர்வதேச உணவுப் பாண சந்தைகளில் பங்கேற்றல், உரித்தான நாமத்தை ஊக்குவித்தல் மற்றும் வகை ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களில் பங்கேற்றல் போன்றன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகும். சர்வதேச தேயிலை சங்கங்கள் மற்றும் தொழிற்சாலைகள் தேயிலை தொடர்பான சர்வதேச இராட்சியக் குழுவுடன் தொடர்புபட்ட செயற்படுவது இக்குழுவினால் மேற்கொள்ளப்படும்

## 1.6 பகுப்பாய்வு பரிசோதனைப் பிரிவு

தேயிலையின் தரத்தைப் பேணும் வகையில் உயர் தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி தேயிலையின் இரசாயணம், நுண்ணுயிரியல் விஞ்ஞான மற்றும் கிருமிநாசினிகளின் நிலைமைகள் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்ளல் மற்றும் தரச்சான்றிதழ்களை வழங்குதல் இப்பிரிவின் பொறுப்பாகும். இதற்கமைய சகல பிரிவுகளிலும் பண்புசார் தரத்தினை உறுதிப்படுத்தல் தொடர்பில் தனிப்பட்ட ரீதியில் தமது பங்களிப்புக்கள் வழங்கப்படுவதுடன் இதன் மூலம் “இலங்கைத் தேயிலை” என்ற நாமத்தை பாதுகாப்பதற்கான உதவிகள் வழங்கப்படுகின்றன.

# 02 கைத்தொழிலின் பக்கத்தோற்றம

2017 ஆம் ஆண்டில் கைத்தொழில் துறை தொடர்பில் ஓரளவு சாதகமான நிலைமைகள் காண்பிக்கப்பட்ட போதிலும் இவ்வாண்டில் தேயிலைக் கைத்தொழிலுக்கான சிறந்த ஆண்டுகளில் ஒன்றாக வரலாற்றில் இடம்பிடித்துள்ளது. துரதிஸ்டவசமாக இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலுக்கு இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பாதக விளைவுகளை எதிர் கொள்ள வேண்டி ஏற்பட்டது. ஜனவரி மாதம் ஆரம்பமாக வறட்சி மார்ச் மற்றும் ஏப்ரல் மாதம் வரை நீடித்தது. மே மாதம் இறுதியளவில் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்குகள் காரணமாக அரை மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் பெரும் பாதிப்புக்குட்பட்டனர். தேயிலைச் செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்களிலேயே கூடுதலான பாதிப்புக்கள் பதிவாகின. 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 292.6 மில்லியன் அளவை விட 15 கிலோ மில்லியன் அதிகரிப்புக் கொண்டதாக 2017 ஆம் ஆண்டில் தேசிய தேயிலை உற்பத்தி 307.7 மில்லியன் கிலோவாகப் பதிவாகியது.

இது எவ்வாறாக இருப்பினும் கடந்த ஆண்டை விட 2017 ஆம் ஆண்டில் விற்பனை விலை கூடுதலான பெறுமதியைக் காண்பித்தது. கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் விற்பனை விலை அதிகரிக்கும் அளவு காண்பிக்கப்பட்டதுடன் அது குறைந்தபட்ச சாதாரண பெறுமதி 590.48 ரூபா மற்றும் உயர்ந்த பட்ச சாதாரண பெறுமதி ரூபா 648.30 ரூபாவாகக் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ஏற்றுமதி மூலம் உழைத்த வருமானம் அதிகரிக்கும் முன்னேற்றகரமான நிலைமை (26.28%) இவ்வாண்டில் காண்பிக்கப்பட்டது.

## 2.1 தேயிலைக் காணியின் பரம்பல

தற்போது இலங்கையில் தேயிலை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள மொத்தக் காணியின் அளவு 202,540 ஹெக்டேயர் ஆகும். (தற்காலிகமான) இத் தேயிலைத் தோட்டங்கள் அவற்றின் முகாமைத்துவ ஒப்பளவுகளுக்கமைய (60%) தனியார் துறையினர் மற்றும் (40%) அரச துறையினர் என பகிர முடியும். தேயிலை சபையின் பரம்பல் விரிவடைந்திருப்பது நாட்டின் ஒரு சில மாவட்டங்களில் மாத்திரமமாகும். விசேடமாக தேயிலை செய்கைக்காக பொருத்தமான காலநிலையை அடிப்படையாகக் கொண்ட பிரதேசங்களிலேயே தேயிலை செய்கைகள் கூடுதலாக விரிவடைந்து காணப்படுகின்றது.

## 2.2 தேசிய தேயிலை உற்பத்தி

அட்டவணை 2.1 : மொத்த தேயிலை உற்பத்தி பூமியின் உயரத்திற்கமைய (Elevation - 2017)

| உயர அளவு | உற்பத்தி (கி.கிராம்) |
|---|---|
| உயர் | 64,643,597 |
| மத்திய | 45,654,592 |
| தாழ் | 197,421,616 |
| **மொத்தம்** | **307,719,805** |

மூலம்: இலங்கை தேயிலை சபை

தேசிய தேயிலை உற்பத்தி 15 மில்லியன் கிலோ அதிகரிப்புடன் 307.7 மில்லியன் கிலோவாக பதிவாகியது 2016 ஆம் ஆண்டுக்கு இணைவாக இது 5% அதிகரிப்பாகும்.

இலங்கை கடல் மட்டத்திலிருந்து பூமியின் பல்வேறுபட்ட உயர மட்டங்களில் (Elevations) தேயிலை செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் கூடுதலான அளவு தாழ் நிலப் பிரதேசங்களிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது. கடல் மட்டத்திலிருந்து 600 மீற்றர் பரப்பிற்குள் உயர் நிலப்பரப்பு மட்டங்களில் செய்கை மேற்கொள்ளும் இந்தத் தேயிலை பிரதானமாக பல்வேறுபட்ட சுவை மற்றும் கடுமையான நிறத்தைக் கொண்டு காணப்படும்.

மலையகத் தேயிலை 1200 மீற்றரை விட உயர்ந்த நிலப்பிரப்பில் செய்கை மேற்கொள்ளப்படுவதுடன் பொதுவாக அவை அதிசிறந்த சுவை மற்றும் நறுமனத்தை கொண்ட உயர் தரத்திலான தேயிலையாகக் காணப்படுகின்றது.

உயரிய வருமான மட்டம் மற்றும் கேள்விகள் அதிகரிப்பதனைக் காரணமாக கொண்டு சமீபகாலத்தில் தாழ்நில தேயிலை உற்பத்தியில் அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது. தாழ் நில தேயிலை உற்பத்தி தேசிய தேயிலை உற்பத்தியில் மூன்றில் இரண்டு (64%) தை விடக் கூடுதலான அளவு பங்களிப்பு செய்துள்ளது. மலையக மற்றும் மத்திய பிரதேச தேயிலை உற்பத்தி தொடராக 21% தினால் மற்றும் 15% தினால் தேசிய தேயிலை உற்பத்திக்குப் பங்களிப்பு செய்துள்ளது.

### 2.2.1 மாதாந்தத் தேயிலை உற்பத்தி

ஆண்டு பூராகவும் சகல மாதங்களிலும் தாழ் நிலத் தேயிலை உற்பத்தி மூலம் தேசிய தேயிலை உற்பத்திக்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்புக்கள் கிடைக்கப்பெற்றன. இவ்வாண்டில் உயரிய மாதாந்தத் தேயிலை உற்பத்தி 32.9 மில்லியன் கிலோகிராம் என்ற அடிப்படையில் ஏப்ரல் மாதத்திற்குள் அறிக்கைப்படுத்தப்பட்டதுடன் குறைந்தபட்சம் பெப்ரவரி மாதத்தில் 18.6 மில்லியன் கிலோகிரமாகப் பதிவாகியது. கடந்த ஆண்டில் மற்றும் இவ்வாண்டில் குறைந்தபட்ச மாதாந்த தேயிலை உற்பத்தி 18 மில்லியன் கிலோகிராமைத் தாண்டியுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் 2017 ஆம் ஆண்டு திரண்ட உற்பத்தி 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 5.16% வளர்ச்சி பதிவாகியுள்ளது.

வரைபடம் 2.1 : மாதாந்தத் தேயிலை உற்பத்தி நிலத்தின் உயர அடிப்படையில் (Elevation)




### 2.2.2 விவசாயக் காலநிலை மாவட்டங்களுக்கமைய பகுப்பாய்வு

இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய இரு மாவட்டங்கள் தொடராக தேயிலை கிலோ மில்லியன் 54.7, 46.2 மில்லியன் கிலோ கிராமை உற்பத்தி செய்து தொடராக விவசாயக் காலநிலை மாவட்டங்களுக்கமைய தேயிலை உற்பத்திப் பட்டியலில் உயர்ந்த இடத்தில் தொடர்ந்தும் நிலையாக காணப்படுகின்றன. 2016 ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ஏனைய விவசாய வலயங்களை விட ஊவா, மத்தி, தாழ் நில வலயங்களில் உற்பத்தி அதிகரித்துள்ளதுடன் ஏனைய வலயங்களில் பின்னடைவுகள் பதிவாகியுள்ளன. தாழ் நில மொத்த உற்பத்தி 183 மில்லியன் கிலோகிராம் என்பதுடன் இது ஆண்டின் வருடாந்த அதிகரிப்பு விகிதாசாரம் 7.41% மாக பதிவாகியுள்ளது.

அட்டவணை 2.2 : விவசாயக் காலநிலை மாவட்டங்களுக்கமைய தேயிலை உற்பத்தி

| விவசாயக் காலநிலைக்கமைய மாவட்டங்கள் | ஜனவரி - டிசம்பர் | | | |
|---|---|---|---|---|
| | 2017 (கிலோகிராம்) | 2016 (கிலோ.கிராம்) | வித்தியாசம் | % |
| நுவரெலியா | **3,975** | **5,076** | **(1,101)** | **(21.69)** |
| மேற்கு | | | | |
| றம்போடை | 1,372 | 1,625 | **(253)** | **(15.58)** |
| பூண்டுலோயா | 3,343 | 3,426 | **(84)** | **(2.44)** |
| அக்கரபத்தான | 6,111 | 5,948 | **163** | **2.75** |
| நானுஓயா / லிந்புல / தலவாக்கல | 8,027 | 8,295 | **(268)** | **(3.23)** |
| பதான / கொடகல | 4,380 | 4,513 | **(133)** | **(2.94)** |
| ஹட்டன் / டிக்கோயா | 7,134 | 7,004 | **130** | **1.85** |
| பொகவந்தலாவ | 5,602 | 5,912 | **(310)** | **(5.25)** |
| உயர்/ மஸ்கெலிய | 5,839 | 5,808 | **31** | **0.53** |
| **மொத்தம் - மேற்கு** | **41,807** | **42,531** | **(724)** | **(1.70)** |
| **மத்திய** | | | | |
| வட்டவல / கினிகத்தென / நோர்ட்ன்பிரிஜ் | 1,568 | 1,829 | **(262)** | **(14.30)** |
| புஸ்ஸல்லாவ / ஹேவஹட | 6,773 | 6,299 | **474** | **7.53** |
| கொத்மலை | 803 | 841 | **(38)** | **(4.47)** |
| கம்பஹா / நாவலப்பிட்டிய / தொலஸ்பகே | 15,090 | 14,603 | **488** | **3.34** |
| நிலம்பே / ஹந்தான / கலஹா | 1,490 | 1,387 | **103** | **7.44** |
| கடுகண்ணாவ | 6,736 | 6,776 | **(40)** | **(0.59)** |
| மடுல்கலே / நோக்கில்ஸ் / றங்கல | 3,681 | 3,940 | **(259)** | **(6.57)** |
| ஹுன்னஸ்கிரி / மாத்தளை / யாதொஸ்ஸ | 980 | 1,257 | **(277)** | **(22.02)** |
| பலாங்கொட / றக்வான | 7,984 | 7,369 | **615** | **8.35** |
| **மொத்தம் - மத்திய** | **45,107** | **44,301** | **806** | **1.82** |
| **உடபுஸ்ஸல்லாவ** | | | | |
| உடபுஸ்ஸல்லாவ / ஹலகரனோஓபா | 4,375 | 4,186 | **189** | **4.51** |
| மதுரட்ட | 1,250 | 1,519 | **(269)** | **(17.70)** |
| **மொத்தம் - உடபுஸ்ஸல்லாவ** | **5,625** | **5,705** | **(80)** | **(1.40)** |
| **ஊவா** | | | | |
| கொஸ்லந்த / கல்துமுல்ல | 698 | 747 | **(49)** | **(6.60)** |
| ஹப்புதள | 3,508 | 3,424 | **84** | **2.44** |
| பண்டாரவெல / பூனகல்ல | 3,505 | 2,823 | **682** | **24.16** |
| மல்வத்த / வெலிமட | 2,839 | 1,887 | **952** | **50.47** |
| தேமோதற / ஹாலிஎல்ல / பதுளை | 9,372 | 8,055 | **1,317** | **16.35** |
| எல்ல / நமுனுகல | 1,633 | 1,459 | **174** | **11.91** |
| பஸ்சற / லுனுகல்ல | 3,216 | 2,795 | **421** | **15.07** |
| மடுல்சீம | 2,850 | 2,852 | **(2)** | **(0.07)** |
| **மொத்தம் - ஊவா** | **27,620** | **24,042** | **3,578** | **14.88** |
| **தாழ் நிலங்கள்** | | | | |
| தெனியாய | 15,547 | 13,498 | **2,049** | **15.18** |
| காலி | 46,222 | 43,396 | **2,826** | **6.51** |
| களுத்துறை | 21,928 | 19,926 | **2,003** | **10.05** |
| கேகாலை | 5,331 | 4,895 | **436** | **8.90** |
| களணிவெலி | 7,574 | 7,176 | **398** | **5.54** |
| கண்டி/மாத்தளை/குருநாகல் | 4,941 | 5,238 | **(297)** | **(5.66)** |
| மாத்தறை | 15,905 | 13,894 | **2,011** | **14.47** |
| மொறவக | 6,464 | 6,260 | **204** | **3.25** |
| இரத்தினபுரி | 54,674 | 51,958 | **2,716** | **5.23** |
| பலாங்கொட | 5,001 | 4,677 | **324** | **6.93** |
| **தாழ் நிலங்களின் மொத்தம்** | **183,587** | **170,919** | **12,668** | **7.41** |
| **மொத்தம்** | **307,720** | **292,574** | **15,146** | **5.18** |

*சரிபார்க்கப்பட்ட

மூலம் : இலங்கை தேயிலை சபை

### 2.2.3 மாவட்டங்களுக்கமைய தேயிலை உற்பத்தி

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டிற்குள் மலைய தேயிலை உற்பத்தியில் நுவரெலியா மாவட்டம் உயரிய மட்டத்திலும், தாழ் நிலத் தேயிலை உற்பத்தியில் உயரிய மட்டம் இரத்தினபுரி மாவட்டத்திலும் பதிவாகியுள்ளது. உயர், மத்தி மற்றும் தாழ் நிலம் ஆகிய 03 மட்டங்களிலும் உயர் மட்ட உற்பத்தி இரத்தினபுரி மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன், குறைந்தபட்ச உற்பத்தி ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.

அட்டவணை 2.3 : மாவட்டங்களுக்கமைய தேயிலை உற்பத்தி (கிலோகிராமில்)

| மாவட்டம் | உயர் | மத்தி | தாழ் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பதுளை | 15,369,508 | 12,745,281 | - | 28,114,789 |
| கொழும்பு | - | - | 784,544 | 784,544 |
| காலி | - | - | 45,731,635 | 45,731,635 |
| ஹம்பாந்தோட்டை | - | - | 186,320 | 186,320 |
| களுத்துறை | - | - | 20,405,737 | 20,405,737 |
| கண்டி | 812,386 | 19,944,989 | 12,778,091 | 33,535,466 |
| கேகாலை | 433,754 | - | 8,670,242 | 9,103,996 |
| மாத்தளை | | 1,002,778 | 375,540 | 1,378,318 |
| மாத்தறை | - | 249,850 | 38,495,207 | 38,745,057 |
| நுவரெலியா | 48,020,141 | 9,762,558 | 735,233 | 58,517,931 |
| இரத்தினபுரி | 7,808 | 1,949,138 | 69,259,067 | 71,216,013 |
| மொத்தம் | 64,643,597 | 45,654,592 | 197,421,616 | 307,719,805 |

### 2.2.4 பச்சைக் கொழுந்துத் தேயிலை சேகரிப்பு முறைகளுக்கமைய உற்பத்திப் பகுப்பாய்வு

தேயிலைக் கைத்தொழிற்சாலை ஒன்றின் மொத்தத் தேயிலை உற்பத்திக்காக தமது தோட்டங்களிலிருந்து, வேறு தோட்டங்களிலிருந்து பெற்றுக் கொண்ட கொழுந்து போன்று விநியோகஸ்தர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் தேயிலைக் கொழுந்து பயன்படுத்தப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டில் மொத்த தேயிலை உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட பச்சைத் தேயிலைக் கொழுந்தின் அளவு அவ்வவ் மாவட்டங்களுக்கமைய சேகரிப்பு புள்ளிவிபரங்கள் கீழ்க் குறிப்பிட்ட அட்டவணை மூலம் காண்பிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.4 : மாவட்டங்களுக்கமைய பச்சைத் தேயிலை உற்பத்தி (கிலோகிராமில்)

| நிர்வாக மாவட்டம் | தமது செய்கையின் மூலம் தேயிலை தோட்டங்களிலிருந்து பெற்ற கொழுந்து | ஏனைய தோட்டங்களிலிருந்து பெற்றுக் கொண்ட கொழுந்து | கொள்வனவு செய்யப்பட்ட கொழுந்து | மொத்த உற்பத்தி |
|---|---|---|---|---|
| பதுளை | 48,834,887 | 30,440,600 | 51,458,280 | **130,733,767** |
| கொழும்பு | - | 175,458 | 3,472,671 | **3,648,130** |
| காலி | 3,542,113 | 1,612,808 | 207,497,180 | **212,652,102** |
| ஹம்பாந்தோட்டை | - | - | 866,388 | **866,388** |
| களுத்துறை | 2,178,104 | 225,962 | 92,482,609 | **94,886,676** |
| கண்டி | 19,246,344 | 5,628,632 | 131,064,942 | **155,939,918** |
| கேகாலை | 4,055,747 | 1,137,788 | 37,140,048 | **42,333,583** |
| மாத்தளை | 894,018 | 83,781 | 5,431,377 | **6,409,176** |
| மாத்தறை | 7,651,369 | 2,064,337 | 170,448,808 | **180,164,514** |
| மொனராகலை | - | - | - | - |
| நுவரெலியா | 175,903,573 | 40,914,048 | 55,290,760 | **272,108,381** |
| இரத்தினபுரி | 21,238,071 | 5,438,094 | 304,478,294 | **331,154,459** |
| **மொத்தம்** | **283,544,226** | **87,721,508** | **1,059,631,358** | **1,430,897,093** |

### 2.2.5 தேயிலை உற்பத்தி முறைமைக்கமைய உற்பத்திப் பகுப்பாய்வு

#### 2.2.5.1 கருந்தேயிலை மற்றும் பச்சைத் தேயிலை உற்பத்தி

2016 ஆம் ஆண்டுக்கு இணைவாக 2017 ஆம் ஆண்டில் சம்பிரதாய தேயிலை உற்பத்தி 4.19% (11,378,536 கிலோகிராம்) இனால் அதிகரிப்பு பதிவாகியுள்ளதுடன், தேயிலை உற்பத்தியும் 18.99% தினால் அதிகரித்துள்ளது. மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் மொத்தக் கருந்தேயிலை உற்பத்தி 14.9 மில்லியன் கிலோகிராமினால் (5.1%) இனால் அதிகரித்துள்ளது. பச்சைத் தேயிலை உற்பத்தி 287,670 கிலோ கிராம் அதிகரிப்புக் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அது 12.12% தொடர்

அட்டவணை 2.5 : செயற்பாட்டு முறைகளுக்கமைய தேயிலை உற்பத்தி அளவு

| செயற்பாட்டு முறைகள் | 2016 | 2017 | 2016 - 2017 | |
|---|---|---|---|---|
| | அளவு (கி.கி) | அளவு (கி.கி) | வித்தியாசகம் (கி.கி) | வளர்ச்சி(%) |
| சம்பிரதாய | 271,873,844 | 283,252,380 | 11,378,536 | 4.19 |
| சீ.ரீ.சீ. | 18,325,660 | 21,805,673 | 3,480,012 | 18.99 |
| பச்சை | 2,374,083 | 2,661,753 | 287,670 | 12.12 |
| **மொத்தம்** | **292,573,586** | **307,719,805** | **15,146,219** | **5.18** |

#### 2.2.5.2 திடீர் தேயிலை மற்றும் உயிரியல் முறைமைத் தேயிலை உற்பத்தி

2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது தீடீர் தேயிலை உற்பத்தி சிறிதளவாக (1150 மெ.தொன்) வீழ்ச்சி காண்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை உயிரியல் முறைமைத் தேயிலை உற்பத்தியின் அதிகரிப்பு (137 மெ.தொன்) என இவ்வாண்டுக்குள்

### 2.2.6 முடிவுத் தேயிலை உற்பத்திச் செலவினம்

உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்திச் செலவினத்திற்கிடையில் தொடர்புகள் காணப்படுகின்றன. தொடர்ந்தும் உற்பத்திச் செலவின அதிகரிப்பு பெருந்தோட்டத் துறையில் தொடர்ச்சியான பின்னடைவுகள் காண்பிக்கப்படுகின்றன. தேயிலை உற்பத்திச் செயற்பாடுகளுக்குக் கணிசமான அளவு ஊழியர் தேவைகள் காணப்படுவதினால் உற்பத்திச் செலவினம் மற்றும் ஊழியர் உற்பத்தித் திறனுக்கிடையே பாரிய தொடர்புகள் காணப்படுகின்றன. தேயிலை உற்பத்தி செய்யும் ஏனைய பிரதான நகரங்களுக்கிடையே இலங்கையின் தேயிலை உற்பத்திச் செலவினம் உயரிய பெறுமதியினைக் காண்பிக்கின்றது. இந்நிலைமை கோளமய சந்தையில் இலங்கையின் போட்டிகரமான நிலைமைக்கு கூடுதலான அழுத்தங்களை ஏற்படுத்துகின்றன.

ஒரு கிலோ கிராம் முடிவுத் தேயிலை உற்பத்திச் செலவினம் கடந்த தசாப்தத்திற்குள் துரிதகதியில் அதிகரித்துள்ளது. இதற்காக ஊழிய செலவின அதிகரிப்பு, உள்ளீடுகளின் விலை அதிகரித்தமை உற்பத்திச் செலவினம் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது 2016/2017 ஆண்டுக்கான குடிசன புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வகுக்கப்பட்ட வருடாந்த உற்பத்திச் செலவினம் ஒரு கிலோ கிராமிற்கு 467.06 ரூபாவாக காணப்பட்டதுடன், இது 2015/2016 ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 0.02% அதிகரிப்பு காண்பிக்கப்பட்டுள்ளது.

வரைபடம் 2.2. ஒரு கிலோ கிராம் முடிவுத் தேயிலையின் மொத்தச் செலவினம




## 2.3 தேயிலை விற்பனை

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் உயரிய விற்பனை விலை மற்றும் அளவுகள் பதிவாகியது சாதாரண விலைத் தளம்பலில் உயர்ந்த பட்சமாக 648.30 ரூபா கிலோகிராம் தொடக்கம் குறைந்த பட்சம் ஒரு கிலோகிராமிற்கு 590.48 ரூபா வரை ஆண்டு பூராகவும் தளம்பல் காணப்பட்டது. பொதுவாக தேயிலை விலை ஒரு கிலோ கிராமிக்கு 618.18 ரூபாவாகும். 2016 ஆம் ஆண்டில் 468.62 ரூபாவுடன் ஒப்பீடு செய்யும் போது அது வளர்ச்சியைக் காண்பிக்கின்றது. பகிரங்க ஏல விற்பனை, தனியார் மற்றும் நேரடி விற்பனைகள் மூலம் 2016 ஆம் ஆண்டில் ஒரு கிலோகிராமிற்கு 468.62 ரூபா பொதுவான விலையுடன் 280.85 மில்லியன் கிலோகிராம் அளவு சந்தைப்படுத்தப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டில் ஒரு கிலோகிராமிக்கு ரூபா 618.18 சாதாரண விலையுடன் 299.2 மில்லியன் கிலோகிராம் அளவு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் தெளிவாகுவது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது தேயிலை விற்பனை அளவு 6.55% தினால் அதிகரித்துடன் அலகு விலை 31.91% தினால் அதிகரித்துள்ளமை காண்பிக்கப்படுகின்றது.

### 2.3.1 சந்தைப்படுத்தல் முறைகள்

கைத்தொழிற்சாலைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை விற்பனை செய்யும் பிரதான முறையாக அமைந்துள்ளது பகிரங்க ஏல விற்பனையாகும். 2017 ஆம் ஆண்டில் 294.7 மில்லியன் கிலோகிராம் தேயிலை கொழும்பு தேயிலை ஏல விற்பனைச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டது. தனியார் விற்பனையாக 2.8 மில்லியன் கிலோகிராம், நேரடி விற்பனையாக சுமார் 1.7 மில்லியன் கிலோ கிராம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 2.3.2 கொழும்புத் தேயிலை ஏல விற்பனை

கொழும்புத் தேயிலை வர்த்தகங்களின் சங்கங்களின் கீழ் இலங்கை வர்த்தகர்களின் சங்கத்தின் கீழ் இலங்கை வர்த்தக சபையினால் கையாளப்படும் கொழும்பு தேயிலை ஏல விற்பனை 2017 ஆம் ஆண்டில் தேயிலை ஏல விற்பனைகள் 50 நடாத்தப்பட்டதுடன், பகிரங்க ஏல விற்பனையின் போது 18.4 மில்லியன் கிலோகிராம் (6.68%) அதிகரிப்புப் பதிவாகியதுடன், ஆண்டுக்குள் கொழும்புத் தேயிலை ஏல விற்பனை மூலம் உழைக்கப்பட்ட சாதாரண விலையில் அதிகரிப்புக் காண்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு கிலோகிராமிற்கு 466.43 தொடக்கம் ஒரு கிலோகிராமிற்கு 617.17 ரூபா வரை வருடாந்த விலையில் அதிகரிப்பு காண்பிக்கப்பட்டுள்ளது.

### 2.3.3 உயர அமைவிட அடிப்படைக்கமைய சந்தைப்படுத்தல்

அட்டவணை 2.6 இன் மூலம் புவியின் அமைவிடத்திற்கமைய தேயிலை விற்பனை தொடர்பாக பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது உயர், மத்தி மற்றும் தாழ் நிலத் தேயிலை மூலம் ஈட்டப்பட்ட அலகுகளின் விலைகள் அதிகரித்துள்ளன. இதன் பயனாக 2017 ஆம் ஆண்டில் திருப்திகரமான புரழ்வு பதிவாகியுள்ளது.

அட்டவணை 2.6 : நில அமைவிடத்திற்கமைய தேயிலை விற்பனை.

| | அளவு (மில். கி.கி) | | | | அலகு விலை (ரூபா. கி.கி) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| உயர அடிப்படையில் | 2016 | 2017 | வித்தியாசம் | % | 2016 | 2017 | வித்தியாசம் | % |
| உயர் | 58.4 | 58.90 | 0.50 | 0.85 | 449.43 | 601.17 | 151.74 | 33.76 |
| மத்திய | 45.5 | 48.96 | 3.46 | 7.60 | 420.79 | 563.48 | 142.69 | 33.91 |
| தாழ் | 177 | 191.38 | 14.38 | 8.12 | 487.24 | 637.41 | 150.17 | 30.82 |
| மொத்த விற்பனை | 280.8 | 299.24 | 18.44 | 6.57 | 468.62 | 618.18 | 149.56 | 31.92 |

*மூலம் : இலங்கை தேயிலை சபையின் விற்பனை அறிக்கை*

## 2.4 தேயிலை ஏற்றுமதி

233.3 பில்லியன் ரூபா ஏற்றுமதி வருமானத்தை ஈட்டி இலங்கைத் தேயிலை ஏற்றுமதி (மீள் ஏற்றுமதி உட்பட) 2017 ஆம் ஆண்டில் 289.0 மில்லியன் கிலோகிராம் தேயிலை பதிவாகியுள்ளது. ஒரு கிலோகிராம் தேயிலைக்கான (FOB) சாதாரண அலகு விலை 807.44 ஆகும். இது ஏற்றுமதி வருமானங்களின் தேயிலை ஏற்றுமதி வருமானம் 200 பில்லியன் வரை அதிகரித்துள்ளது. உலக தேயிலை சந்தையில் தேயிலை ஏற்றுமதி அளவிற்கமைய இலங்கைத் தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் 03 வது இடத்தில் உள்ளது. அத்துடன் உலக தேயிலை சந்தையில் ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்ட வருமானத்திற்கமைய இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது.

போட்டியாளர்களினால் விடுக்கப்பட்டுள்ள பாரிய போட்டி நிலைமைக்கமைய தேசிய போட்டிகரமான செயற்பாடுகள் தொடர்பில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இந்நிலைமை மேலும் தீவிரமடைவதற்காக இலங்கையின் தேயிலைச் செலவினம் அதிகமாக இருத்தல் மற்றும் தேயிலை அறுவடை கீழ் மட்டத்தில் காணப்படுகின்றமையும் காரணங்களாகும். இதற்கு மேலதிகமாக உலகளாவிய தேயிலை நுகர்வோரில் மாற்றமடைந்து செல்லும் நிலைமைகளுக்கமைய இலங்கை தொடர்ந்தும் சம்பிரதாயத் தேயிலை (orthodox) இற்கமைய நிலையாக காணப்படுகின்றமை தமது சந்தையின் பங்குகளை மேன்மேலும் இழப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளன.

### 2.4.1 தேயிலை வகைகளுக்கமைய ஏற்றுமதிப் பகுப்பாய்வு

பொதுவாக தேயிலை தொடர்பில் வாடிக்கையாளர்களுக்கிடையே காணப்படும் சுவை தேயிலை வகைகள் மற்றும் தரங்களுக்கமைய மாற்றமடைந்து செல்கின்றது. விசேடமாக மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் பொதுநலவாய சபையின் சுயாதீன நாடுகள் (CIS) பிரதானமாக இலங்கையின் உற்பத்தி செய்யப்படும் தாழ் நிலங்களில் வளரும் சம்பிரதாய சிறந்த சுவை கொண்ட தேயிலையில் விருப்பம் காண்பிக்கின்றனர்.

2017 ஆம் ஆண்டில் மீள் ஏற்றுமதி கொண்ட கருந்தேயிலை, பச்சைத் தேயிலை, திடீர் தேயிலை மொத்தமாக ஏற்றுமதி அளவு மற்றும் வருமானம் அதிகரித்துக் காணப்படுவதாக காண்பிக்கப்பட்டுள்ளது. 0.2 மில்லியன் கிலோகிராம் அளவு மாற்றங்களுடன் மொத்தத் தேயிலை ஏற்றுமதி 0.07% தினால் அதிகரித்துள்ளது. ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதி அளவு தனித்தனியாக தொடராக 1% மற்றும் 37% வளர்ச்சியினைக் காண்பிப்பதுடன் உழைப்பு 26.18% மற்றும் 28.28% வளர்ச்சி ஏற்பட்டுள்ளன இது எவ்வாறாக இருப்பினும் 2017 ஆம் ஆண்டில் திரண்ட ஏற்றுமதி வருமானம் 1,530.5 மில்லியன் அமெரிக்க டொலர் என்பதுடன் 2016 ஆம் ஆண்டில் அது 1,269.0 மில்லியன் அமெரிக்க டொலர் என்பதுடன் இது 20.6% வளர்ச்சியைக் காண்பிக்கின்றது.



## 2.4.2 வருடாந்த தேயிலை ஏற்றுமதி - 2017

2017 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை வகைகளுக்கமைய தேயிலை ஏற்றுமதி தொடர்பான விபரங்கள் விளக்கப்பட்டுள்ளன (அளவு, பெறுமதி மற்றும் (**FOB**) விலை) உட்பட கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

அட்டவணை 2.7: வருடாந்த தேயிலை ஏற்றுமதி - 2017

| பொதி | அளவு (கி.கி) | பெறுமதி (ரூபா) | எப்.ஓ.பி. விலை |
|---|---|---|---|
| ஏற்றுமதி | 278,195,151 | 222,375,844,880 | 799.35 |
| **பொதியிடப்பட்ட கறுப்புத் தேயிலை** | 273,672,954 | 216,027,268,225 | 789.36 |
| பொதியிடப்பட்ட தேயிலை | 17,807,367 | 24,618,836,580 | 1,382.51 |
| மொத்தத் தேயிலை | 123,434,159 | 90,965,987,228 | 736.96 |
| பொதியிடப்பட்ட தேயிலை (4கி.-1கி.கி.) | 1,749,617 | 1,381,008,963 | 789.32 |
| பொதியிடப்பட்ட தேயிலை (1கி.கி.-3கி.கி.) | 14,289,580 | 10,421,343,542 | 729.30 |
| பொதியிடப்பட்ட தேயிலை (3கி.கி.-5கி.கி.) | 84,759,381 | 67,202,126,360 | 792.86 |
| பொதியிடப்பட்ட தேயிலை (5கி.கி.-10கி.கி.) | 31,632,851 | 21,437,965,551 | 677.71 |
| **பொதியிடப்பட்ட பச்சை தேயிலை** | 2,402,428 | 3,697,102,243 | 1,538.90 |
| பொதியிடப்பட்ட தேயிலை | 716,426 | 1,891,191,677 | 2,639.76 |
| மொத்தத் தேயிலை | 906,203 | 655,817,125 | 723.70 |
| பொதியிடப்பட்ட தேயிலை (4கி.-1கி.கி.) | 52 | 112,185 | 2,169.92 |
| பொதியிடப்பட்ட தேயிலை (1கி.கி.-3கி.கி.) | 5,512 | 9,501,325 | 1,723.88 |
| பொதியிடப்பட்ட தேயிலை (3கி.கி.-5கி.கி.) | 740,429 | 1,087,191,327 | 1,468.33 |
| பொதியிடப்பட்ட தேயிலை (5கி.கி.-10கி.கி.) | 33,807 | 53,288,604 | 1,576.28 |
| திடீர் தேயிலை | 2,119,769 | 2,651,474,412 | 1,250.83 |
| பொதியிடப்பட்ட தேயிலை | 45 | 24,895 | 547.50 |
| பொதியிடப்பட்ட தேயிலை (>3 கி.கி) | 2,117,298 | 2,646,609,756 | 1,249.99 |
| பொதியிடப்பட்ட தேயிலை (1 கி.கி -3கி.கி) | 120 | 284,137 | 2,367.81 |
| பொதியிடப்பட்ட தேயிலை (4கி-1 கி.கி) | 2,305 | 4,555,624 | 1,976.41 |
| மீள் ஏற்றுமதி | 10,789,117 | 10,962,557,922 | 1,016.08 |
| **கருந்தேயிலை** | 8,166,488 | 6,981,816,342 | 854.94 |
| பொதியிடப்பட்ட தேயிலை | 3,894,009 | 4,052,744,856 | 1,040.76 |
| மொத்தத் தேயிலை | 2,195,106 | 1,298,590,115 | 591.58 |
| பொதியிடப்பட்ட தேயிலை (1 கி.கி -3கி.கி) | 96,939 | 72,344,962 | 746.29 |
| பொதியிடப்பட்ட தேயிலை (3 கி.கி -5கி.கி) | 97,044 | 68,127,613 | 702.03 |
| பொதியிடப்பட்ட தேயிலை (4 கி-1 கி.கி) | 1,730,563 | 1,374,543,461 | 794.28 |
| பொதியிடப்பட்ட தேயிலை (5 கி.கி -10கி.கி) | 152,827 | 115,465,335 | 755.53 |
| **பச்சைத் தேயிலை** | 2,621,003 | 3,977,255,346 | 1,517.46 |
| பொதியிடப்பட்ட தேயிலை | 1,057,953 | 2,510,309,864 | 2,372.80 |
| மொத்தத் தேயிலை | 158,363 | 100,302,332 | 633.37 |
| பொதியிடப்பட்ட தேயிலை (1 கி.கி -3கி.கி) | 7,931 | 4,997,361 | 630.10 |
| பொதியிடப்பட்ட தேயிலை (3 கி.கி -5கி.கி) | 7,974 | 3,474,805 | 435.76 |
| பொதியிடப்பட்ட தேயிலை (4கி-1 கி.கி) | 1,371,873 | 1,341,087,963 | 977.56 |
| பொதியிடப்பட்ட தேயிலை (5 கி.கி -10கி.கி) | 16,908 | 17,083,022 | 1,010.36 |
| **திடீர் தேயிலை** | 1,627 | 3,486,233 | 2,143.11 |
| பொதியிடப்பட்ட தேயிலை (>3 கி.கி) | 95 | 238,431 | 2,521.48 |
| பொதியிடப்பட்ட தேயிலை (4கி-1 கி.கி) | 1,532 | 3,247,802 | 2,119.75 |
| **முழு மொத்தம் (ஏற்றுமதி மீள் ஏற்றுமதி)** | **288,984,268** | **233,338,402,802** | **807.44** |
| **அருந்துவதற்காக தயாரிக்கப்பட்ட தேயிலை (லீட்டர்)** | **14,390,059** | **1,521,751,077** | **105.75** |
| **ஏற்றுமதி** | **278,195,151** | **222,375,844,880** | **799.35** |
| **மீள் ஏற்றுமதி** | **10,789,117** | **10,962,557,922** | **1,016.08** |

### 2.4.3 பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதி

உலகளாவிய வாடிக்கையாளர்களில் தேயிலை தொடர்பில் காணப்படும் விருப்பம் துரிதகதியில் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை மீது ஈர்க்கப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் இதுவரையில் உலகளாவிய தேயிலை சந்தையின் தமக்குரிய இடத்தினை பாதுகாப்பதற்காக இலங்கை இச் சந்தையில் மாற்றங்களுக்கு அமைவாக செயற்பட வேண்டும். பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை அதாவது 03 கிலோகிராமை விடக் குறைந்த பொதி மற்றும் தேயிலை பக்கட் உட்பட திடீர் தேயிலை ஏற்றுமதி 2017 ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதி அளவில் 40.16% ஆகும். இதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் 108.2 பில்லியன் ரூபா என்பதுடன், அது மொத்த ஏற்றுமதி வருமானத்தில்

அட்டவணை 2.8: வருடாந்த தேயிலை ஏற்றுமதி - 2017

| ஏற்றுமதி வகை | தயாரிக்கப்பட்ட முறை | அளவு கிலோ கிராம் | பெறுமதி ரூபா | எப்.ஓ.பி. (ரூபா. கி.கி) |
|---|---|---|---|---|
| ஏற்றுமதி | கருந்தேயிலை | 104,316,365 | 93,201,971,903 | 893.45 |
| | பச்சைத் தேயிலை | 1,456,907 | 2,978,495,189 | 2,044.40 |
| | திடீர் தேயிலை | 2,119,769 | 2,651,474,412 | 1,250.83 |
| | **உப மொத்தம்** | **107,893,040** | **98,831,941,504** | **916.02** |
| மீள் ஏற்றுமதி | கருந்தேயிலை | 5,721,511 | 5,499,633,279 | 961.22 |
| | பச்சைத் தேயிலை | 2,437,757 | 3,856,395,187 | 1,581.94 |
| | திடீர் தேயிலை | 1,627 | 3,486,233 | 2,143.11 |
| | **உப மொத்தம்** | **8,160,895** | **9,359,514,700** | **1,146.87** |
| **மொத்தம்** | | **116,053,935** | **108,191,456,204** | **932.25** |

* அருந்துவதற்காக தயாரிக்கப்பட்ட தேயிலை (RTD) ஏற்றுமதி இன்றி இவ் அட்டவணையில் வகுக்கப்பட்டுள்ளதுடன் மொத்த RTD ஏற்றுமதி, பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதியாகக் கருதப்படுகின்றது.

தொகைத் தேயிலை மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக்கான FOB விலை கீழுள்ள குறிப்பின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக்காக FOB விலை தொகைத் தேயிலை விலையை விடக் கூடுதலான பெறுமதியைக் காண்பிக்கின்றது. எனவே தொடர்ந்தும் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிக்கான ஊக்குவிப்புச் செயற்பாடுகள் மூலம் தொகைத் தேயிலை ஏற்றுமதியை விட இலங்கை பொருளாதாரத்திற்காக திருப்திகரமாக தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. ஆய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலையைப் போன்று தொகைத் தேயிலை ஆகிய இரு வகைகளுக்காகவும் FOB விலையில் வளர்ச்சிகள் காண்பிக்கப்படுகின்றன.

உரு 2.4 பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை மற்றும் தேயிலைத் தொகை ஏற்றுமதி




### 2.4.4 இலங்கைத் தேயிலையை ஏற்றுமதி செய்யும் பிரதான நாடுகள

வரலாற்று ரீதியில் இலங்கையிலிருந்து பிரதானமாக தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடாக ஐக்கிய இராட்சியம் உட்பட ஐரோப்பிய நாடுகள் காணப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் 13.09% அளவினை துருக்கி இறக்குமதி செய்துள்ளது. இலங்கையிலிருந்து தேயிலை ஏற்றுமதி செய்யும் பிரதான நாடுகளின் முன்னணியில் துருக்கி காணப்படுகிறது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இது 39.7% வளர்ச்சியினைக் காண்பிக்கின்றது. 2016 ஆம் ஆண்டில் கூடுதலான அளவு இலங்கையிலிருந்து ரஷ்யாவிற்கு தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதில் இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் 11.92% என்ற அளவினை ரஷ்யா இறக்குமதி செய்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் நிலைமைக்கு அப்பால் சென்ற துருக்கி இவ்வாண்டில் முதலிடத்தை எட்டியுள்ளது.

2013 ஆம் ஆண்டு வரை இலங்கையிலிருந்து தேயிலை ஏற்றுமதி செய்யும் பிரதான நாடுகளில் முதலிடத்தை பாதுகாக்க ரஷ்யாவிற்கு முடிந்துள்ளது. இருப்பினும் துருக்கியில் இலங்கைத் தேயிலைக்காக கூடுதலான கேள்விகள் மற்றும் ரஷ்யாவின் அரசியல் உட்பட பொருளாதார ஸ்திரத்தன்மை அற்ற நிலைமைகள் போன்றிவை காரணமாக 2014 ஆம் ஆண்டு இலங்கையின் தேயிலை அளவிற்கமைய இரண்டாவது இடத்தில் ரஷ்யா காணப்படுகின்றது. மீண்டும் 2015 ஆம் ஆண்டில் ரஷ்யா முதலிடத்தை பெற்றுள்ளது. 2016 ஆம் ஆண்டிலும் அவ்விடத்தை பாதுகாக்க முடிந்துள்ளது. இருப்பினும் 2017 ஆம் ஆண்டில் துருக்கி மீண்டும் முதலிடத்தை எட்டியுள்ளது. இலங்கை தேயிலை ஏற்றுமதியின் மூலம் உழைக்கும் மொத்த வருமானத்திற்கு 11.94% பங்களிப்பினை வழங்கி தேயிலை ஏற்றுமதியில் முன்னணியிலிருந்து வருமானத்தை ஈட்டும் பிரதான நாடாக துருக்கி மாற்றம் பெற்றுள்ளது.

2017 ஆம் ஆண்டில் ஈரானுக்கு 12.12% அளவு தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் ஈரான் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் நாடுகளில் இரண்டாவது இடத்தில் காணப்படுகின்றது. இதன் அளவு 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 7.60% வளர்ச்சியாகும். ஈரானுக்காக பொதுவாக FOB விலை 2017 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து தேயிலை ஏற்றுமதி செய்த பிரதான 10 நாடுகளில் உயரிய விலையைக் காண்பிக்கின்றது. 2017 ஆம் ஆண்டு 04 வது இடத்தில் உள்ள ஈரான் இலங்கைத் தேயிலை சந்தையில் 19.19% பங்குகளினால் வீழ்ச்சி கண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக 2016 ஆம் ஆண்டுக்கு இணைவாக பிரதான 10 நாடுகளின் மொத்த ஏற்றுமதி 0.76% தினால் அதிகரித்துள்ளதுடன், ரஷ்யா, ஐக்கிய அரபு எமிர் இராட்சியம், லிபியா மற்றும் சிரியாவிற்கான ஏற்றுமதி 2016 ஆம் ஆண்டுக்கு

அட்டவணை 2.9: 2017 ஆம் ஆண்டில் இலங்கையின் பிரதான தேயிலை ஏற்றுமதி கேந்திர நிலையம்

| நாடுகள் | 2017 | | | 2016 | | | விருத்தி (%) |
|---|---|---|---|---|---|---|---|
| | இடம் | அளவு (கி.கி) | ஏற்றுமதி பங்கு (%) | இடம் | அளவு (கி.கி) | ஏற்றுமதி பங்கு (%) | |
| துருக்கி | 1 | 37,815,700 | 13.09 | 4 | 27,068,973 | 9.37 | 39.70 |
| ஈராக் | 2 | 35,032,772 | 12.12 | 3 | 32,557,218 | 11.27 | 7.60 |
| ரஷ்யா | 3 | 33,379,977 | 11.55 | 1 | 34,432,859 | 11.92 | (3.06) |
| ஈரான் | 4 | 27,418,910 | 9.49 | 2 | 33,928,612 | 11.75 | (19.19) |
| ஐக்கிய அரபு இராட்சியம் | 5 | 15,785,266 | 5.46 | 5 | 18,381,410 | 6.37 | (14.12) |
| அசர்பைஜான் | 6 | 12,271,107 | 4.25 | 8 | 10,556,896 | 3.66 | 16.24 |
| லிபியா | 7 | 11,609,461 | 4.02 | 6 | 12,645,055 | 4.38 | (8.19) |
| சீனா | 8 | 9,903,199 | 3.43 | 10 | 7,603,870 | 2.63 | 30.24 |
| ஜப்பான் | 9 | 7,924,043 | 2.74 | 9 | 7,763,607 | 2.69 | 2.07 |
| சிரியா | 10 | 7,399,616 | 2.56 | 7 | 12,107,279 | 4.19 | (38.88) |
| **பிரதான 10 நாடுகள்** | | **198,540,051** | **68.70** | | **197,045,778.20** | **68.24** | **0.76** |

இலங்கைத் தேயிலை ஏற்றுமதி செய்யும் பிரதான நாடுகளின் பட்டியலில் 3 வது இடத்தை பாதுகாக்க ரஷ்யாவிற்கு முடிந்துள்ளது. ஐக்கிய அரபு எமிர் இராட்சியத்திற்காக ஏற்றுமதி அளவு ***5.46%*** என்பதுடன் முன்னைய ஆண்டைப் போன்று 5 வது இடத்தில் காணப்படுகின்றது. பிராந்திய ரீதியில் கருத்திற் கொள்ளும்போது மத்திய கிழக்கு இலங்கையின் பிரதான கொள்வனவாளராக இனங்காண முடியும். எரிபொருளின் விலை உயரிய மட்டத்தில் காணப்படுகின்றமை இதற்கான காரணமாகும். முதல் 10 நாடுகளில் இலங்கையில் ***68.70%*** அளவு தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இரப்பினும் ஈரான், சிரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் தொடர்பில் மாத்திரம் குறிப்பிடத்தக்களவு உயரிய சாதாரண ***FOB*** விலை பதிவாகியுள்ளது. அத்துடன் மொத்த ஏற்றுமதி வருமானம் 233 பில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளது. தேயிலைக்காக உலகின் உயரிய கேள்விகள் காணப்படுகின்றமை இதற்கான காரணமாகும். இது எவ்வாறாக இருப்பினும் தேயிலைப் பை பயன்பாடு அதிகரித்துள்ளமையினால் இலங்கையின் மொத்தத் தேயிலை ஏற்றுமதி மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பும் அளவு அதிகரித்துள்ளது.

அட்டவணை 2.10: பிரதான 20 நாடுகளுக்கு தேயிலை ஏற்றுமதி மற்றும் உரிய இடம் பொதியிடல் முறைக்கமைய

| நாடுகள் | ஏற்றுமதி அளவு (கி.கி) | | | | | | | நாடுகளுக்கமைய உரிய இடம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பொதி | தொகை | பை (>3கி.கி) | பை (1கி.கி - 3 கி.கி) | பை (3கி.கி -5 கி.கி) | பை (4 கி - 1 கி.கி) | பை (5 கி.கி - 10 கி.கி) | பொதி | தொகை | பை (>3கி.கி) | பை (1கி.கி - 3 கி.கி) | பை (3கி.கி -5 கி.கி) | பை (4 கி - 1 கி.கி) | பை (5 கி.கி - 10 கி.கி) |
| துருக்கி | 272,784 | 11,804,045 | - | 386,928 | 6,579,505 | 15,926,640 | 2,845,798 | 12 | 4 | - | 3 | 1 | 2 | 4 |
| ஈராக் | 242,956 | 1,676,190 | - | 538,700 | 1,327,870 | 19,283,619 | 11,963,436 | 13 | 13 | - | 1 | 4 | 1 | 1 |
| ரஷ்யா | 923,245 | 27,266,733 | - | 1,960 | 7,995 | 5,145,543 | 34,500 | 5 | 1 | - | 8 | 12 | 5 | 12 |
| ஈரான் | 23,663 | 14,773,659 | - | 261,465 | 121,500 | 1,084,359 | 11,154,265 | 19 | 2 | - | 4 | 7 | | 2 |
| ஐக்கிய அரபு இராட்சியம் | 406,414 | 4,838,732 | - | 103,494 | 1,378,755 | 6,175,511 | 2,882,360 | 9 | 8 | - | 5 | 3 | 4 | 3 |
| அசர்பைஜான் | 6,320 | 11,885,493 | - | - | - | 379,295 | - | 20 | 3 | - | - | - | - | - |
| லிபியா | 47,934 | - | - | - | - | 11,510,277 | 51,250 | 18 | - | - | - | - | 3 | 10 |
| சீனா | 308,236 | 8,638,260 | 14,260 | 71,762 | 38,234 | 217,549 | 614,897 | 10 | 5 | 2 | 6 | 9 | - | 5 |
| ஜப்பான் | 694,486 | 7,021,596 | 30 | - | 61,628 | 54,768 | 91,535 | 6 | 6 | 5 | - | 8 | - | 7 |
| சிரியா | 690,197 | 397,852 | - | - | 4,157,725 | 1,882,092 | 271,750 | 7 | 16 | - | - | 2 | - | 6 |
| சிலி | 452,216 | 6,365,714 | - | - | - | 279,034 | - | 8 | 7 | - | - | - | - | - |
| ஜேர்மன் | 189,663 | 4,671,880 | 30 | 11,890 | 19 | 1,927,969 | 7,656 | 14 | 9 | 6 | 7 | 16 | 9 | 16 |
| ஹொங்கொங் | 70,839 | 3,800,530 | - | 413,611 | 332,133 | 341,825 | 22,544 | 17 | 11 | - | 2 | 5 | - | 13 |
| ஐக்கிய அமெரிக்கா | 1,169,794 | 1,287,260 | 137,665 | 1,123 | 18,634 | 2,217,568 | 8,064 | 2 | 15 | 1 | 10 | 10 | 7 | 15 |
| ஜோர்தான் | 2,225,869 | 247,551 | - | - | 13,500 | 2,154,823 | 46,000 | 1 | 17 | - | - | 11 | 8 | 11 |
| சவுதி அரேபியா | 938,881 | 1,404,298 | - | - | 134,082 | 1,925,092 | 14,040 | 4 | 14 | - | - | 6 | - | 14 |
| தாய்வான் | 123,998 | 4,128,078 | 9,000 | 1,800 | 139 | 50,819 | 3,050 | 16 | 10 | 3 | 9 | 15 | - | 17 |
| லெபனான் | 281,535 | 33,353 | - | - | 4,840 | 3,718,179 | 90,500 | 11 | 19 | - | - | 13 | 6 | 8 |
| உக்ரேன் | 159,002 | 3,020,677 | - | - | - | 851,250 | 65,205 | 15 | 12 | - | - | - | - | 9 |
| நெதர்லாந்து (ஹோலாந்து) | 947,227 | 229,637 | 210 | - | 600 | 1,733,380 | 10 | 3 | 18 | 4 | - | 14 | - | 18 |

### 2.4.4.1 கருந்தேயிலை ஏற்றுமதி

மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் 97.53% (281.84 மில்லியன் கிலோ கிராம்) அளவு கருந்தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் மொத்தத் தேயிலை ஏற்றுமதி வருமானத்திற்கு 95.57% (223.0 பில்லியன் ரூபா) அளவு பங்களிப்புச் செய்யப்பட்டுளளது. இலங்கையிலிருந்து கருந்தேயிலை ஏற்றுமதி செய்யும் சகல நாடுகளின் உயரிய மட்டத்திலுள்ள பிரதான 20 நாடுகளுக்கமைய 86.29% மற்றும் பெறுமதிக்கமைய 83.89% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. 2013 ஆம் ஆண்டு வரை இலங்கையில் கருந்தேயிலை ஏற்றுமதி செய்யும் பிரதான நாடு ரஷ்யாவாகும். 2014 ஆம் ஆண்டு துருக்கி முதலாவது இடத்திலுள்ளது. 2015 ஆம் ஆண்டில் ரஷ்யா (11.9%) மீண்டும் இலங்கை 35.74 மில்லியன் கிலோகிராம் கருந்தேயிலையினை இறக்குமதி செய்து முன்னணியில் உள்ளது. 2016 ஆம் ஆண்டில் ஈரான் இலங்கையிலிருந்து கருந்தேயிலை 33.90 மில்லியன் கிலோ கிராம் (12%) இதில் இறக்குமதி செய்து முதலிடத்திலுள்ளது. இவ்வாண்டில் துருக்கி 13.41% அளவு பங்குகளுக்கு பங்களிப்பு செய்து இலங்கையிலிருந்து கருந்தேயிலை ஏற்றுமதி செய்த பிரதான நாடுகளில் முதலிடத்தில் உள்ளது.

அட்டவணை 2.11: கருந்தேயிலை ஏற்றுமதி செய்யும் 20 முதற்தர நாடுகள் மற்றும் சந்தைப்பங்குகள் 2017 (மீள் ஏற்றுமதியுடன்)

| நாடுகள் | அளவு (கி.கி. மில்) | பெறுமதி | FOB | பங்குகளின் அளவு (%) | பங்குகளின் பெறுமதி (%) | அளவு வித்தியாசயம்(%) |
|---|---|---|---|---|---|---|
| | | ரூா.பில் | ரூா. கி.கி | | | ('16 இணைவாக '17) |
| துருக்கி | 37.80 | 27.84 | 736.56 | 13.41 | 12.49 | 39.75 |
| ஈராக் | 35.01 | 21.01 | 600.26 | 12.42 | 9.42 | 7.67 |
| ரஷ்யா | 32.74 | 25.74 | 786.08 | 11.62 | 11.54 | (3.08) |
| ஈரான் | 27.38 | 24.31 | 887.82 | 9.72 | 10.90 | (19.21) |
| ஐக்கிய அரபு இராட்சியம் | 15.31 | 11.20 | 731.45 | 5.43 | 5.02 | (14.09) |
| அசர்பைஜான் | 12.27 | 9.57 | 780.52 | 4.35 | 4.29 | 16.34 |
| லிபியா | 10.84 | 7.30 | 673.33 | 3.85 | 3.27 | (14.05) |
| சீனா | 9.82 | 7.33 | 746.01 | 3.48 | 3.28 | 29.99 |
| ஜப்பான் | 7.92 | 6.90 | 871.54 | 2.81 | 3.10 | 2.10 |
| சிரியா | 7.39 | 6.19 | 837.65 | 2.62 | 2.77 | (38.99) |
| சிலி | 7.04 | 4.78 | 679.18 | 2.50 | 2.15 | 6.55 |
| ஜேர்மன் | 6.68 | 5.43 | 813.15 | 2.37 | 2.44 | 0.12 |
| ஹொங்கொங் | 4.97 | 3.57 | 719.73 | 1.76 | 1.60 | 7.82 |
| ஜோர்தான் | 4.68 | 4.28 | 915.33 | 1.66 | 1.92 | 17.90 |
| சவுதி அரேபியா | 4.32 | 4.04 | 933.92 | 1.53 | 1.81 | (2.37) |
| ஐக்கிய அமெரிக்கா | 4.23 | 3.89 | 918.81 | 1.50 | 1.74 | (7.81) |
| தாய்வான் | 4.22 | 2.76 | 654.63 | 1.50 | 1.24 | 41.50 |
| லெபனான் | 4.11 | 3.71 | 902.78 | 1.46 | 1.67 | 19.12 |
| உக்ரேன் | 3.76 | 3.30 | 878.82 | 1.33 | 1.48 | (18.61) |
| அவுஸ்திரேலியா | 2.70 | 3.90 | 1445.9 | 0.96 | 1.75 | 15.14 |
| **முன்னியிலுள்ள 20 நாடுகளின் மொத்தம்** | **243.20** | **187.08** | **769.24** | **86.29** | **83.89** | **1.37** |

### 2.4.4.2 பச்சைத் தேயிலை ஏற்றுமதி

2017 ஆம் ஆண்டில் மொத்தத் தேயிலை ஏற்றுமதி வருமானம் 2.6% (4.9 பில்லியன் ரூபா) வருமானத்தை ஈட்டி மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் 1.2% (3.4 மில்லியன் கிலோகிராம் அளவு) பச்சைத் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து பச்சைத் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

இலங்கையிலிருந்து பச்சைத் தேயிலை ஏற்றுமதி செய்த நாடுகளில் உயரிய மட்டத்தில் காணப்படும் பிரதான நாடுகளில் 83.16% அளவினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இலங்கையின் பச்சைத் தேயிலை இறக்குமதி செய்யும் பிரதான 20 நாடுகளில் லிபியா குறிப்பிடத்தக்களவு அதாவது மொத்த அளவில் 0.76 மில்லியன் கிலோ கிராம் இவ்வாண்டில் இறக்குமதி செய்கின்றது. மொத்த பச்சைத் தேயிலை ஏற்றுமதி 4.178,000 கிலோ கிராமாகும்.

அட்டவணை 2.12 : பச்சைத் தேயிலை ஏற்றுமதி செய்யும் பிரதான 20 நாடுகள்

| நாடுகள் | அளவு (கி.கி. மில்) ('000கி.கி) | பெறுமதி ரூா. மில் | எப்.ஓ.பி விலை | பங்குகளின் அளவு (%) | பங்குகளின் பெறுமதி (%) | அளவு வித்தியாசயம்(%) ('16 இணைவாக '17) |
|---|---|---|---|---|---|---|
| லிபியா | 766 | 565 | 737.56 | 15.25 | 7.36 | 2,463.71 |
| ரஷ்யா | 638 | 767 | 1,202.16 | 12.70 | 9.99 | (1.84) |
| ஐக்கிய அரபு எமிர் இராட்சியம் | 472 | 355 | 751.47 | 9.40 | 4.63 | (15.35) |
| ஐக்கிய அமெரிக்காக | 471 | 956 | 2,026.90 | 9.39 | 12.45 | 4.57 |
| யுக்ரேன் | 336 | 385 | 1,146.04 | 6.69 | 5.02 | 8.26 |
| நெதர்லாந்து (ஹோலாந்து) | 227 | 589 | 2,592.26 | 4.53 | 7.68 | 16.92 |
| ஐக்கிய இராட்சியம் | 166 | 347 | 2,091.81 | 3.30 | 4.53 | 101.96 |
| அவுஸ்திரேலியா | 129 | 381 | 2,951.99 | 2.57 | 4.97 | (2.46) |
| ஜேர்மன் | 126 | 152 | 1,207.11 | 2.50 | 1.98 | (29.67) |
| பிரான்ஸ் | 123 | 257 | 2,081.21 | 2.46 | 3.35 | 17.86 |
| போலாந்து | 101 | 182 | 1,798.07 | 2.01 | 2.37 | 31.42 |
| சவுதிஅரேபியா | 95 | 148 | 1,566.43 | 1.89 | 1.93 | 9.12 |
| நைஜீரியா | 92 | 170 | 1,848.26 | 1.83 | 2.21 | (1.80) |
| தாய்வான் | 90 | 88 | 986.11 | 1.78 | 1.15 | 3.05 |
| பெலரஸ் | 76 | 94 | 1,243.61 | 1.50 | 1.22 | 42.35 |
| சீனா | 70 | 154 | 2,203.93 | 1.39 | 2.00 | 39.74 |
| சிலி | 54 | 105 | 1,950.59 | 1.07 | 1.36 | (11.21) |
| நியுஸ்லாந்து | 52 | 128 | 2,458.31 | 1.04 | 1.67 | 20.05 |
| செக் குடியரசு | 48 | 132 | 2,749.86 | 0.95 | 1.72 | 0.92 |
| பின்லாந்து | 46 | 62 | 1,353.31 | 0.91 | 0.80 | 144.35 |
| **முன்னியிலுள்ள 20 நாடுகளின் மொத்தம்** | **4,178** | **6,017** | **1,440.20** | **83.16** | **78.40** | **26.25** |

### 2.4.4.3 திடீர் தேயிலை ஏற்றுமதி

இலங்கையின் திடீர் தேயிலை இறக்குமதி செய்யும் பிரதான நாடான அயர்லாந்து 1.9 கிலோகிராம் (91.5%) அளவு இறக்குமதி செய்து இலங்கையில் திடீர் தேயிலை சந்தையில் பிரதான தலைமைத்துவத்தை வகிக்கின்றது. இலங்கையின் திடீர் தேயிலை ஏற்றுமதி செய்யும் பிரதான நாடுகளின் பட்டியலில் அயர்லாந்து பின்னர் தொடராக ஐக்கிய அமெரிக்கா, சீனா மற்றும் தாய்வான் ஆகிய நாடுகள் காணப்படுகின்றன. இவ்வாண்டில் திடீர் தேயிலை விற்பனை 2016 ஆம் ஆண்டுக்கு இணைவாக 5.5% தினால் அதிகரித்துள்ளதுடன், வருமானமும் 8.6% தினால் அதிகரித்துள்ளது.

### 2.4.4.4 பருகுவதற்கு தயார்படுத்தப்பட்டுள்ள தேயிலை ஏற்றுமதி (RTD)

இலங்கையில் பருகுவதற்கு தயார்படுத்தப்பட்டுள்ள தேயிலை (RTD) இற்காக சிறந்த சந்தை வாய்ப்பு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் பருகுவதற்கு தயார்படுத்தப்பட்டுள்ள தேயிலை (RTD) 14.4 மில்லியன் லீட்டர் ஏற்றுமதி செய்வதன் மூலம் 1,522 மில்லியன் ரூபா ஏற்றுமதி வருமானம் ஈட்டப்பட்டது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது பருகுவதற்கு தயார்படுத்தப்பட்ட தேயிலை (RTD) ஏற்றுமதி 27.4% தினால் வீழ்ச்சி காண்பிக்கப்பட்டுள்ளது. 1,451 மில்லியன் ரூபா வருமானத்தை வழங்கி இந்தியா 14.0 மில்லியன் லீட்டர் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்துள்ளது. இலங்கையில் அருந்துவதற்கு தயார்படுத்தப்பட்ட தேயிலை (RTD) இற்காக ஏனைய பிரதான கொள்வனவாளராக அவுஸ்திரேலியா, கனடா, கட்டார், பகமாஸ் மற்றும் ஐக்கிய இராட்சியம் ஆகிய நாடுகள் காணப்படுகின்றன.

## 2.5 உளகலாவிய தேயிலைக் கைத்தொழிலின் பின்னணி

தேயிலை உலகெங்கிலும் மிகப் பிரபல்யமான மற்றும் கூடுதலாக நுகரக்கூடிய சுவை மிகுந்த பாணமாகும். இலங்கையின் ஏற்றுமதியில் விசேடமாக தேயிலை ஏற்றுமதி இக்கைத்தொழிலில் ஆரம்பம் தொடக்கம் தேசிய பொருளாதாரத்தைப் போன்று சமூக அபிவிருத்திக்கும் பாரிய செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. நாட்டின் பாரிய முதலீட்டாளர்களுக்கிடையே நிலைப்படுத்தப்பட்டுள்ள இக் கைத்தொழில் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இடத்திற்கு உரிமை கோருகின்றது.

உலகளாவிய தேயிலை உற்பத்தியில் 82% அளவு உற்பத்தி செய்யப்படுவது இந்தியா, சீனா, இலங்கை, கென்யா மற்றும் இந்தோனேசியா ஆகிய உலகின் பிரதானமாக தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகள் மூலமாகும். இந்த நாடுகளினால் மேற்கொள்ளப்படும் ஏற்றுமதியின் மொத்த உலகளாவிய ஏற்றுமதியில் 76% மாகும். சீனா உலகத் தேயிலை செய்கையின் உயரிய இடத்தை எட்டக் காரணமாக அமைந்துள்ளதுடன், ஆபிரிக்க கண்டத்தில் விசேடமாக கென்யாவும் பாரிய அறுவடைக்கு உரிமை கோருகின்றது. ஏனைய தேயிலை உற்பத்தியாளர்களுடன் ஒப்பீடு செய்யும் போது உலகளாவிய தேயிலைக் கைத்தொழிலில் இலங்கைக்கு காணப்படும் இடம் தொடர்பில் கருத்திற் கொள்ளும் போது 2017 ஆம் ஆண்டில் ஏற்றுமதி மற்றும் உற்பத்தியின் மிகவும் சிறந்த நிலைமைகள் காணப்படுவதாகவும் அலகு விலை (ஏல விற்பனை) மற்றும் ஏற்றுமதி வருமானம் உயரிய பெறுமதியைக் காண்பிக்கின்றது.

### 2.5.1 உலகளாவிய தேயிலைச் செய்கை

2016 ஆம் ஆண்டின் இறுதியில் உலகில் தேயிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பின் அளவு 04 மில்லியன் ஹெக்டேயரை விட மேற்பட்டளவு விரிவடைந்துள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 2.13: பாரிய தேயிலை விளைநில அறிக்கை

| நாடு | 2010 (Ha.) | 2011 (Ha.) | 2012 (Ha.) | 2013(Ha) | 2014(Ha) | 2015(Ha) | 2016(Ha) |
|---|---|---|---|---|---|---|---|
| சீனா | 1,970,200 | 2,112,510 | 2,279,940 | 2,468,840 | 2,649,840 | 2,810,000 | 2,920,000 |
| இந்தியா | 560, 609 | 579,350 | 563,980 | 563,980 | 566,660 | 566,660 | 577,480 |
| **இலங்கை** | **188,007** | **187,860** | **187,000** | **187,000** | **187,935** | **188,000** | **202,839** |
| கென்யா | 171,916 | 187,855 | 190,717 | 198,657 | 203,006 | 209,426 | 218,538 |
| வியட்நாம் | 129,000 | 127,000 | 124,027 | 124,000 | 125,000 | 125,000 | 134,000 |
| இந்தோனேசியா | 122,796 | 122,764 | 121,076 | 122,546 | 121,000 | 119,361 | 118,100 |
| மியன்மார்க் | 78,400 | 78,500 | 78,500 | 78,700 | 78,700 | 79,000 | 80,000 |
| துருக்கி | 77,500 | 77,700 | 77,800 | 77,000 | 77,400 | 77,500 | 77,000 |
| பங்களாதேஷ் | 54,900 | 54,400 | 54,500 | 54,000 | 53,700 | 53,500 | 59,000 |
| ஜப்பான் | 46,800 | 46,200 | 45,900 | 44,800 | 44,800 | 39,300 | 43,100 |

மூலம் Annual ITC Bulletin of Statistics 2017
*பயிர்செய்யப்பட்டதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட பிரதேசம்

சர்வதேச தேயிலைக் குழு அறிக்கைகளுக்கமைய உலகின் மிகப்பெரிய தேயிலைக் உற்பத்தி செய்கைப் பிரதேசம் சீனாவில் காணப்படுவதுடன், அதாவது (62%) வருடாந்த செய்கை பரவலாக்கல்கள் துரிதகதியில் விரிவடைந்துள்ளதைக் காண முடிகின்றது. கென்யாவில் தேயிலைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட காணியின் அளவு 2010 தொடக்கம் 2016 வரை பாரியளவில் அதிகரித்துள்ளது. உலகில் மொத்த தேயிலை விரிவாக்கல் செயற்பாடுகளில் 94% திற்கு உரிமை கோரும் தேயிலை செய்கையை மேற்கொள்ளும் 10 பிரதான நாடுகள் அடங்குகின்றன.

### 2.5.2 உலகளாவிய தேயிலை நுகர்ச்சி

2014 - 2016 ஆகிய மூன்று ஆண்டு காலப்பகுதியில் வருடாந்தத் தேயிலை நுகர்ச்சி மற்றும் மூன்று ஆண்டுகால சாதாரண தேயிலை நுகர்ச்சி தொடர்பில் வெளியிடப்பட்ட வருடாந்த உயரிய தேயிலை நுகரக்கூடிய நாடு சீனாவாகும். அது 1,791.33 மில்லியன் கிலோ கிராமாகும். இருப்பினும் தனிநபர் தேயிலை நுகர்வு 1.31 கிலோகிராம் என வீழ்ச்சி கண்டுள்ளது. வருடாந்தத் தேயிலை நுகர்வு 247.33 மில்லியன் கிலோகிராம் என துருக்கி உயரிய தனிநபர் தேயிலை நுகர்விற்கு உரிமை கோரி 3.20 கிலோகிராம் அளவு பதிவாகியுள்ளது.

அட்டவணை 2.14 நாடுகளுக்கமைய நுகர்வு தொடர்பான புள்ளிவிபரங்கள்

| நாடுகள் | 2010-12 | | 2011-13 | | 2012-14 | | 2013-15 | | 2014-16 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Total | p hd | Total | p hd | Total | p hd | Total | p hd | Total | p hd |
| லிபியா | 13.6 | 2.39 | 13.23 | 2.34 | 15.27 | 2.7 | 13.37 | 2.19 | 14.77 | 2.4 |
| ஆப்கானிஸ்தான் | 49.27 | 1.97 | 55.9 | 2.19 | 63.03 | 2.73 | 64.77 | 2.44 | 59.4 | 2.2 |
| துருக்கி | 240.8 | 3.24 | 242 | 3.22 | 236.81 | 3.18 | 241.67 | 3.14 | 247.33 | 3.2 |
| ஐக்கிய ராச்சியம்(a) | 123.51 | 1.97 | 122.21 | 1.91 | 114.97 | 1.81 | 111.64 | 1.74 | 109.49 | 1.68 |
| மொராக்கோ | 56.17 | 1.74 | 56.5 | 1.73 | 55.1 | 1.74 | 58.53 | 1.73 | 63.58 | 1.86 |
| அயர்லாந்து குடியரசு | 8.51 | 1.9 | 7.44 | 1.62 | 7.18 | 1.56 | 7.39 | 1.6 | 7.7 | 1.66 |
| தாய்வான் | 44 | 1.64 | 42.53 | 1.59 | 42.1 | 1.56 | 41.5 | 1.53 | 39.01 | 1.44 |
| கட்டார் | 2.53 | 1.46 | 2.67 | 1.45 | 2.73 | 1.61 | 3.08 | 1.81 | 3.34 | 1.51 |
| இலங்கை | 27.79 | 1.33 | 27.49 | 1.35 | 27.47 | 1.36 | 27.91 | 1.35 | 28.07 | 1.34 |
| ஹெங்ஹெங் | 9.48 | 1.34 | 9.52 | 1.33 | 9.73 | 1.38 | 10.1 | 1.39 | 10.71 | 1.46 |
| சிலி | 21.4 | 1.24 | 21.13 | 1.21 | 20.87 | 1.22 | 20.96 | 1.18 | 21.11 | 1.17 |
| சிரியா | 26.5 | 1.25 | 24.13 | 1.14 | 19.03 | 0.96 | 17.92 | 0.86 | 13.1 | 0.78 |
| எகிப்து | 91.63 | 1.14 | 94.37 | 1.14 | 100.78 | 1.22 | 96.65 | 1.11 | 93.22 | 1.05 |
| ஈராக் | 40.35 | 1.21 | 37.65 | 1.11 | 34.52 | 1.18 | 33.88 | 0.95 | 35.87 | 0.98 |
| ஈரான் | 74.7 | 0.99 | 82.8 | 1.07 | 79 | 1.05 | 74.27 | 0.95 | 70.93 | 0.9 |
| சீனா | 1279.33 | 0.95 | 1408.67 | 1.04 | 1537 | 1.14 | 1665.33 | 1.22 | 1791.33 | 1.31 |
| இந்தியா | 871.67 | 0.73 | 889.67 | 0.73 | 908 | 0.74 | 927 | 0.75 | 946.67 | 0.78 |
| சி. ஐ. எஸ | 275.29 | 0.99 | 279.84 | 0.96 | 275.75 | 0.94 | 251.67 | 0.88 | 256.73 | 0.9 |
| பாகிஸ்தான் | 125.92 | 0.74 | 128.02 | 0.72 | 131.92 | 0.73 | 138.79 | 0.74 | 154.5 | 0.81 |
| ஐக்கிய அமெரிக்கா | 126.65 | 0.41 | 127.76 | 0.41 | 128.33 | 0.41 | 129.67 | 0.41 | 129.99 | 0.40 |
| ஜப்பான் | 122.29 | 0.96 | 120.23 | 0.94 | 116.93 | 0.91 | 112.63 | 0.89 | 107.41 | 0.84 |
| இந்தோனேசியா | 75 | 0.32 | 84.67 | 0.34 | 84 | 0.34 | 81 | 0.32 | 86 | 0.34 |
| பங்களாதேஷ் | 68.4 | 0.45 | 71.07 | 0.47 | 71.1 | 0.48 | 73.4 | 0.47 | 76.33 | 0.49 |
| போலாந்து | 30.95 | 0.8 | 31.95 | 0.83 | 32.51 | 0.85 | 34.27 | 0.89 | 35.3 | 0.93 |
| ஜேர்மனி | 26.9 | 0.33 | 28.17 | 0.34 | 29.95 | 0.37 | 30.93 | 0.38 | 32.1 | 0.39 |

மூலம் : சர்வதேச தேயிலைக் குழுவின் வருடாந்த புள்ளிவிபர வெளிப்பாடுகள் - 2017
மொத்தம் : கிலோகிராம். மில்லியன்
தனிநபர் : கிலோகிராம

### 2.5.3 உலகளாவிய தேயிலை உற்பத்தி

2017 ஆம் ஆண்டில் உலகளாவிய தேயிலை உற்பத்தி 5.7 பில்லியன் கிலோ கிராம் வரை எட்டியுள்ளது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2.2% வளர்ச்சி காண்பிக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டுக்காக சீனா, இந்தியா, கென்யா, இலங்கை, துருக்கி, வியட்நாம் மற்றும் இந்தோனேசியா மொத்தமாக உலகாளவிய தேயிலை ஏற்றுமதியில் 90% தை உற்பத்தி செய்துள்ளது. இந்தியா மற்றும் சீனா தொடர்ந்தும் மிகப் பெரிய தேயிலையை உற்பத்தி செய்துள்ள போதிலும் இவர்கள் நாட்டிற்குள் குறிப்பிடத்தக்களவு தேயிலை நுகர்வதனால் உலகின் மிகப் பெரிய தேயிலை ஏற்றுமதியாளராக கென்யா மாற்றம் பெற்றுள்ளது. சீனா தேயிலை ஏற்றுமதியில் இரண்டாவது இடத்தை பெற்றுள்ளதுடன் இலங்கை மூன்றாவது இடத்தில் உள்ளது.

நான்காவது மிகப்பெரிய உற்பத்தியாளராக தமது இடத்தை தக்க வைத்துக் கொள்ள இலங்கைக்கு முடிந்துள்ளதுடன் ஐந்தாவது, ஆறாவது மற்றும் ஏழாவது உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் அதிகரிக்கும் முன்னேற்றங்கள் காண்பிக்கப்படுவதுடன் சமீபத்தில் இலங்கைக்கு சவால் மிகுந்த மட்டத்தில் முன்னேற்றமடையக்கூடிய நிலைமைகள் காணப்படவில்லை.

2,550 மில்லியன் கிலோ கிராம் உற்பத்தி செய்து சீனா தேயிலை உற்பத்தியில் அதிஉயரிய மட்டத்தில் காணப்படுவதுடன், இந்தியா இவ்வாண்டில் வருடாந்த உற்பத்தியில் 1,279 மில்லியன் கிலோகிராமை உற்பத்தி செய்து இரண்டாவது இடத்தில் உள்ளது. கென்யா 440 மில்லியன் கிலோகிராமை உற்பத்தி செய்து மூன்றாவது இடத்தில் உள்ளது.

வரைபு 2.5 உலக தேயிலை உற்பத்தி தொடர்பான புள்ளிவிபரம்




மூலம் : சர்வதேச தேயிலைக் குழுவின் வருடாந்த புள்ளிவிபர வெளிப்பாடுகள் 2017

### 2.5.4 உலகளாவிய தேயிலை விற்பனை

2017 ஆம் ஆண்டில் கொழும்பு தேயிலை ஏல விற்பனை மூலம் 1 கிலோகிராம் தேயிலைக்கான சாதாரண விலை 4.07 அ.டொலரை கொண்டுள்ளதுடன், 296 மில்லியன் கிலோகிராம் அளவு ஏல விற்பனை செய்துள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் மொம்பாசா ஏலவிற்பனை மூலமும் 398 மில்லியன் கிலோகிராமை விடக் கூடுதலான அளவு ஏலவிற்பனை செய்துள்ளதுடன், கல்கத்தா ஏல விற்னையில் 2017 ஆம் ஆண்டில் 168 மில்லியன் கிலோகிராம் அளவு பதிவாயிருந்தது.

அட்டவணை 2.15: பிரதான தேயிலை ஏல விற்பனை புள்ளிவிபரங்கள்
(அளவு - கிலோகிராம் மில்லியன் / சாதாரண அலகு விலை - அ.டொலர் / கிலோகிராம்)

| ஏல விற்பனை மத்திய நிலையம் | 2014 | | 2015 | | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அளவு | விலை | அளவு | விலை | அளவு | விலை | அளவு | விலை |
| சிட்டகொங் | 67 | 2.19 | 64 | 2.41 | 72 | 2.55 | 80 | 2.45 |
| கொச்சின் | 53 | 1.66 | 55 | 1.55 | 47 | 1.74 | 49 | 1.81 |
| கொழும்பு | **334** | **3.56** | **316** | **2.99** | **277** | **3.22** | **296** | **4.07** |
| குவஹாத்தி | 129 | 2.32 | 145 | 2.16 | 139 | 2.05 | 166 | 2.16 |
| ஜகாத்தா | 26 | 1.66 | 20 | 1.56 | 27 | 1.62 | - | - |
| கெல்கத்தா | 142 | 2.65 | 143 | 2.47 | 142 | 2.41 | 168 | 2.46 |
| லிம்பே | 9 | 1.43 | 8 | 1.56 | 9 | 1.55 | 9 | 1.84 |
| மொம்பாசா | 390 | 2.03 | 359 | 2.73 | 401 | 2.29 | 398 | 2.81 |

மூலம் : சர்வதேச தேயிலைக்குழு இணையத்தளம்

கடந்த 03 ஆண்டு காலப்பகுதிக்குள் கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் சாதாரண விலை பதிவாகியது 2017 ஆம் ஆண்டில் ஒரு கிலோகிராமிற்காக 4.00 அ.டொலரை தாண்டிய ஒரே ஏல விற்னையாக கொழும்பு தேயிலை ஏல விற்பனை காணப்பட்டது. கவனத்திற்குட்படுத்தப்பட்ட வலயப் பரம்பலில் மொம்பாசா மற்றும் கெல்கத்தா ஏல விற்பனைகளின் சாதாரணவிலை 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது உயரிய பெறுமதியைக் காண்பிக்கின்றது. மொம்பாசா இரண்டாவதாக உயரிய சாதாரண ஏல விற்பனை விலையினைப் பதிவு செய்துள்ளதுடன் கெல்கத்தா எல விற்பனை ஒரு கிலோகிராமிற்கு 2.46 அ.டொலர் கொண்டதாக மூன்றாவது இடத்தில் உள்ளது.

## 2.5.5 உலகளாவிய தேயிலை ஏற்றுமதி

வரைபு 2.6 பிரதான தேயிலை ஏற்றுமதியாளர்கள்




| | Kenya | China | Sri lanka | India | Vietnam |
|---|---|---|---|---|---|
| 2014 | 499.4 | 301.5 | 317.8 | 204.6 | 132.0 |
| 2015 | 443.5 | 325.0 | 301.4 | 225.2 | 133.5 |
| 2016 | 480.3 | 328.7 | 280.9 | 218.4 | 142.0 |
| 2017 | 415.7 | 355.3 | 278.2 | 240.7 | 134.0 |

நாடுகள்

மூலம்: மூலம் - ச.தே.கு வருடாந்த மீளாய்வு 2017
குறிப்பு - இலங்கைக்குரியதாக உரிய புள்ளிவிபரங்களின் மீது ஏற்றுமதிக்குரிய எண்ணிக்கை உள்ளடக்கப்படவில்லை.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2017 ஆம் ஆண்டில் உலகளாவிய தேசிய ஏற்றுமதி 19.5 மில்லியன் கிலோகிராம் (1.1%) தினால் வீழ்ச்சி அடைந்தது. இவ்வாண்டில் தேயிலை ஏற்றுமதி செய்த ஏனைய பிரதான நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது சீனா மற்றும் இந்தியா தமது ஏற்றுமதி அளவினை அதிகரித்ததுடன் அது 8.1% மற்றும் 10.2% அதிகரிப்பாகும். மூன்று பிரதான மிகப் பாரிய தேயிலை ஏற்றுமதியாளர்களாக கென்யா, சீனா மற்றும் இலங்கை உலகளாவிய தேயிலை ஏற்றுமதியில் 59% தை மேற்பட்ட அளவு பங்கிற்கு பங்களிப்பு செய்கின்றது.

முன்னணி தேயிலை ஏற்றுமதியாளர்களில் 2016 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானம் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை மூலம் காண்பிக்கப்பட்டுள்ள தேயிலை ஏற்றுமதி மூலம் கூடுதலான வருமானத்தை சீனா ஈட்டியுள்ளதாக இதன் மூலம் தெரியவந்துள்ளது. இரண்டாவது இடத்திலுள்ள இலங்கைக்கு தூய்மையான இலங்கைத் தேயிலை ஏற்றுமதி மூலம் 1.2 பில்லியன் அ.டொலர் கைத்தொழில் நிலைமையினை தொடர்ந்தும் பாதுகாக்க முடிந்தது. இதேவேளை கென்யா தேயிலை ஏற்றுமதி மூலம் மூன்றாவது இடத்தை எட்டி வருமானத்தை ஈட்ட முடிந்துள்ளதாக காணப்படுகின்றது.

அட்டவணை 2.16 உயரிய ஏற்றுமதி வருமானம் (2017)

| நாடுகள் | ஏற்றுமதி வருமானம் ரூபா. மில்லியன் |
|---|---|
| இலங்கை | 1,269.00 |
| கென்யா | 1,189.74 |
| சீனா | 1,484.91 |
| இந்தியா | 634.82 |
| வியட்நாம் | 236.32 |
| இந்தோனேசியா | 113.37 |

மூலம் : சர்வதேச தேயிலைக் குழுவின் வருடாந்த புள்ளிவிபர வெளிப்பாடு - 2017

## 2.6 இலங்கை தேயிலை சந்தை

அண்மித்த ஆண்டுகளில் குறைந்தபட்ச தேயிலை அளவு ஏற்றுமதி செய்யப்பட்ட போதிலும் உயரிய அலகு சாதாரணமாக FOB பெறுமதியினை பேண முடிந்தமையினால் 2017 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானம் மூன்றாவது உயரிய பெறுமதியினை பதிவு செய்தது. கொள்ளளவிற்கமைய கருத்திற் கொள்ளும் போது 2014 ஆம் ஆண்டில் பதிவாகிய உயர்ந்தபட்ச கொள்ளளவு 318 மில்லியன் கிலோ கிராமிற்கு இணைவாக ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 278 மில்லியன் கிலோ கிராமை விடக் குறைந்த பெறுமதியைக் காண்பிக்கின்றது.

பிரதான கொள்வனவாளரான சிரியாவின் எல்லைப் பிரதேசத்தை நிர்வகித்தல் மற்றும் வருமானத்தை ஈட்டுவதற்காக சட்டவிரோதக் குழுவினர் உட்பட புதிய பிரபுக்களை உருவாக்குவதற்கு மோதல் நிலைமைகள் மூலம் வழிவகுத்துள்ளன. லிபியாவை போன்று ஆயுதக் குழுக்கள் அரச வளங்களை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை சுவிகரித்து இலாபகரமான நிதிக் கையாளுகைகளை விருத்தி செய்துள்ளனர். ஈராக்கில் காணப்படும் சட்டவிரோத பொருளாதாரச் செயற்பாடுகள் மூலம் ISIS போன்ற குழுக்களுக்குள் நீண்டகாலமாக வளங்களை சேகரிக்கும் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமைகள் காரணமாக அரசாங்கத்தின் ஆதிக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்தும் முயற்சியில் குறிப்பிடத்தக்களவு சவால்கள் காணப்படுவதுடன் இதன் மூலம் ஆண்டு பூராகவும் பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்டுள்ள இராட்சியங்களில் அரசியல் பொருளாதாரத்தில் நீண்ட கால அழுத்தங்கள் ஏற்படக்கூடியதாக காணப்படுகின்றது.

எனவே 2017 ஆம் ஆண்டில் சிரியா மற்றும் லிபியா இலங்கையிலிருந்து தேயிலை ஏற்றுமதி செய்வதில் குறைவு பரிவாகியுள்ளது. வரலாற்றில் முதற் தடவையாக இலங்கைத் தேயிலை வகைகளின் பிரதான கேந்திர நிலையமாக 13.6% இலங்கை தேயிலையினை ஏற்றுமதி செய்யும் நாடாக துருக்கி காணப்படுகின்றது. 12% பங்குகளுக்கு உரிமை கோரும் ஈராக் இரண்டாவது இடத்தில் காணப்படுவதுடன், 11.8% தை இறக்குமதி செய்து ரஷ்யா மூன்றாவது இடத்தை எட்டியுள்ளது. லிபியா, துருக்கி, ஈராக் மற்றும் ஜோர்தானுக்கு பொருளாதார சிரமங்களை ஏற்படுத்தக்கூடிய உள்நாட்டு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இலங்கையிலிருந்து தேயிலை இறக்குமதி செய்வதில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் பதிவாகியுள்ளது.

### 2.6.1 ரஷ்யா மற்றும் பொதுநலவாய சபையின் சுயாதீன இராட்சியம் (CIS வலயம்)

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரஷ்ய கூட்டரசாங்கம் மற்றும் பொதுநலவாய சபையின் சுயாதீன இராட்சியம் (CIS) வலயத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட மொத்தத் தேயிலை அளவு கீழக் குறிப்பிட்ட அட்டவணை மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு பொதுநலவாய சபை சுயாதீன இராட்சியம் (CIS) வலயத்திற்கு இலங்கை 51,632 மெ.தொன் தேயிலையினை ஏற்றுமதி செய்துள்ளது. இது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 386 மெ.தொன் என்ற சிறிதளவு குறைவினைக் காண்பிக்கின்றது. 2017 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி அளவு (278,195 மொ.தொன்) 18.56% பொதுநலவாய சபை சுயாதீன இராட்சியம் (CIS) வலயத்திற்கு இறக்குமதி

அட்டவணை 2.17 ரஷ்யா மற்றும் பொதுநலவாய சபை சுயாதீன வலய இறக்குமதி செய்யப்பட்ட மொத்தத் தேயிலை அளவு

| நாடுகள் | 2017 (கிலோ.கிராம்) | 2016 (கிலோ.கிராம்)) | வித்தியாசயம் (கிலோ.கிராம்)) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|---|
| ரஷ்யா | 32,794,648 | 34,079,116 | (1,284,468) | (3.77) |
| உக்ரேன் | 3,756,570 | 4,634,113 | (877,543) | (18.94) |
| அசர்பைஜான் | 12,270,316 | 10,543,827 | 1,726,489 | 16.37 |
| கசகஸ்தான் | 658,678 | 463,810 | 194,868 | 42.01 |
| உஸ்பெகிஸ்தான் | 603,812 | 510,012 | 93,800 | 18.39 |
| கிர்கிஸ்தான் | 711,076 | 912,068 | (200,992) | (22.04) |
| பெலரஸ் | 385,474 | 273,697 | 111,777 | 40.84 |
| மால்டொவா | 82,193 | 130,556 | (48,363) | (37.04) |
| ஜோர்ஜியா | 257,618 | 312,118 | (54,500) | (17.46) |
| தஜிகிஸ்தான் | 61,335 | 82,721 | (21,386) | (25.85) |
| துர்க்மெனிஸ்தான் | 24,186 | 55,210 | (31,024) | (56.19) |
| ஆர்மீனியா | 26,466 | 20,832 | 5,634 | 27.04 |

#### 2.6.1.1 1 ரஷ்யா



நுகர்விற்காக தேயிலை இறக்குதி செய்யும் உலகின் மிகப்பெரிய கூட்டரசாங்கம் 525 மில்லியன அ.டொலர் பெறுமதியான 170 மில்லியன் கிலோகிராம் வருடாந்தம் இறக்குமதி செய்கின்றது. பிரதானமாக கருந்தேயிலை நுகர்வு கொண்ட ரஷ்யாவின் தனிநபர் நுகர்வு 1.2 கிலோகிராமாகும்.

2016 ஆம் ஆண்டில் 164,485 மெ.தொன்னான தேயிலை இறக்குமதி 2017 ஆம் ஆண்டில் 168,785 மெ.தொன்னாக ரஷ்ய சுங்கத் தகவல் முகவர் நிறுவனத்தின் புள்ளிவிபரங்கள் மூலம் காண்பிக்கப்படுகின்றது. இதற்கமைய ரஷ்யாவிற்கு தேயிலை ஏற்றுமதி செய்யும் அளவு 2.61% (4,298 மெ.தொன்) அதிகரிப்புக் காண்பிக்கப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் மொத்த இறக்குமதிப் பெறுமதிக்கமைய 549 மில்லியன் அ.டொலர் தொடக்கம் 525 மில்லியன் அ.டொலர் வரை 4.31% (23.6 மில்லியன் அ.டொலர்) என வீழ்ச்சி கண்டிருப்பதைக் காண முடிகின்றது.

ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவினை நோக்கும் போது இலங்கை தேயிலைக்கு ரஷ்ய தேயிலை சந்தையில் காணப்பட்ட முன்னுரிமை கடந்த 03 ஆண்டுகளுக்குள் வீழ்ச்சியடைந்ததாக காண முடிகின்றது. ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவில் சுமார் 29% சந்தைப் பங்குகளுடன் இந்தியா 2017 ஆம் ஆண்டில் ரஷ்யாவிற்காக பிரதான தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கிடையே இலங்கை 22% சந்தைப் பங்கிற்கு உரிமைகோரி இரண்டாவது இடத்தை எட்டியுள்ளது. இருப்பினும் பெறுமதி அடிப்படையில் நோக்கும் போது இலங்கை தொடர்ந்தும் 33% பங்குகள் கொண்டதாக முன்னனியில் உள்ளது. ரஷ்யாவிற்கு தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இலங்கையின் ஏனைய போட்டியாளர்களாக காணப்படுவது கென்யா, வியட்நாம், சீனா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளாகும்.

இலங்கை சுங்கத்தின் மூலம் வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்களுக்கமைய 2016 ஆம் ஆண்டில் 34,079 மெ.தொன் தொடக்கம் 2017 ஆம் ஆண்டில் 32,795 மெ.தொன் வரை ரஷ்ய கூட்டரசாங்கத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட இலங்கைத் தேயிலையின் அளவு 3.8% (1,284 மெ.தொன்) அளவு வீழ்ச்சியடைந்து. ஆரம்பப் பொதியிடப்பட்ட தேயிலை அளவு 2016 ஆம் ஆண்டில் 6,373 மொ.தொன் என்பதுடன் 2017 ஆம் ஆண்டில் 5822 என்ற அடிப்படையில் 8.65% (-551 மொ.தொன்) அண்மித்த விகிதாசாரத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அத்துடன் கடந்த ஆண்டுக்கு இணைவாக தேயிலை பைத் துறை மற்றும் பொதியிடல் துறையில் தொடராக 393 மெ.தொன் மற்றும் 188 மெ.தொன்னினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கைத் தேயிலையில் கூடுதலான அளவு ரஷ்யாவிற்கு இறக்குமதி செய்யப்படுவது மொத்த அடிப்படையிலாகும். 2017 ஆம் ஆண்டில் 82.2% மொத்தத் தேயிலை அளவு அந்நாட்டினால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. கூடுதலான அளவில் மொத்த அடிப்படையில் தேயிலையை இறக்குமதி செய்வதினால் ரஷ்யாவின் தேயிலை இறக்குமதி தீர்வை வரி கட்டமைப்பிற்கமைய தொகைத் தேயிலைக்காக 0% தீர்வை வரி அறவிடப்படுவதுடன், பொதியிடப்பட்ட தேயிலைக்காக 12.5% தீர்வையும் அறவிடப்படுகின்றது. ரஷ்யாவில் உள்நாட்டுத் தேயிலை பொதியிடல் கைத்தொழிலில் காணப்படும் முன்னேற்றங்களைக் கருத்திற் கொண்டு மொத்த அடிப்படையில் தேயிலை இறக்குமதி செய்வதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளன.

மொத்தத் தேயிலை ஏற்றுமதி வருமானம் 2016 ஆம் ஆண்டில் 20,403 மில்லியன் ரூபாவாக காணப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டில் அது 25,965 மில்லியன் ரூபாவால் குறிப்பிடத்தள்ளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 2016 ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2017 ஆம் ஆண்டில் ஏற்றுமதி அளவின் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இருப்பினும் தேயிலை சந்தையில் விலையில் அதிகரிப்பு காரணமாக ரஷ்யாவிற்கு தேயிலை ஏற்றுமதி மூலம் பெறப்பட்ட வருமானம் 27.2% தினால் சிறிதளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

### 2.6.1.2 யுக்ரேன்



இலங்கை சுங்கப் பிரிவு மூலம் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்களுக்கமைய 2017 ஆம் ஆண்டில் யுக்ரேனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட இலங்கைத் தேயிலை அளவு 3757 மெ.தொன் ஆகும். அதன் பெறுமதி 3348 மில்லியன் ரூபாவாகும். யுக்றேனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவில் சுமார் 77% மொத்த அடிப்படையில் என்பதுடன், 19.4% தேயிலை பொதியிடல் அடிப்படையிலும் 3.6% தேயிலைப் பை அடிப்படையிலும் அனுப்பப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டு பெறுமதி 3203 மில்லியன் ரூபாவினைக் கொண்ட 4635 மொ.தென் அளவு யுக்றேனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய 2017 ஆம் ஆண்டின் பெறுமதிக்கமைய 4.5% அதிகரிப்பு மற்றும் அளவிற்கமைய 19% வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. யுக்றேனுக்கு ஏற்றுமதி செய்த இலங்கைத் தேயிலை அளவு வீழ்ச்சியடைவதற்காக கொழும்புத் தேயிலை ஏல விற்பனை விலையில் துரித அதிகரிப்பு காரணமாக அமைந்தது. அத்துடன் தேயிலை ஏற்றுமதி விலைக்கு அதிகரிப்பும் காரணமாக அமைந்தது.

வருடாந்தம் ஒரு யுக்றேன் நாட்டவர் 500-600 கிராம் தேயிலைக்கு இடைப்பட்ட அளவு நுகர்வதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. சந்தையில் வருடாந்தம் 18-20 ஆயிரம் தொன் கொள்ளளவு காணப்படுகின்றது.

யுக்றேன் புள்ளிவிபரவியல் முகவர் நிறுவனத்திற்கமைய 2016 ஆம் ஆண்டில் 68 மில்லியன் அ.டொலர் பெறுமதியுடன் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட மொத்தத் தேயிலை அளவு 18,311 மெ.தொன் ஆகும். இலங்கை அளவிற்கமைய 30% சந்தைப் பங்குகளுடன் யுக்றேன் தேயிலை சந்தையில் முன்னணியில் இருப்பதுடன், ஏனைய பிரதான விநியோகஸ்தர்களாக இந்தியா, ஐக்கிய அரபு எமிர் இராட்சியம், சீனா, கென்யா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் காணப்படுகின்றன.

### 2.6.1.3 அசர்பைஜான்



அசர்பைஜானில் கூடுதலான பிரபல்யமிக்க பாணமாக தேயிலை காணப்படுகின்றது. அசர்பைஜான உலகில் கூடுதலான தனிநபர் தேயிலை நுகர்வினைக் கொண்ட நாடாகும். அசர்பைஜானின் இக் கலாசாரம் நீண்டகாலம் தொடக்கம் காணப்படுகின்றது. இந்நாட்டு மக்களின் நாளாந்த வாழ்விற்கு அத்தியாவசிய பிரிவாக இது மாற்றமடைந்துள்ளது.
2016 ஆம் ஆண்டில் அசர்பைஜான் பிரதான தேயிலை விநியோகஸ்தராக மாற்றம் பெற்று 90% க்கு மேற்பட்ட சந்தைப் பங்குகளுக்கு உரிமை கோர இலங்கைக்கு முடிந்துள்ளது.

2016 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து அசர்பைஜானுக்கு 10,543 மெ.தொன் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டில் அது 12,270 மெ.தொன் ஆகும். இதற்கமைய 16.37% (1,726 மெ.தொன்) அதிகரிப்பு காண்பிக்கப்பட்டுள்ளது. ஈட்டப்பட்ட வருமானத்தில் அதிசிறந்த அதிகரிப்பு காணப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டின் வருமானமான 6,606 மில்லியன் ரூபா தொடக்கம் 9,582 மில்லியன் ரூபா வரை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் தேயிலை விலை அதிகரிப்பும் இதற்குக் காரணமாக அமைந்துள்ளது.
அசர்பைஜானில் காணப்படும் உள்நாட்டுத் தேயிலை பொதியிடல் கைத்தொழிலுக்காக 96% மூலப்பொருள் கொண்ட தேயிலை அளவு மொத்த அடிப்படையில் இலங்கையிலிருந்து அசர்பைஜானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

### 2.6.1.4 கசகஸ்தான



கசகஸ்தானில் கூடுதலான சம்பிரதாய பாணமாக தேயிலை அதன் சகல வயதுப் பிரிவினா வருமான மட்டங்களிலுள்ள மக்கள் நாளாந்தம் நுகர்கின்றனர். இதற்கு மேலதிகமாக தடிமல், வயிற்றுவலி போன்ற பல நோய்கள் குணமடைவதற்காகவும் பயன்படுத்தக்கூடிய இயற்கையான மற்றும் சுகாதார பணமாக கசகஸ்தானில் தேயிலைக்கு கூடுதலான வரவேற்பு காணப்படுகின்றது. வாடிக்கையாளரின் சுகாதாரம் சார்ந்த விளக்கம் அதிகரிக்கின்றமை விற்பனைக்குக் காரணமாக அமைந்துள்ளது. கசகஸ்தானுக்கு இலங்கையிலிருந்து தேயிலை ஏற்றுமதி 2017 ஆம் ஆண்டில் கூடுதலாக அதிகரித்துள்ளது. இலங்கை சுங்கத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்களுக்கமைய 2014 ஆம் ஆண்டில் ஏற்றுமதி அளவு 464 மெ.தொன் ஆகும். 2017 ஆம் ஆண்டில் இது 195 மெ.தொன் ஆக அதிகரிப்பு காண்பிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தேயிலை ஏற்றுமதியின் மூலம் ஈட்டப்பட்ட வருமானமும் 286 மில்லியன் ரூபா தொடக்கம் 540 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது.

### 2.6.1.5 உஸ்பேகிஸ்தான



உஸ்பேகிஸ்தானுக்கு இடையிலான தேயிலை நுகர்வு தொடர்பில் பாரம்பரிய சம்பிதாயங்கள் காணப்படுகின்றன. சுமார் 20 மில்லியன் கொண்ட தேயிலை சந்தை காணப்படுகின்றது. சுமார் 95% சந்தைப் பங்குகளுடன் சீனா பிரதான விநியோகஸ்தர் என்பதுடன், உஸ்பேகிஸ்தான் சந்தையில் முக்கியமாக பச்சைத் தேயிலைக்கே கூடுதலான பிலரபல்யம் காணப்படுகின்றது.

தேயிலைச் செய்கையாளர்களினால் தேயிலை உற்பத்தி மேற்கொள்ளாத போதிலும் உஸ்பேகிஸ்தானில் போதையற்ற பிரதான பாணமாக தேயிலை தொன்றுதொட்டு காணப்படுகின்றது. இந்நிலைமை கடந்த இரு தசாப்தத்திற்குள் ஓரளவு குறைவு காண்பிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணமாக அமைந்துள்ளது. தாங்கிக் கொள்ள முடியாத விலைகளின் கீழ் மது போதையற்ற வேறு பாண வகைகள் பிரபல்யமடைவதாகும். உஸ்பேகிஸ்தானுக்கு இலங்கைத் தேயிலை ஏற்றுமதி 2016 ஆம் ஆண்டில் 510 மெ.தொன் தொடக்கம் 2017 ஆம் ஆண்டில் 604 மெ.தொன் வரை 18% அதிகரிப்பு காண்பிக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு இலங்கைத் தேயிலை உஸ்பேகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானமும் 2016 ஆம் ஆண்டுக்கு இணைவாக 137 மில்லியனினால் அதிகரித்துள்ளது.

### 2.6.1.6 கிர்கிஸ்தான்



கிர்கிஸ்தான் பிரதானமாக கருந்தேயிலை அருந்தும் நாடு என்பதுடன், சந்தை மூலங்களில காண்பிக்கப்பட்டுள்ளவாறு அந்நாட்டின் வருடாந்த தேயிலை நுகர்வு 4000 மெ.தொன் எனக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அங்கு 5.7 மில்லியன் சனத்தொகை காணப்படுவதுடன் வருடாந்த தனிநபர் தேயிலை நுகர்வு சுமார் 700 கிராமாகும். மொத்தத் தேயிலை சந்தையில் 90% கொண்ட கருந்தேயிலை மிகவும் பிரபல்யமாக மாற்றம் பெற்றுள்ளது.

கிரிகிஸ்தானுக்கான பாரிய தேயிலை ஏற்றுமதியாளராக இலங்கை 2016 ஆம் ஆண்டு சுமார் 25% தை அண்மித்த சந்தைப் பங்குகளுக்கு உரிமை கோருகின்றது. இலங்கை சுங்கத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்களுக்கமைய கிரிகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட நேரடித் தேயிலை, ஏற்றுமதி செய்யப்பட்ட இலங்கை தேயிலையின் அளவு 2016 ஆம் ஆண்டு 912 மெ.தொன் என்பதுடன் 2017 ஆம் ஆண்டில் இது 711 மெ.தொன்னான காணப்பட்டது. இதற்கமைய 2017 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவு 22% தினால் வீழ்ச்சியடைந்துள்ளமையைக் காண முடிந்திருந்தது.

அண்மித்த அளவாக சுமார் 90% தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பது தொகை அடிப்படையிலாகும். 2017 ஆம் ஆண்டுக்காக இச் சந்தைக்கு பொதியிடப்பட்ட தேயிலை ஏற்றுமதி 62% தினால் வீழ்ச்சி கண்டுள்ளது. இலங்கை தேயிலை ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்ட வருமானமும் 2016 ஆம் ஆண்டில் 555 மில்லியன் ரூபா தொடக்கம் 2017 ஆம் ஆண்டில் 543 மில்லியன் வரை சிறிதளவு (12 மில்லியன் ரூபா) வீழ்ச்சியடைந்திருந்தது.

### 2.6.1.7 பெலரஸ்



9.5 மில்லியன் சனத்தொகை வாழும் பெலரஸ் இல் சந்தைத் தகவல்களுக்கமைய மொத்தத் சந்தை வருடாந்தம் 5000 - 7000 மெ.தொன்னுக்கு இடைப்பட்டதாகும். 2017 ஆம் ஆண்டில் சுமார் 70% தேயிலை ரஷ்யாவின் எல்லைப் பிரதேசம் ஊடாக கிடைக்கப் பெற்றுள்ளது. பெலரஸ்சின் தேசிய புள்ளிவிபரவியல் குழுவின் தகவல்களுக்கமைய 2017 ஆம் ஆண்டுக்குள் 43 மில்லியன் அ.டொலர் பெறுமதியான அந்நாட்டிற்கு தேயிலை 5,877 மெ.தொன் அளவு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

பெலரஸ் இராட்சியத்திற்கு தேயிலை ஏற்றுமதி செய்யும் போது முதன்மை நிலை கிடைக்கப் பெறுவது சுமார் 70% அளவு சந்தைப் பங்குகளுக்கு உரிமை கோரும் ரஷ்யாவிற்காகும். இலங்கையின் பிரதான வழங்குனராக சந்தையில் 8.2% பங்குகளுக்கு உரிமை கோரப்படுகின்றது. ஏனைய விநியோகஸ்தர்களாக வியட்நாம், சீனா, போலாந்து மற்றும் யுக்றேன் ஆகிய நாடுகளுக்கு தொடராக 3.87%, 1.26%, 1.23% மற்றும் 1.05% மாக சந்தைப்பங்குகளுக்கு உரிமை கோரப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டில் இலங்கை 474 மில்லியன் ரூபா பெறுமதியான 385 மெ.தொன் தேயிலை அளவு பெலரஸ் இராட்சியத்திற்கு ஏற்றுமதி செய்திருந்தது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது பெலரஸ்க்கு இலங்கைத் தேயிலை ஏற்றுமதியின் பெறுமதிக்கமைய 177 மில்லியன் ரூபா மற்றும் அளவையியல் ரீதியாக 111 மெ.தொன்னை விட அதிகமான அளவு 2017 ஆம் ஆண்டில் அனுப்பப்பட்டுள்ளது. பெலரஸ்க்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த இலங்கை தேயிலை அளவில் 99% மானவைகள் ஆரம்பத்தில் பொதியிடப்பட்ட அடிப்படையைக் கொண்டவைகளாகும்.

### 2.6.1.8 மொல்டோவா



மோல்டோவாவில் வாடிக்கையாளர்களுக்கிடையே மிகவும் பிரபல்ய-மான பாணமாக தேயிலை இனங்காணப்பட்டுள்ளது. மோல்டோவா ரி.என்.எஸ் சந்தை ஆராய்ச்சிகளுக்கமைய மோல்டோவா சனத்தொகையின் 68.7% மான குறைந்த பட்சமானவர்கள் நாளொன்றுக்கு ஒரு தடவையேனும் தேநீர் அருந்துகின்றனர். உலகின் தனிநபர் தேயிலை அளவு கூடுதலாகக் காணப்படுவது மோல்டோவாவில் ஆகும் அது ஆண்டொன்றுக்கு 1.40 கிலோ கிராமாகும்.

மோல்டோவாவிக்கு இலங்கைத் தேயிலை ஆண்டொன்றுக்கு 250-350 மெ.தொன் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இது எவ்வாறாக இருப்பினும் கடந்த சில ஆண்டுகளுக்குள் இலங்கைத் தேயிலை மோல்டோவாவிற்கு ஏற்றுமதி செய்யும் போது பாரியளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது. இலங்கை சுங்கத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்களுக்கமைய 2017 ஆம் ஆண்டில் மோல்டோவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை இலங்கையின் அளவு 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 49 மெ.தொன் (37%) இனால் குறைவடைந்துள்ளது. ஏற்றுமதி அளவு 2016 ஆம் ஆண்டு 131 மெ.தொன் காணப்பட்டு 2017 ஆம் ஆண்டளவில் 82 மெ.தொன் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. ஈட்டப்பட்ட வருமானமும் 2016 ஆம் ஆண்டில் 136 மில்லியன் அ.டொலர் என்பதுடன், 2017 ஆம் ஆண்டில் 105 மில்லியன் ரூபா வரை வீழ்ச்சியடைந்துள்ளது. இது 23% வீழ்ச்சியாகும்.

### 2.6.2 மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க சந்தை

மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க வலயம் (**MENA)** இற்கு இலங்கைத் தேயிலை ஏற்றுமதி பகிர்ந்து செல்லும் முறை

இலங்கை சுங்கப் பிரிவிற்கமைய 2017 ஆம் ஆண்டுக்காக மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க வலயத்தில் MENA நாடுகளுக்கு மொத்த, பொதி, பை என்ற அடிப்படையில் இலங்கையிலிருந்து தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள முறைகள் கீழே பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 2.18 மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க சந்தைகளுக்கு இலங்கையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகள் நாடுகளுக்கமைய

| நாடுகள் | பொதி | பக்கட் | பை | ஏனையவை | மொத்தம் (மெ.தொன்) | ஏற்றுமதிப் பங்குகள் |
|---|---|---|---|---|---|---|
| ஈரான் | 26,028 | 1,334 | 21 | 36 | 27,419 | 9.49 |
| ஈராக் | 14,967 | 19,810 | 231 | 25 | 35,033 | 12.12 |
| துருக்கி | 21,228 | 16,307 | 268 | 13 | 37,816 | 13.09 |
| ஐக்கிய அரபு இராட்சியம் | 8,695 | 6,249 | 369 | 472 | 15,785 | 5.46 |
| சிரியா | 4,819 | 1,882 | 684 | 15 | 7,400 | 2.56 |
| லிபியா | 51 | 10,744 | 48 | 766 | 11,609 | 4.02 |
| குவைத் | 135 | 1,690 | 585 | 24 | 2,435 | 0.84 |
| ஜோர்தான் | 307 | 2,153 | 2,219 | 8 | 4,688 | 1.62 |
| சவுதி அரேபியா | 1,552 | 1,888 | 882 | 95 | 4,416 | 1.53 |
| லெபனான் | 128 | 3,717 | 269 | 15 | 4,128 | 1.43 |
| எகிப்து | 509 | 780 | 53 | 18 | 1,360 | 0.47 |
| **மொத்த இலங்கை ஏற்றுமதியில் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க வலயத்தின் இலங்கை தேயிலை அளவு** | **78,419** | **66,555** | **5,628** | **1,488** | **152,089** | **52.63** |

(முழுமையாக பச்சைத் தேயிலை உட்பட ஏனைய மீள் ஏற்றுமதிகள் உள்ளடங்கலான புள்ளிவிபரங்கள்)

2017 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க வலய நாடுகளுக்கமைய தேயிலை ஏற்றுமதி புள்ளிவிபரங்கள் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அமைந்துள்ளன.

அட்டவணை 2.19 : மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க சந்தைகளுக்கு இலங்கையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகள் நாடுகளுக்கமைய

| நாடுகள் | 2016 (மெ.தொன்) | பெறுமதி ரூபா. பில்லியன் | 2017 (மெ.தொன்) | பெறுமதி ரூபா. பில்லியன் |
|---|---|---|---|---|
| ஈரான் | 33,598 | 22.2 | 27,039 | 24.0 |
| ஈராக் | 32,410 | 15 | 34,941 | 21.0 |
| துருக்கி | 27,060 | 14.4 | 37,809 | 27.9 |
| ஐக்கிய அரபு இராட்சியம் | 17,830 | 10.3 | 15,226 | 11.1 |
| சிரியா | 11,963 | 7.8 | 7,276 | 6.1 |
| லிபியா | 12,617 | 6.6 | 10,833 | 7.3 |
| குவைத் | 3,486 | 2.2 | 2,362 | 2.2 |
| ஜோர்தான் | 3,877 | 3.1 | 4,579 | 4.2 |
| சவுதி அரேபியா | 3,989 | 3.1 | 4,129 | 4.0 |
| லெபனான் | 3,447 | 2.5 | 4,089 | 3.7 |
| எகிப்து | 3,048 | 1.6 | 1,358 | 1.0 |
| உப மொத்தம் | 153,325 | 88.8 | 149,642 | 112.4 |
| **மொத்த இலங்கை ஏற்றுமதிப் பெறுமதி** | **280,874** | **176.2** | **278,195** | **222.4** |
| **மொத்த இலங்கை ஏற்றுமதியில் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க வலயத்தின் இலங்கை தேயிலை அளவு** | **54.59%** | **50.40%** | **53.79%** | **50.54%** |

(மூலம் : இலங்கை தேயிலை சபை)

மேற்கூறப்பட்ட அட்டவணையில் தேயிலை மீள் ஏற்றுமதிக்குரியதாக புள்ளிவிபரங்கள் உள்ளடக்கப்படுகின்றது. தேயிலை துனுசியா, கட்டார், ஓமான், பகரீன் மற்றும் ஜெமன் ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்ட மொத்த தேயிலையில் குறிப்பிடத்தக்களவு அமையாமையினால் இதன் போது கருத்திற் கொள்ளப்படாத நிலையில் காணப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டு மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க வலயம் MENA இல் காணப்பட்ட நெருக்கடி நிலைமைகள் மற்றும் பதட்ட நிலைமைகளை கருத்திற் கொள்ளாது உலகின் சகல நாடுகளுக்கும் மொத்த இலங்கைத் தேயிலை ஏற்றுமதியில் 54% அளவிற்காக இவ் வலயத்தில் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. பெறுமதி அடிப்படையிலும் 50.54% பங்களிப்பு பதிவாகியுள்ளதுடன், இது செயற்சாதனை பெறுமதி கொண்ட மாதிரியாகும். மீள் ஏற்றுமதி புள்ளிவிபரங்களைக் கருத்திற் கொள்ளாத சந்தர்ப்பத்தில் 2017 ஆம் ஆண்டில் சகல நாடுகளுக்கும் அனுப்பப்பட்ட தேயிலை 278,195 மெ.தொன் அளவில் ஈரான், துருக்கி, ஐக்கிய அரபு எமிர் இராட்சியம், சிரியா, லிபியா, குவைத், ஜோர்தான், சவுதி அரேபியா, லெபனான் மற்றும் எகிப்து 149,642 மெ.தொன் அளவு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அளவிற்கமைய 53.79% பெறுமதிக்கமைய 50.54% என பங்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இலங்கை தேயிலை வகைகளின் நிலையான நீடித்த செயற்பாடுகளுக்காக MENA வலயத்தின் முக்கியத்துவம் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் 33,598 மெ.தொன் கொள்வனவு செய்து ஈரான் இவ்வாண்டில் 27,039 மெ.தொன் கொள்வனவு செய்து 6,559 மெ.தொன் (19.52%) வீழ்ச்சி காண்பிக்கப்படுகின்றது. வலயத்தின் நான்காவது இடத்திற்கு பாரிய இறக்குமதியாளராக இந்த நாட்டினை இனங்காண முடிகின்றது. இருப்பினும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 22.2 பில்லியனுக்கு இணைவாக 24 பில்லியன் ரூபா பதிவாகியுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மொத்த இலங்கை தேயிலை ஏற்றுமதியின் பெறுமதி 1.8 பில்லியன் ரூபா (8%) தினால் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கையின் பிரதான கொள்வனவாளராக ரஷ்யாவை விட ஈரான் இரண்டாவது இடத்தில் சிறிதளவு கொள்வனவு செய்து காணப்படுகின்றது. (500 தொன்னை விடக் குறைந்த) இது கவனத்திற்குட்படுத்தக்கூடிய விடயமல்ல. இது எவ்வாறாக இருப்பினும் நீண்ட கால கடன் ஈரானுடன் மேற்கொள்ளும் வர்த்தகச் செயற்பாடுகளுக்காக பெரிதும் அழுத்தம்மிக்க காரணிகளாக மாற்றம் பெற்றுள்ளது. அத்துடன் வசதியான ஒழுங்கு விதிகளும் காணப்படுவதில்லை. 01 டொலருக்கு 38,000 தை விட மிகவும் கீழ் மட்டத்தில் ஈரான், ஸ்ரேல் ஆகிய நாடுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. கொள்வனவாளர்கள் / விற்பனையாளர்களுக்கிடையே சிறிதளவு முறன்பாடுகளும் ஏற்பட்டுள்ளன. கொழும்புத் தேயிலை ஏல விற்பனையில் விலைகள் கிரமமாக அதிகரித்துச் செல்வதனால் ஈரான் சந்தையில் இலங்கை தேயிலைக்கு உரிமையற்ற முறையில் இந்தியா தேயிலைகளுக்கு உரித்தாகும் முன்னேற்ற நிலைமைகள் 2016 ஆம் ஆண்டு இறுதிக் காலாண்டு தொடக்கம் காணப்படுகின்றது.

ஈராக் இலங்கை தேயிலையின் மிகப் பெரிய கொள்வனவாளர் என்பதுடன் 2017 ஆம் ஆண்டில் இறுதியாக 34,941 மெ.தொன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டின் இக்காலப்பகுதியில் 32,410 மெ.தொன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய 2,531 மெ.தொன் (7.8%) வளர்ச்சி காண்பிக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட உயரிய எரிபொருள் விலை மற்றும் பாரியளவு மசகு எண்ணெய் விற்பனையாகியதைத் தொடர்ந்து ஈராக் கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் தமது நிலைப்பாட்டினை முன்னெடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் ஈராக்குக்காக இலங்கைத் தேயிலை பொதுவாக FOB விலை கிலோவிற்கு 600.23 ரூபாவாகும்.

துருக்கியின் பாதிப்புமிகந்த வர்த்தக சூழல் உருவாகுவதற்கு பல்வேறுபட்ட விடயங்கள் காரணங்களாக அமைந்தன. அந்நாட்டில் அரசியல் ரீதியிலான பிணக்குகள், எல்லைப் பிரதேசங்களில் காணப்பட்ட பதட்ட நிலைமைகள், உள்நாட்டு எதிர்ப்புக்கள், உள்நாட்டுப் போர், போன்றவைகள் காரணமாக துருக்கியின் லீரா நாணயம் வீழ்ச்சியடைந்ததுடன், அகதிகளின் வருகையும் இதற்குக் காரணமாக அமைந்துள்ளன. இருப்பினும் 2017 ஆம் ஆண்டில் துருக்கி இலங்கைத் தேயிலையின் பிரதான இறக்குமதியாளராகும். துருக்கி 2016 ஆம் ஆண்டில் 27,060 மெ.தொன் தேயிலையினை இறக்குமதி செய்துள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் 37,809 மெ.தொன்னாக இது காணப்பட்டது. இதற்கமைய இவர்களினால் கொள்வனவு செய்யப்பட்ட தேயிலை அளவு 2016 ஆம் ஆண்டுக்கு இணைவாக 10,749 மெ.தொன்னினால் அதிரித்துள்ளது. விகிதாசாரமாக நோக்கும் போது இது 39.72% ஆகம்

விசேடமாக ஈரானுடன் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகச் செயற்பாடுகளின் போது எழுந்த சிரமங்களைக் காரணமாக கொண்டு ஐக்கிய அரபு எமிர் இராட்சியத்தின் பணிகளுக்கு அழுத்தங்கள் ஏற்பட்டு இதன் பெறுபேறாக மீள் ஏற்றுமதி வர்த்தகச் செயற்பாடுகள் பலவீனம் அடைந்தன. புள்ளிவிபரங்களுக்கமைய 2016 ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு எமிர் இராட்சியம் 17,830 மெ.தொன் தேயிலையினை இறக்குமதி செய்வதற்கு இணைவாக 2017 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்டது 15,226 மெ.தொன் ஆகும். இது 2,604 மெ.தொன் (14.6%) குறைவு ஏற்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் இவ்வாண்டில் இலங்கையிலிருந்து தேயிலை ஏற்றுமதி செய்யும் ஐந்தாவது மிகப் பெரிய இறக்குமதியாளராக ஐக்கிய அரபு எமிர் இராட்சியம் காணப்படுகின்றது. மேலும் ரஷ்யாவிற்கு அடுத்ததாக இலங்கையின் பச்சைத் தேயிலை கொள்வனவு செய்யும் இரண்டாவது மிகப் பெரிய ஏற்றுமதியாளராக ஐக்கிய அரபு எமிர் இராட்சியம் காணப்படுகின்றது. அத்துடன் இலங்கையின் ஐந்தாவது மிகப் பெரிய பொதியிடப்பட்ட தேயிலை வர்த்தக மத்திய நிலையமாக ஐக்கிய அரபு எமிர் இராட்சியம் காணப்படுகின்றது.

அட்டவணை 3.5 : சிறந்த உற்பத்தி முறை மதிப்பீடுகள், பிரதேச மட்டத்தில்

| பிராந்தியம் | சிறந்த உற்பத்தி முறை மதிப்பீடு |
|---|---|
| பண்டாரவெல | 38 |
| கம்பொல / ஹட்டன் | 140 |
| இரத்தினபுரி | 38 |
| மாத்தறை | 95 |
| காலி | 107 |
| மதுகம | 66 |
| **மொத்தம்** | **484** |

### ஒ)கழிவுத் தேயிலை செயற்பாட்டு முறைகள

கழிவுத் தேயிலை செயற்பாட்டு முறைகள் எனப்படுவது அழிக்கப்பட்டதாக கழிவுத் தேயிலை வகைகளில் பயன்படுத்தக்கூடிய தேயிலைகளை தேர்ந்தெடுக்கும் செயற்பாடாகும். கழிவுத் தேயிலைகள் சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்ளும் மத்திய நிலையங்களுக்காக அனுமதிப் பத்திரங்களை வழங்கும் செயற்பாடுகள் 2009 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2017 பிரதேசங்களுக்கமைய அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடுகள் 3.7 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஐ) தேயிலைக் கொழுந்து வர்த்தகர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

தேயிலை நிருவாகச் சட்டத்திற்கமைய சகல / தேயிலைக் கொழுந்து வர்த்தகர்கள் தேயிலை ஆணையாளர் பிரிவின் மூலம் வருடாந்த அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தேயிலை ஆணையாளர் பிரிவினால் அனைத்து பதிவு செய்யப்பட்ட தேயிலைக் கொழுந்து வர்த்தகர்களும் மேற்பார்வை செய்யப்படுகின்றனர்.

கீழ்க் குறிப்பிட்ட அட்டவணைகள் மூலம் பிரதேச மட்டத்தில் தேயிலைக் கொழுந்து வர்த்தகர்களின் பரம்பல் காண்பிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.6 2016 ஆம் ஆண்டு காலத்தின் போது விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை

| உதே.ஆ - வலயம் | 2017.01.01 ஆம் திகதியன்று அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள வர்த்தகர் எண்ணிக்கை | அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தல் | புதிதாக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் | 2017.12.31 ஆம் திகதியன்று கொழுந்து வர்த்தகத்திற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பண்டாரவெல | 170 | 160 | 10 | 170 |
| கம்பொல / ஹட்டன் | 280 | 248 | 35 | 283 |
| மாத்தறை | 322 | 291 | 14 | 305 |
| காலி | 320 | 300 | 13 | 313 |
| இரத்தினபுரி | 537 | 486 | 51 | 537 |
| மதுகம | 223 | 205 | 28 | 233 |
| **மொத்தம்** | **1861** | **1690** | **151** | **1841** |

அட்டவணை 3.7 : ஆண்டுக்குள் கழிவுத் தேயிலை செயற்பாட்டு மத்திய நிலையங்களுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

| வலயம் | 2017.01.01 ஆம் திகதியளவில் பதிவு செய்யப்பட்ட செயற்பாட்டாளர்கள் | ஆண்டுக்குள் புதுப்பித்தல் | ஆண்டுக்குள் புதிதாக வழங்கப்பட்ட வைகள் | 2017.12.31 ஆம் திகதியளவில் செயற்பாட்டு மத்திய நிலையங்களின் எண்ணிக்கை | 2017.12.31 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| பண்டாரவெல | 01 | 01 | - | 01 | 1338 |
| கம்பொல / ஹட்டன் | 240 | 238 | 24 | 262 | 4171 |
| மாத்தறை | 06 | 04 | 00 | 04 | 445 |
| காலி | 30 | 29 | 02 | 31 | 690 |
| இரத்தினபுரி | 04 | 05 | 02 | 07 | 888 |
| மதுகம | 05 | 05 | 00 | 05 | 176 |
| **மொத்தம்** | **286** | **282** | **28** | **310** | **7708** |

அட்டவணை 3.8 : சர்வதேசத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள

| பிராந்தியம் | HACCP | ஏனைய சர்வதேச சான்றிதழ்கள் |
|---|---|---|
| பண்டாரவெல | 10 | 23 |
| கம்பொல / ஹட்டன் | 35 | 53 |
| இரத்தினபுரி | 07 | 23 |
| மாத்தறை | 06 | 18 |
| காலி | 08 | 10 |
| மதுகம | 06 | 12 |
| **மொத்தம்** | 04 | 165 |

## 3.2. தேயிலை ஏற்றுமதிப் பிரிவு

1959 இலக்கம் 16 கொண்ட தேயிலை சட்டத்தின் (வரி மற்றும் ஏற்றுமதி நிர்வாகம்) அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அது சார்ந்த பணிகள் 1975 இலக்கம் 14 கொண்ட இலங்கை தேயிலை சபைச் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட கோவையினை அமுல்படுத்துவது தொடர்பில் தேயிலை ஏற்றுமதிப் பிரிவு செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. தேயிலை ஏற்றுமதியாளர்கள், பொதியிடுனர்கள், தேயிலை களஞ்சியசாலை, இறக்குமதியாளர்கள், பொதியிடும் வகைகளை பதிவு செய்தல், தேயிலை பெற்றுக் கொள்ளல், தேயிலையில் குறைந்தபட்ச தரம் தொடர்பில் மேற்பார்வை, தேயிலை ஏற்றுமதிக்காக அனுமதி வழங்குதல், தேயிலை ஏற்றுமதி தொடர்பிலான புள்ளி விபரங்களை வகுத்தல் மற்றும் சுதந்திர இருதரப்பு வர்த்தக உடன்படிக்கையின் கீழ் தேயிலை ஏற்றுமதி மதிப்பீட்டுப் பணிகளுக்கு உரியதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக கீழ்க் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் 2017 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

ஈரான் ஏற்றுமதிக்கான சிறந்த உற்பத்தி முறைகளை உறுதிப்படுத்தல்

ஈரானுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தயார்படுத்தப்பட்ட தேயிலை இருப்பு களஞ்சியப்படுத்தப் பட்டுள்ள குதங்களின் ந ி லை ல ை ம க ள ி ை ன மதிப்பீட்டுக்குட்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டில் விசேட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. தேயிலை கலப்புச் செயற்பாடுகள், பொதியிடல் மற்றும் களஞ்சியப்படுத்தல் பணிகளை மதிப்பீட்டுக்குட்படுத்துவதை போன்று உள்நாட்டு மற்றும் சர்வதேச தேயிலைத் தளங்களின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்படும் பகுப்பாய்வுகள் உட்பட விஞ்ஞானப் பரிசோதனைகளை பயன்படுத்தி இறுதி உற்பத்திகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதன் மூலம் இக் குதங்களில் சிறந்த உற்பத்தி முறைகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்காக இலங்கை தேயிலை சபை இவ் உறுதிப்படுத்தல் பணிகளை ஆரம்பித்தது.

இலங்கை தேயிலை சபையின் ஏற்றுமதிப் பிரிவின் 07 நாள் 24 மணித்தியால செயற்பாடுகள் மற்றும் இலங்கை சுங்க ஏற்றுமதி வசதிகள் மத்திய நிலையத்தின் தேயிலைத் தொகை தொடர்பாக மேற்கொள்ளும் ஒருங்கிணைந்த பகுப்பாய்வுகள்

இலங்கை தேயிலை சபை 07 நாட்களும் 24 மணித்தியாலங்கள் பூராகவும் ஏற்றுமதி பிரிவினை திறந்து வைக்க நடவடிக்கை எடுத்தது. இவ்வாண்டில் செயற்பாட்டு நேரம் இரவு 10 மணி வரை நீடிக்கப்பட்டது. இதன் மூலம் தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கு தமது சுங்க ஏற்றுமதி வெளிப்பாடு (Cusdec) சமர்ப்பிப்பதும் தாமதமின்றி அவற்றுக்கு வரவேற்பளிப்பதற்கும் வசதிகள் வழங்கப்படுகின்றது.

தொடர்ந்தும் இலங்கை சுங்கப் பிரிவின் ஒத்துழைப்புடன் இலக்கம் 478/3சி, கே.சிறில் சி. பெரேரா மாவத்தை, இலக்கம் 13 இல் அமைந்துள்ள ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தில் தேயிலை வகைகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக மிகவும் நெகிழுவுத் தன்மையைக் கொண்ட சுங்க வரையறைச் செயற்பாடுகள் மற்றும் ஏற்றுமதி சரக்குப் பொருள் வெளியீடுகளுக்காக தடைகள் ஏற்படாத வகையில் ஏற்றுமதிக்குத் தயாராக வைக்கப்பட்டுள்ள தேயிலைத் தொகை தொடர்பாக கூட்டிணைந்த பரிசோதனைகளுக்காக விசேட விசாரனை மற்றும் பகுப்பாய்வு வசதிப் பிரிவினால் செயற்பாட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

### 3.2.1 பதிவுகள்

பொதியிடலாளர்கள், களஞ்சியசாலை மற்றும் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் பதிவினை புதுப்பிப்பது தேயிலை ஏற்றுமதிப் பிரிவின் பிரதான பணிகளாகும்.
வர்த்தகமாக பதிவு செய்யப்பட்டிருத்தல், அதேபோன்று தேயிலை களஞ்சியப்படுத்தல், கலப்பு மற்றும் பொதியிடலுக்காக பதிவுக் களஞ்சியம் (குதம்) இருத்தல், தேயிலை சுவை பரிட்சிப்பு வசதிகள் கொண்ட தகைமை கொண்ட தேயிலை சுவைப் பரிட்சிப்பாளர்கள் மற்றும் குறைந்தபட்சம் 01 மில்லியன் மூலம் (முதலீடு செய்யப்பட்ட) இருத்தல் தேயிலை ஏற்றுமதியாளர்களாக பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்க தகைமை கொண்டிருக்கும்.
1986 ஜனவரி 28 இலக்கம் 386/13 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 1986 இலங்கை தேயிலை சபைக் கோவை (தேயிலை பொதியிடுனர்களை பதிவு செய்தல்) இற்கமைய உள்நாட்டு பயன்பாட்டிற்காக பொலித்தீன் பொதிகள் அல்லது ஏனைய முறைகளுடனான பொதிகளில் தேயிலை பொதியிடும் வர்த்தகத்தில ஈடுபட்டுள்ள எந்தவொரு நபருக்கும் இலங்கை தேயிலை சபையில் பதிவு செய்வது அத்தியாவசியமாகும். அச்சகல பதிவுகளும் ஒரு வருட காலத்திற்கு வரையறுக்கப்பட்டிருக்கும். பதிவினை வருடாந்தம் நீடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
1959 இலக்கம் 16 கொண்ட தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதி நிர்வாகம்) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எந்தவொரு நிறுவனமும் தேயிலை இறக்குமதியாளராக பதிவு செய்து கொள்ள முடியும்.

அட்டவணை 3.9 : ஏற்றுமதியாளர்கள், பொதியிடல், குதங்கள், தரகர்கள் மற்றும் இறக்குமதியாளனர்களை பதிவு செய்தல்.

| பதிவுகளை மேற்கொள்ளல் | 2017.01.01 ஆம் திகதியன்று | 2017 ஆம் ஆண்டில் புதிய பதிவுகள் | 2017.12.31 அம் திகதியன்று மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஏற்றுமதியாளர்கள் | 325 | 41 | 366 |
| பொதியிடலாளர்கள் | 584 | 115 | 699 |
| குதம் | 212 | 27 | 239 |
| இறக்குமதியாளர்கள் | 111 | 13 | 124 |
| உற்பத்தித் தரகர்கள் | 8 | - | 8 |

2003 மார்ச் மாதம் 20 ஆம் திகதி இலக்கம் 1280/8 கொண்ட அதிவிசேட அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட கடடளை மற்றும் 1986 செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதிய இலக்கம் 418/11 கொண்ட அதிவிசேட அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட கட்டளை ஊடாக மறுசீரமைக்கப்பட்ட 1984 டிசம்பர் மாதம் 05 ஆம் திகதிய இலக்கம் 326/17 கொண்ட அதிவிசேட அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட 1845 இலங்கை தேயிலை சபை (தேயிலை களஞ்சியப்படுத்தல்) கட்டளைக்கமைய ஒரு சந்தர்ப்பத்தில் 1000 கிலோ கிராமை விட மேற்பட்ட எந்தளவு தேயிலையையும் களஞ்சிப்படுத்துவதற்காக பயன்படுத்தக்கூடிய அதேபோன்று தேயிலையினை களஞ்சியப்படுத்துவதற்காக பொருத்தமானது என இலங்கை தேயிலை சபையினால் திருப்தியடையும் களஞ்சியசாலைக்கு மேற்கூறப்பட்ட கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிமுறைகளின் கீழ் இலங்கை தேயிலை சபையில் பதிவு செய்து கொள்ள முடியும்.

இலங்கைத் தேயிலையுடன் கலக்கப்பட்ட வெளிநாட்டு வகையிலான தேயிலை உள்ளடங்கும் சில்லறைப் பொதி 1981 இலங்கை தேயிலை சபை (ஏற்றுமதி மற்றும் இறக்குமதி) கட்டளையின் கீழ் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.
அக் கொள்கலன்கள் / பொதிகளில் “A Blend of Ceylon and other origin Teas packed in Sri Lanka” (இலங்கையில் பொதியிடப்பட்ட இலங்கை மற்றும் வெளிநாட்டு வகையினைக் கொண்ட தேயிலைக் கலப்பு) என அல்லது “Other Origin Teas packed in Sri Lanka” (இலங்கையில் பொதியிடப்பட்ட வெளிநாட்டு வகை கொண்ட தேயிலை) ஆகிய வாசகங்கள் மாத்திரம் இடப்பட வேண்டும். சகல கொள்கலன்களும் இலங்கைத் தேயிலை சபையில் பதிவு செய்ய வேண்டும்.

சகல பதிவு செய்யப்பட்ட தேயிலை ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதிக்காக அனுமதியினை பெற்றுக் கொள்ளும் வகையில் தேவையான ஏனைய ஆவணம் கொண்ட சுங்க ஏற்றுமதி வெளிப்பாடு (CUSDEC தேயிலை ஏற்றுமதிப் பிரிவிற்கு சமர்ப்பிக்க வேண்டியது ASYCUDA முறையின் ஊடாகவாகும். ஏற்றுமதிக்காக தயார்படுத்தப்பட்ட தேயிலை மொத்த இருப்புக்கள் ஏற்றுமதி மற்றும் உரிய தரங்களுக்குப் பொருத்தமானதா என்பது தொடர்பிலான சந்தேகத்தை இல்லாமல் செய்து அது தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை தேயிலை சபை உத்தியோகத்தர்களினால் தேயிலை பாசோதனைக்குட்படுத்தப்படுகின்றது.

### 3.2.2 தேயிலை இறக்குமதி செய்தல்

இலங்கைத் தேயிலை சபையினால் 8,096,078.07 கிலோகிராம் தேயிலையினை இறக்குமதி செய்வதற்காக இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் 669 வெளியிட்டுப்பட்டுள்ளன. இது எவ்வாறாக இருப்பினும் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட கால எல்லைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட உண்மையான தேயிலை அளவு 7,679,588.00 கிலோகிராமாகும்

அட்டவணை : 3.10. உண்மையான இறக்குமதிகள் - ஜனவரி தொடக்கம் டிசம்பர்

| நாடுகள் | வகை | இறக்குமதி செய்யப்பட்ட அளவு கி.கி | செ.க.ச (CIF) பெறுமதி ரூபா | பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|
| சீனா | பச்சைத் தேயிலை | 1,794,798.50 | 353.09 | 633,728,198.75 |
| | விசேட தேயிலை | 690,102.50 | 519.85 | 358,751,184.93 |
| | வெள்ளைத் தேயிலை | 10,684.00 | 482.05 | 5,150,262.12 |
| | CTC | 36,448.00 | 352.93 | 12,863,650.00 |
| | கபேன் நீக்கப்பட்ட தேயிலை | 1,500.00 | 1,813.59 | 2,720,385.00 |
| | **உப மொத்தம்** | **2,533,533.00** | **399.92** | **1,013,213,680.80** |
| இந்தியா | CTC | 3,078,566.00 | 287.71 | 885,733,235.50 |
| | விசேட தேயிலை (கறுப்புத் தேயிலை) | 856,781.00 | 499.07 | 427,594,517.40 |
| | பச்சைத் தேயிலை | 25,940.00 | 424.48 | 11,010,902.00 |
| | கபேன் நீக்கப்பட்ட தேயிலை | 12,410.00 | 860.83 | 10,682,916.00 |
| | வெள்ளைத் தேயிலை | 750.00 | 430.61 | 322,958.00 |
| | **உப மொத்தம்** | **3,974,447.00** | **335.98** | **1,335,344,528.90** |
| ஜப்பான் | பச்சைத் தேயிலை | 9,866.00 | 2,294.78 | 22,640,321.00 |
| | விசேட தேயிலை | 460.00 | 4,423.03 | 2,034,592.00 |
| | **உப மொத்தம்** | **10,326.00** | **2,389.59** | **24,674,913.00** |
| கென்யா | CTC | 914,950.70 | 417.54 | 382,025,542.10 |
| | கபேன் நீக்கப்பட்ட தேயிலை | 3,000.00 | 1,296.02 | 3,888,060.00 |
| | **உப மொத்தம்** | **917,950.70** | **420.41** | **385,913,602.10** |
| ஜேர்மன் | பச்சைத் தேயிலை | 7,499.00 | 742.68 | 5,569,347.20 |
| | விசேட தேயிலை | 925.00 | 2,643.82 | 2,445,536.60 |
| | கபேன் நீக்கப்பட்ட தேயிலை | 993.00 | 816.20 | 810,487.00 |
| | **உப மொத்தம்** | **9,417.00** | **937.17** | **8,825,370.80** |
| தாய்வான் | விசேட தேயிலை | 314.00 | 5,389.35 | 1,692,257.15 |
| | **உப மொத்தம்** | **314.00** | **5,389.35** | **1,692,257.15** |
| மியன்மார் | பச்சைத் தேயிலை | 4,880.00 | - | - |
| | CTC | 650.00 | 565.36 | 367,484.00 |
| | **உப மொத்தம்** | **5,530.00** | **66.45** | **367,484.00** |
| ஐக்கிய அமெரிக்கா | விசேட தேயிலை | 24,025.00 | 4,864.15 | 116,861,285.20 |
| | **உப மொத்தம்** | **24,025.00** | **4,864.15** | **116,861,285.20** |
| இந்தோனேசியா | CTC | 54,353.00 | 334.74 | 18,194,181.00 |
| | **உப மொத்தம்** | **54,353.00** | **334.74** | **18,194,181.00** |
| வியட்நாம் | பச்சைத் தேயிலை | 106,200.00 | 315.65 | 33,521,851.00 |
| | CTC | 25,300.00 | 312.62 | 7,909,286.00 |
| | **உப மொத்தம்** | **131,500.00** | **315.07** | **41,431,137.00** |
| தன்சானியா | CTC | 938.28 | 5,586.00 | 5,241,232.08 |
| | **உப மொத்தம்** | **938.28** | **5,586.00** | **5,241,232.08** |
| ருவன்டா | CTC | 3,977.00 | - | - |
| | **உப மொத்தம்** | **3,977.00** | - | - |
| ஐக்கிய இராட்சியம் | கபேன் நீக்கப்பட்ட தேயிலை | 8,280.00 | 845.92 | 7,004,256.00 |
| | விசேட | 4,997.00 | 973.79 | 4,866,029.00 |
| | **உப மொத்தம்** | **13,277.00** | **894.05** | **11,870,285.00** |
| | **முழு மொத்தம்** | **7,679,587.98** | **385.91** | **2,963,629,957.03** |

**3.2.3** முடிவுத் தேயிலைக்காக **ISO** 3720 குறைந்தபட்ச பண்புசார் தரத்தைப் பேணுதல்.

உரிய முடிவுப்பொருள் தேயிலை அங்கீகரிக்கப்பட்ட பிரிவின் கீழ் காணப்படுகின்றதா ISO 3720 தரத்திற்கு அமைவாக இருக்கின்றதா, அதேபோன்று அசுத்தங்கள் அற்ற உகந்த நிலையில் காணப்படுவதாகவும் நிர்னயிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல தேயிலை மாதிரிகள் மற்றும் தேயிலைக் கைத்தொழிற்சாலைகள் மூலம் கொண்டு வரும், இறக்குமதி செய்து நாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய, ஏற்றுமதிக்காக தயார்படுத்தப்பட்ட தேயிலை வகைகளின் மாதிரி இலங்கை தேயிலை சபையினால் நியமிக்கப்பட்ட தேயிலை சுவை பரிட்சிப்பாளர்களின் நிபுனத்துவ சபையினால் பரிசோதனைக்குட்படுத்தப்படுகின்றது. ஏற்றுமதிக்காக பொருத்தமான முடிவுத் தேயிலைக்கு மாத்திரம் இதன் மூலம் அனுமதி வழங்கப்படுகின்றது.

அட்டவணை 3.11: அவ்வவ் மாதிரிப் பரிசோதனைகளின் வெளிப்படுத்தப்பட்ட தரத் தேவைப்பாடுகளின் எண்ணிக்கை (2017)

| மாதிரி வகைகள் | நீக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | ISO மட்டத்தை விட குறைந்த மற்றும் அசுத்தமானது என தெளிவுப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஏற்றுமதிப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட ஆரம்ப ஏல விற்பனை மாதிரிகள் | 6664 | } 1969 |
| ஏல விற்பனைக்கு முன்னர் அகற்றுதல் (நிபுனத்துவ சபையினால்) | 1969 | |
| ஏல விற்பனைக்குப் பின்னர் | 6649 | 23 |

**3.2.4** பயன்பாட்டிற்காக பொருத்தமற்ற தேயிலையினை அறிவித்தல்

ஏல விற்பனைக்கு முன்னர், ஏற்றுமதிக்கு முன்னர் மற்றும் விசேட பரிசோதனைகளின் போது மானிடப் பயன்பாட்டிற்கு பொருத்தமற்றது எனத் தெரியவரும் முடிவுத் தேயிலை வகைகளின் தன்மை ஏற்றுமதிப் பிரிவின் மேற்பார்வையின் கீழ் அழிக்கப்படும். இப்பிரிவினால் 2017 ஆம் ஆண்டில் அவ்வாறு இனங்காணப்பட்ட தேயிலை 90,325.00 கிலோ கிராம் அழிக்கப்பட்டுள்ளது.

**3.2.5** சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஏற்றுமதி

இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பாக்கிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கமைய இலங்கைக்கான தீர்வை வரி விகிதாசார கோட்டா (TRQ) பயன்படுத்தப்பட்டது. இது எவ்வாறாக இருப்பினம் 2017 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு தீர்வை வரி விகிதாசார கோட்டா (TRQ) பயன்படுத்தப்பட்டுள்ளதாக காண முடியவில்லை.

அட்டவணை 3.12 : சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் தீர்வை வரி விகிதாசார கோட்டாப் பயன்பாடுகள் (2017)

| சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | வருடாந்தக் கோட்டா (கிலோகிராம்) | மொத்த ஏற்றுமதி அளவு (கிலோ கிராம்) |
|---|---|---|
| இலங்கை - இந்தியா | 15,000,000.00 | 128,440.28 |
| பாக்கிஸ்தான் - இலங்கை | 10,000,000 | 15,853.04 |

**3.2.6** தேயிலையை மீளப் பெற்றுக் கொள்ளல்

வெளிநாட்டுக் கொள்வனவாளரினால் பொறுப்பேற்காதா தேயிலைத் தொகைகள் காணப்படின் இலங்கைத் தேயிலை சபையின் அங்கீகாரத்துடன் ஏற்றுமதியாளர்களினால் அத்தேயிலைத் தொகை மீளப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். ஏற்றுமதிக்கு/ மீள் பயன்பாட்டிற்கு முன்னர் இலங்கைத் தேயிலை சபையினால் அத்தொகை மீளப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

## 3.3. தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு

### 3.3.1. பிரிவினால் மேற்கொள்ளப்படும் அடிப்படை பணிகள

கீழ்க் குறிப்பிட்ட பணிகள் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தேயிலை வர்த்தக சந்தைகளில் இலங்கைத் தேயிலை பிரச்சார வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவது தேயிலை பிரச்சாரப் பிரிவின் பொறுப்பாகும்.

1. இலங்கைத் தேயிலை ஊக்குவிப்பு வேலைத்திட்டம்
2. தேயிலை வகை சார்ந்த ஊக்குவிப்பு
3. சர்வதேச உணவு பாண சந்தை மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்றல்
4. சகல முக்கியத்துவம் வாய்ந்த தேயிலை நுகரும் நாடுகள் தொடர்பாக சந்தை வியூக பக்கத்தோற்றங்களை வகுத்தல் மற்றும் விநியோகித்தல்
5. தேயிலைத் துறைக்காக கொள்கைகளை வகுக்கும் போது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிற்கு உதவுதல்
6. போட்டியாளர்களின் செயற்பாடுகளை பகுப்பாய்விற்கு உட்படுத்தல்
7. சிங்க இலச்சினையை பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
8. கோளமயச் சுட்டியாக இலங்கைத் தேயிலை மற்றும் ஏனைய பிரதேச நாமங்கள் உட்பட இலட்சினைகளைப் பாதுகாத்தல்
9. ஓசோன் படலத்திற்குப் பொருத்தமானவாறு இலங்கைத் தேயிலை இலச்சினையைப் பதிவு செய்தல் மற்றும் தனியார் தேயிலைப் பொதியாளர்களுக்கு அனுமதி வழங்குதல்.
10. உள்நாட்டுத் தேயிலை ஊக்குவிப்பு

### 3.3.2. வெளிநாட்டுத் தேயிலை ஊக்குவிப்பு அலுவலக மற்றும் வர்த்தகத் தழுவல்கள்

இலங்கைத் தேயிலை சபையினால் ஐக்கிய அரபு எமிர் இராட்சியம் மற்றும் ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தூதரக சேவை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அந்நாடுகளில் வெளிநாட்டு தேயிலை பிரச்சார அலுவலங்கள் 03 முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கமைய ஐக்கிய அரபு எமிர் இராட்சியத்தில் அமைந்துள்ள அலுவலகங்கள் மூலம் மத்திய கிழக்கு/ வளைகுடா/ வட ஆபிரிக்க வலயத்தின் தேயிலை ஊக்குவிப்புப் பணிக்குப் பொறுப்புக் கூறுவதுடன் மொஸ்கோ நகரத்தில் அமைந்துள்ள அலுவலகம் ரஷ்யக் குடியரசின் மற்றும் பொதுநலவாய சபை சுயாதீன இராட்சியத்தின் (CIS) குடியரசுகளில் தேயிலை ஊக்குவிப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. முன்னேற்றமடைந்து வரும் சந்தையாக சீனாவின் இலங்கைத் தேயிலை ஊக்குவிப்பை போன்று இலங்கைக்குரிய சந்தைப் பங்குகளை தொடர்ந்தும் விருத்தி செய்வதற்காகவும் இலங்கைத் தேயிலை சபையின் முகவர் அலுவலகம் தாபிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக ஏனைய வெளிநாட்டு சந்தைகளில் பிரச்சார ஊக்குவிப்பு பணிகள் கொழும்பில் அமைந்துள்ள தேயிலை பிரச்சாரப் பிரிவினால் அவ்வவ் நாடுகளில் வெளிநாட்டு தூதரக சேவைகளின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படுகின்றது.

### 3.3.3. வர்த்தக விற்பனைக் கூடங்களுக்கான பங்கேற்பு

இலங்கைத் தேயிலை சபையினால் சர்வதேச வர்த்தக விற்பனைக் கூடங்களில் பங்கேற்கும் இலங்கைத் தேயிலை ஏற்றுமதிக் கம்பனிகளுக்கு வசதிகளை வழங்கி தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தைகளில் வர்த்தக நாமமான சிலோன் ரீ 'Ceylon Tea' பெயர் மற்றும் பங்கேற்கும் கம்பனிகளின் வர்த்தக நாமங்களை ஊக்குவிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில் இலங்கைத் தேயிலை சபை தனியார் துறையின் பங்கேற்புடன் கீழ்க் குறிப்பிடப்பட்ட 34 வர்த்தக விற்பனைக் கூடங்களில் பங்கேற்றது. 2017 ஆம் ஆண்டில் 154 வர்த்தகர்கள் விற்பனைக் கூடங்களில் சலுகை முறை மூலம் பயன்களை பெற்றுக் கொண்டனர்.

| | | |
|---|---|---|
| Prodexpo, மொஸ்கோ | ரஷ்யா | பெப்ரவரி 6 - 10 |
| Gulfood, டுபாய் | ஐக்கிய அமெரிக்கா | பெப் 26 - மார்ச் 02 |
| Foodex, டொக்கியோ | ஜப்பான் | மார்ச் 7 - 10 |
| IFE லண்டன் | ஐக்கிய இராட்சியம் | மார்ச் 19 - 22 |
| World Food Uzbekitan, தாஷ்கன்ட் | உஷ்பகிஸ்தான் | மார்ச் 29 - 31 |
| Cairo International Trade fair | எகிப்து | மார்ச் 13 – 27 |
| SIAL Canada, டொறன்டோ | கனடா | மே 2-4 |
| World Food வார்சோ | போலாந்து | ஏப்ரல் 11 - 13 |
| APAS 2017, São Paulo, பிரேசில் | பிரேசில் | மே 2-5 |
| SIAL China, சன்ஹாய் | சீனா | மே 18-20 |
| World Tea Expo, லாஸ் வேகஸ் | ஐக்கிய அமெரிக்கா | ஜீன் 13-15 |
| HOFEX | ஹொங்கொங் | மே 8 - 11 |
| Food West Africa, லோகஸ் | நைஜீரியா | மே 17 - 19 |
| World Food Azerbaijan, பாகு | அசர்பைஜான் | மே 25-27 |
| Seoul Food, சியோல் | கொரியா | மே 16-19 |
| Saitex, ஜொஹனஸ்போர்க் | சவுதி அரேபியா | ஜீன் 19 - 21 |
| Food Taipei, தாய்பேய் | தாய்வான் | ஜீன் 21 - 24 |
| Summer Fancy Food, நியூயோர்க் | ஐக்கிய அமெரிக்கா | ஜீன் 22 - 25 |

| | | |
|---|---|---|
| MalaysiaInternational Food & Beverage Trade Fair | மலேசியா | ஆகஸ்ட் 9 - 11 |
| Int. Tea Fair, ஹொங்கொங் | ஹொங்கொங் | ஆகஸ்ட் 17 - 19 |
| World Food, ஸ்தாம்புள் | துருக்கி | செப்ரெம்பர் 7 - 10 |
| Fine Food, சிட்டி | அவுஸ்திரேலியா | செப்ரெம்பர் 11 - 14 |
| World Food, மொஸ்கோ | ரஷ்யா | செப்ரெம்பர் 11 - 14 |
| Anuga,கொலோன் | ஜேர்மன் | ஒக்டோபர் 7-11 |
| Saudi HORECA, றியாத் | சவுதி அரேபியா | நவம்பர் 27 – 29 |
| Xiaman Tea Fair, சியாமன் | சீனா | ஒக்டோபர் 12 – 16 |
| World Food, க்கீவ் | உக்ரேன் | ஒக்டோபர் 25 – 27 |
| FHC Shanghai, சன்ஹாய் | சீனா | நவம்பர் 14 – 16 |
| World Food, அள்மதி | கசகஸ்தான் | நவம்பர் 1 - 2 |
| World of Tea, டெஹறான் | ஈரான் | ஒக்டோபர் 23 – 25 |
| World Tea & Coffee Expo, மும்பாய் | இந்தியா | நவம்பர் 16-18 |
| Foodex Saudi, ஜெட்டா | சவுதி அரேபியா | நவம்பர் 20 - 23 |
| Agrofood & Plastprintpack | கானா | டிசம்பர் 5-7 |
| Organic & Natural Expo 2017 | டுபாய் | டிசம்பர் 11 – 13 |

**படம் 3.16 & 3.17: Prodexpo, மொஸ்கோ - ரஷ்யா (பெப்ரவரி 6 - 10)**





படம் 3.18 & 3.19 : Foodex, டோக்கியோ - ஜப்பான் (மார்ச் 7 - 10)






படம் 3.20 & 3.21:IFE லண்டன் - ஐக்கிய இராட்சியம் (மார்ச் 19 - 22)






ஐக்கிய இராட்சியத்தின் இலங்கை தேயிலையின் 150 வது ஆண்டு நிறைவு விழா

ஐக்கிய இராட்சியத்தின் இலங்கைத் தேயிலை ஆணையாளரின் பரிந்துரையினை அடிப்படையாகக் கொண்டு இலங்கைத் தேயிலை சபையினால் இலங்கை தேயிலை 150 ஆண்டு நிறைவு விழாவிற்காக ஐக்கிய இராட்சியத்தின் 03 இலங்கை தேயிலை பிரச்சார ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இதில் 02 பிரச்சார வேலைத்திட்டங்கள் எடின்போர்க்கில் நடாத்தப்பட்டதுடன் ஏனைய நிகழ்ச்சிகள் டங்ஸ்டபலில் நடாத்தப்பட்டது. இலங்கை தேயிலை 150 ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகள் எடின்போர்க் பல்கலைக்கழகத்தின் வர்த்தக கல்லூரி கருந்தரங்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கை தேயிலை கோளமய அமர்வு மற்றும் தேயிலை தொடர்பான ஊக்குவிப்பு சார்ந்த விளக்க நிகழ்ச்சித் திட்டங்கள் வேல்ஸ்ட்ஒப் அஸ்ரோரியா - எடின்போர்கில் நடாத்தப்பட்டது.

டென்ஸ்டேபள் இலங்கை தேயிலை பிரச்சார ஊக்குவிப்பு வேலைத்திட்டம்

படம் 3.22



படம் 3.23



**படம் 3.24 & 3.25: SIAL கனடா, டொரன்டோ - கனடா (மே 2-4)**






**படம் 3.26 & 3.27: World Food Warsaw- போலாந்து (ஏப்ரல் 11 - 13)**






**படம் 3.28 & 3.29: APAS 2017, São Paulo - பிரேசில் (மே 2-5)**





**படம் 3.30 & 3.31: World Tea Expo, Las Vegas – ஐக்கிய அமெரிக்கா (ஜீன் 13-15)**






**படம் 3.32 & 3.33: HOFEX - ஹொங்கொங் (மே 8 - 11)**






**படம் 3.34 & 3.35: Food West Africa, Lagos – நைஜீரியா (மே 17 - 19)**





படம் **3.36 & 3.37: World Food** ஆசர்பைஜான், பாகூ - ஆசர்பைஜான் (மே **25 - 27)**







படம் **3.38: Seoul Food, Seoul** – கொரியா (மே **16 - 19)**




படம் **3.39 & 3.40: SAITEX,** ஜொகனெஸ்பார்க் - தென்னாபிரிக்கா (ஜூன் **19 - 21)**





**படம் 3.41 & 3.42: Summer Fancy Food, நியூஜோர்க் - ஐக்கிய அமெரிக்கா (ஜூன் 22 - 25)**







**படம் 3.43 & 3.44: Malaysia International Food & Beverage Trade Fair– மலேசியா (ஆகஸ்ட் 9 - 11)**







**படம் 3.45: World Food, ஸ்தாம்புள் - துருக்கி (செப்ரெம்பர் 7 - 10)**



### அவுதிஸ்ரேலியா இலங்கை தேயிலையின் 150 வது ஆண்டு நிறைவு விழா

ஹக்பறாவில் அமைந்துள்ள அவுஸ்திரேலியா உயர் ஸ்தானிகர் அலுவலகம் இலங்கை தேயிலை சபையுடன் கூட்டாக இணைந்து இலங்கை தேயிலையின் 150 வது ஆண்டு நிறைவு விழாவிற்காக ஹன்பறா பாராளுமன்ற வளாகத்தில் விசேட நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதன் போது பாராளுமன்ற சபையின் அங்கத்தவர்கள், செனட் சபையின் உறுப்பினர்கள், அவுஸ்திரேலிய உத்தியோகத்தர்கள், தேயிலை கைத்தொழிற்துறை சார்ந்த நிபுனர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் விசேட அதிதிகளுக்கு இலங்கையின் இயற்கை சுவையான மற்றும் பலகாரங்களை போன்று இலங்கையின் பிரபல சுவைமிக்கதான இஞ்சி, தேசிக்காய், கறுவா மற்றும் தேன் போன்றவைகளுடன் இலங்கையில் தேயிலை செய்கை மேற்கொள்ளப்படும் 07 வலயங்களில் தேயிலையினை சுவைப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் போது 07 வலயங்களிலிருந்தும் தேயிலை வகைகள் காட்சிப்படுத்தப்பட்டன.

**படம் 3.46 & 3.47: Fine Food, சிட்னி, அவுஸ்திரேலியா (செப்ரெம்பர் 11 - 14)**







**படம் 3.48 & 3.49: World Food, மொஸ்கோ - ரஷ்யா (செப்ரெம்பர் 11 - 14)**






**இலங்கைத் தேயிலை புனித தான ஏல விற்பனை Enshi (சீனா)**

இலங்கைத் தேயிலை சபை, கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கம் மற்றும் பீஜிங்கில் அமைந்துள்ள இலங்கை தூதுவர் அலுவலகத்துடன் இணைந்து சீனாவின் உணவு வகைகள் உள்நாட்டு உற்பத்தி மற்றும் கால்நடைகள் சார்ந்த உற்பத்திகள் தொடர்பான வர்த்தக சபை (CCCFNA) உடன் கைகோர்த்து இலங்கை தேயிலை புனித தான ஏல விற்பனை 6 வது தடவையாகவும் சீனா ஹுபைய் (Hubei) மாநிலத்தின் என்சி நகரில் 2017 செப்ரெம்பர் 26 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இந்த புனித தான ஏல விற்பனையினை ஒழுங்கு செய்யும் பிரதான நோக்கமாக அமைவது விற்பனையின் மூலம் ஈட்டப்படும் சகல நிதியும் தேயிலை செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக சேவைப் பணிகளுக்கு ஈடுபடுத்துவதாகும். விசேடமாக தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் பயன்பாட்டிற்காக பயன்படுத்துவது பிரதமான நோக்கமாகும்.

**படம் 3.50** **படம் 3.51** **படம் 3.52**








**படம் 3.53 & 3.54: Anuga, Cologne – ஜேர்மன் (ஒக்டோபர் 7-11)**






**படம் 3.56: Saudi HORECA, றியாத் - சவுதி அரேபியா (நவம்பர் 27 – 29)**




**படம் 3.57 & 3.58: Xiaman Tea Fair, Xiaman – சீனா (ஒக்டோபர் 12 -16)**







**படம் 3.59 & 3.60: World Food - யுக்ரேன் (ஒக்டோபர் 25 -27)**






படம் **3.61 & 3.62: World of Tea, Teheran** – ஈரான் (ஒக்டோபர் 23 - 25)





படம் **3.63 & 3.64: FHC China 2017 in** சன்ஹாய் (நவம்பர் 14 -16)






படம் **3.65 & 3.66: World Food, Almathy** – கசகஸ்தான் (நவம்பர் 1 - 2)





**படம் 3.67 & 3.68: World Tea & Coffee Expo,** மும்பாய் - இந்தியா (நவம்பர் **16-18)**





**படம் 3.69: Foodex Saudi, Jeddah -** சவுதி அரேபியா (நவம்பர் **20 - 23)**




**படம் 3.70: Agrofood & Plastprintpack** – கானா (டிசம்பர் **5-7)**



### 3.3.4 கோளமய ஊக்குவிப்பு வேலைத்திட்டம ஊடகக் கொள்வனவு

கோளமய ரீதியில் இலங்கைத் தேயிலை பிரச்சார வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ஆலோசனை நிறுவகத்தைத் தேர்ந்தெடுக்கும் வகையில் இலங்கை தேயிலை சபையினால் கேள்வி தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய பொருத்தமான ஆலோசனைக் கம்பனியை தேர்ந்தெடுப்பதற்காக திறைசேரியினால் அமைச்சரவைப் பெறுகை ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டது. Accordingly, Treasury appointed a Cabinet Approved Procurement Consultancy Committee for selecting a suitable consultancy company. இவ் அமைச்சரவை பெறுகை ஆலோசனைக் குழு மூலம் 03 வருட காலத்திற்காக 12 நாடுகளில் இலங்கைத் தேயிலைப் பிரச்சாரத்திற்கான ஊடகத் திட்டமிடல்கள் உப ஆவணப்படுத்தல் மற்றும் கொள்வனவுக்கான ஆலோசனை சேவைகளை தேர்ந்தெடுப்பதற்கு 2017 மே மாதம் 21 ஆம் திகதி உரிய கேள்வி கோரல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஏழு கம்பனிகள் இதற்கு வரவேற்பு வழங்கியிருந்ததுடன் கேள்வி கோரல் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை ஒப்பளவுகளை அடிப்படையாகக் கொண்டு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு 03 கம்பனிகள் மாத்திரமே தகைமை பெற்றிருந்தன. இதற்கமைய 2017.07.21 ஆம் திகதி தொடக்கம் 2017.08.14 ஆம் திகதி வரை யோசனைக்காக கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. விலைமனுக் கோரலுக்கமைய இலங்கை தேயிலை கோளமயப் பிரச்சாரத்திற்கான ஊடகத் திட்டமிடல், உப ஆவணப்படுத்தல் மற்றும் கொள்வனவிற்கமைய ஆலோசனை சேவைகளுக்காக டென்சு கிரான்ட் தனியார் கம்பனி (Dentsu Grant (Pvt) Ltd) தேர்ந்தெடுக்கப்பட்டது.

#### ஆக்க ரீதியிலான செயற்பாட்டுப் பணிகள

இனங்காணப்பட்ட ஏழு வலயங்களில் வர்த்தக நாமத்தை ஊக்குவிப்பதற்காக கூடுதலான வாடிக்கையாளர்களை தழுவும் வகையில் பாரியளவு தொடர்புசாதன முறை பயன்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்படும் வர்த்தக விளம்பரம் (ATL) மற்றும் சிறிய வாடிக்கையாளர் குழுக்கள் (BTL) மற்றும் தனிநபர் நுகர்வோரை இலக்காகக் கொண்ட வர்த்தக விளம்பரம் போன்று சமூக ஊடகத்தை பயன்படுத்துவதற்கான ஆக்கங்களுக்காக பீனிக்ஸ் ஓ அன்ட் எம் தனியார் கம்பனிக்குப் பொறுப்பளிக்கப்பட்டது. பீனிக்ஸ் கம்பனியினால் இணையத்தளம், நேரடி மின்னஞ்சல் தகவல், சிறுநூல், கையேடுகள் ஆக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பீனிக்ஸ் கம்பனியுடனான உடன்படிக்கை அமைச்சரவையினால் 2016 நவம்பர் 06 ஆம் திகதி தொடக்கம் 2018 நவம்பர் 05 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. ஊடகக் கொள்வனவு செயற்பாடுகள் தாமதமடைவது இதற்குக் காரணமாக அமைந்தது.

#### பொதுமக்கள் தொடர்பாடல் (PR - ஊக்குவிப்பு வேலைத்திட்டம்)

அமைச்சரவை அங்கீகாரத்துடன் தேயிலை சபையினால் பொதுமக்கள் தொடர்பாடல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

#### ரீ ஹவுஸ் டைம் வெளியீட்டின் சுற்றுலா மற்றும் விசேட ஆவணங்களைப் பிரசுரிப்பதன் மூலம் இலங்கை தேயிலை தொடர்பில் விசேட பிரச்சாரச் செயற்பாடுகள் ஐக்கிய அமெரிக்காவிற்குள் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை தேயிலை தொடர்பாக உலகளாவிய பிரச்சாரத்தின் ஒரு அம்சமாக ஐக்கிய அமெரிக்க குடியரசின் ரீ ஹவுஸ் டைம் சஞ்சிகையின் இரு ஊடகவியலாளர்கள் தேயிலைக் கைத்தொழிலின் தரப்பினர்களை சந்தித்தனர். தேயிலை செய்கை மேற்கொள்ளும் பிரதேசங்களில் சுற்றுலா மேற்கொள்ளல் தேயிலை உற்பத்திச் செயற்பாடுகளை கண்டுகழித்தல் மற்றும் இலங்கைத் தேயிலை தொடர்பில் ஏனைய சகல பிரிவுகள் குறித்தும் அறிவுறுத்துவதற்காக ஜனவரி மாதம் இலங்கைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. இலங்கையில் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவங்களுக்கமைய இவர்களுக்கு இலங்கை தொடர்பில் விசேட கட்டுரைகள் மற்றும் தகவல்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் ரீ ஹவுஸ் சஞ்சிகையின் சகல வலயங்களுக்கும் இலங்கைத் தேயிலை தொடர்பான முழுமையான பக்கம் பூராகவும் வர்த்தக விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இலங்கைத் தேயிலை தொடர்பில் எழுதப்பட்ட பிலொக் மற்றும் பல கட்டுரைகள் சமூக ஊடக அமைப்புக்கள் மற்றும் ஏனைய ஊடகங்கள் மூலமும் வெளியிடப்பட்டன.

#### 09 நாடுகளின் ஊடகவியலாளர்களின் வருகையின் ஊடாக இலங்கைத் தேயிலை தொடர்பில் விசேட பிரச்சாரங்கள்

2017 ஆம் ஆண்டில் ஊடகவியலாளர்களை அழைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் ஆகஸ்ட் மாதம் நடாத்தப்பட்ட இலங்கை தேயிலை 150 வது ஆண்டு நிறைவின் போது ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, கனடா, சவுதி அரேபியா, துருக்கி, குவைத், ஈரான், சீனா மற்றும் ஐக்கிய இராட்சியத்தின் நாடுகள் மூலம் 14 ஊடகவியலாளர்கள் இலங்கைக்கு வருகை தந்தனர். இக்குழுக்கள் தேயிலைக் கைத்தொழிலின் தரப்பினர்களை சந்தித்தனர். தேயிலை செய்கை மேற்கொள்ளும் பிரதேசங்களில் சுற்றுலா மேற்கொள்ளல், தேயிலை உற்பத்திச் செயற்பாடுகளை கண்டுகழித்தல் மற்றும் இலங்கை தேயிலை தொடர்பில் ஏனைய சகல தரப்பினர் குறித்தும் அறிவுறுத்துவதற்காக இவர்கள் இதில் பங்கேற்றனர். இதன் பயனாக பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் மூலம் கட்டுரைகள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பிரச்சாரம் செய்யப்பட்டன.

அட்டவணை 3.13

| திகதி | பெயர் | நாடு | பயன்கள் |
|---|---|---|---|
| 2017 ஜனவரி 22 தொடக்கம் 31 வரை | திருமதி. கயில் கஸ்ரெலு<br>திருமதி. லின்டா வில்லனோ | ஐக்கிய அமெரிக்கா | • இலங்கை தேயிலை தொடர்பாக வலைப்பதிவுகள் 20 க்கு மேற்பட்ட அளவு வெளியிடல்.<br>• இலங்கை தேயிலை தொடர்பாக முழுமையான பக்கத்தை பூர்த்தி செய்து வர்த்தக விளம்பரம் மற்றும் 05 ஆவணங்கள் ரீ ஹவுஸ் டைம் சஞ்சிகை ஊடாக பிரசுரித்தல்.<br>• பல சமூக ஊடக அமைப்புக்கள் ஊடாக பதிவேற்றம் செய்யப்பட்டது. (FB, Instagram, twitter, YouTube and etc)<br>• நிறைவான அடிப்படையில் ஐக்கிய அமெரிக்க குடியரசின் இலங்கை தேயிலை தொடர்பில் பல பிரச்சாரப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. |

**படம் 3.71**



**படம் 3.72**



அட்டவணை 3.14

| திகதி | பெயர் | நாடுகள் | பயன்கள் |
|---|---|---|---|
| 2017 பெப்ரவரி 13 - 19 | திரு. நீல் மெக்ரீச் மற்றும் திருமதி. சரா | சிங்கப்பூர் | • சிங்கப்பூர் ரீ அன்ட் கோப்பி ஜேர்னல் சஞ்சிகையின் இலங்கை தேயிலை தொடர்பான கட்டுரையை பிரசுரித்தல். |
| 2017 ஆகஸட் 6 - 14 வரை | திரு. டெனி ஜிபொலி | ஐக்கிய அமெரிக்கா | • இலங்கை தேயிலை உற்பத்தி முறைகள், இலங்கை தேயிலைக் கலாசாரம், இலங்கைத் தேயிலை உற்பத்தியின் எதிர்காலம் தொடர்பான கட்டுரைகளை பிரசுரித்தல் |
| | திருமதி. யூலியா சிமிர்னோவா - விசேட | ரஷ்யா | • ஒன்லைன் பத்திரிகையான Komsomolskaya Pravda இல் இலங்கை மற்றும் இலங்கை தேயிலை தொடர்பான முதலாவது கட்டுரை கீழ்க் குறிப்பிட்ட இணையத்தளம் ஊடாக பிரசுரிக்கப்பட்டது. https://kp.ru/daily/26743/3771847/<br>• 2017 ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி இலங்கை மற்றும் இலங்கை தேயிலை தொடர்பாக 10 நிமிட ரேடியோ நிகழ்ச்சி http://kp.ru/radio/26744.5/3772573/ ஊடாக ஒலிபரப்பட்டது. |
| | திருமதி. எலினா வெலிச்கோ | ரஷ்யா | • இரண்டு கட்டுரைகள் "தேசத்தை கட்டியெழுப்பும் கைத்தொழில் இலங்கை தேயிலை 150 வது ஆண்டுகள்" (The Trade that made the Nation1 years of Ceylon Tea நான்கு பக்கங்களைக் கொண்ட கட்டுரை கோப்பி அன்ட் ரீ சஞ்சிகையின் 4 வது வெளியீடு ரஷ்ய மொழியில் பிரசுரிக்கப்பட்டதுடன் கோப்பி அன்ட் ரீ இன்டர்நேசனல் மெகசின்களில் 2 வது பிரிவில் ஆங்கில மொழியில் பிரசுரிக்கப்பட்டது.<br>• இலத்திரணியல் தயாரிப்பு காணப்படுவதுடன் அச்சுப் பிரதி பெறப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | திரு. ஸ்கன்டெர் அக்சுரின் | ரஷ்யா | • இரு பக்க சஞ்சிகையில் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. |
| | திரு. மாண் அல்ஹுதியா | சவுதி அரேபியா | • சமூகமளிப்பதற்கு முன்னர் - ரியாத்தில் குளோபள் ரீ பார்டியில் 2017.07.06 ஆம் திகதி ஒரு பக்க (1/4) கட்டுரை<br>• சமூகமளிப்பிற்கு பின்னர் 2017.10.03 ஆம் திகதி முழுமையான பக்கத்தில் கட்டுரை. |
| | திரு. ஹுசின் செய்கின் கிளிக் | | • இலங்கை தேயிலை கலாசாரம் தொடர்பில் மற்றும் இலங்கை தொடர்பான பொதுப் பிரச்சாரக் கட்டுரை Hurriyet Gazetesiபத்திரிகையில் பரசுரிக்கப்பட்டது. |
| | திரு. எப்ராகிம் பல்பாஹி | ஈரான் | • "Ceylon tea: A journey to the land of green mag என்ற கட்டுரை 2017 ஆகஸ்ட் 23 ஆம் திகதி டெகரான் டைம்ஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. |
| | திரு. ஜுவங்யுன் சன் | சீனா | • 2017 ஆகஸ்ட் 09 ஆம் திகதி இலங்கை தேயிலையின் 150 வருடகால வரலாற்றினை கொண்டாடுவது தொடர்பான " Sri Lanka celebrate its 150 years History of Ceylon Tea with the Premier be Present" என்ற கட்டுரை பிரசுரிக்கப்பட்டது.<br>• 2017 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் 08, 10, 11, 12 மற்றும் 13 ஆகிய தினங்களில் 5 கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. |
| | திருமதி. ஸியோஜீ பீ | சீனா | • China Economyஇணையத்தளத்தின் நினைவு விழா தொடர்பிலான கட்டுரை மற்றும் 03 புகைப்படங்கள் வெளியிடப்பட்டன. |
| | திரு. டான் பொல்டெம் | ஐக்கிய அமெரிக்கா / கனடா | • World Tea News 2017 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி "Sri Lanka celebrates th Future of Tea" மற்றும் "A new Mandate for Sr Lanka's Tea Industry" என்ற கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.<br>• 2017 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் 29 ஆம் திகதி "Sri Lanka is Primed to Supply Premium Iced Te என்ற கட்டுரை World Tea News இல் பிரசுரிக்கப்பட்டது. |
| | திரு. ரேவென் கெரட் | குவைத் | • இரு பக்கங்கள் "Sri Lanka celebrates One Big Tea Party" தொடர்பான இரு கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. |

**படம் 3.73**



**படம் 3.74**



**படம் 3.75**



அட்டவணை 3.15

| **திகதி** | **பெயர்** | **நாடுகள்** | **பயன்கள்** |
|---|---|---|---|
| 2017 டிசம்பர் 17 - 24 வரை | NTV TV குழு | ரஷ்யா | • பொதுவாக இலங்கை மற்றும் சிலோன் ரீ என்ற நிகழ்ச்சி 42 நிமிடங்கள் ஒலிபரப்பட்டன. |

ரஷ்யா NTV குழு இலங்கையின் கலாசாரம் மற்றும் இலங்கை தேயிலை தொடர்பான பிரச்சார கலந்துரையாடலுக்காக இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

**படம் 3.76**



**படம் 3.77**



### அவுஸ்திரேலியா நோர்த் சிட்னி கார்பர் வியுவ் ஹோட்டலில் வர்த்தக வலையமைப்பு பிரச்சார சந்திப்பு - 2017 செப்ரெம்பர் 12

சிட்னி கவுன்சரல் ஜெனரல் அலுவலகம் இலங்கை தேயிலை சபையுடன் இணைந்து வர்த்தக வலையமைப்புப் பிரச்சாரக் கூட்டம் நோர்த் சிட்னி கார்பர் வியுவ் ஹோட்டலில் நடாத்தப்பட்டது. இச்சந்திப்பினை ஒழுங்கு செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது அவுஸ்திரேலியாவின் ஊடக நிறுவனம், தனிப்பட்ட தொடர்பாடல் கம்பனி, சுற்றுலா மற்றும் வெளியீட்டு கம்பனிக்கு இலங்கை தேயிலை தொடர்பில் ஊக்குவிப்புப் பிரச்சாரங்களை மேற்கொள்வதாகும்.

### இலங்கை பூட் அன்ட் கல்சரல் பெஸ்ரிவல் 2017 தம்பலோங் பார்க் டார்லிங் கார்பர் 2017 நவம்பர் 25 மற்றும் 26

சிட்னியில் அமைந்துள்ள கவுன்சரல் ஜெனரல் அலுவலகம், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்துடன் இணைந்து இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு வேலைத்திட்டம் சிட்டி நகரில் தம்பலோங் பார்க்கில் 2017 நவம்பர் 25 மற்றும் 26 ஆகிய தினங்கள் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப 5.00 மணி வரை நடாத்தப்பட்டது.

இதனை ஒழுங்கு செய்வதற்கான பிரதான நோக்கமாக அமைந்தது ஓய்வு காலங்கள் மற்றும் விடுமுறையை கழிப்பதற்காக இலங்கையில் மிகவும் திருப்திகரமான தேயிலையை நிலையான அவுஸ்திரேலியா சுற்றுலா சமூகத்திற்கிடையே அறிவுறுத்துவதாகும். இதன்பேது இலக்காகக் கொள்ளப்பட்ட குழுவாக அமைவது வர்த்தக சமூகம், தொழிலாளர்கள், ஊடகம், சுற்றுலா செயற்பாட்டாளர்கள் மற்றும் உரிய வாடிக்கையாளர்களாகும். கௌன்சரல் ஜெனரலின் இலங்கைத் தேயிலை விற்பனைக் கூடத்தின் தேயிலை ஊக்குவிப்புச் செயற்பாடுகள் இந் நினைவிற்கு இணைவாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

### வர்த்தகத் தகவல்கள் மற்றும் ஆராய்ச்சிறும் 26

ரஷ்யா தேயிலை நுகர்வு தொடர்பில் காணப்படும் ஆர்வம் மற்றும் தடைகள் தொடர்பாக அடிப்படை ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. (இலங்கை தேயிலைப் பயன்பாடு, பழக்கங்கள், கருத்துக்கள் தொடர்பாக பண்புசார் தரம்மிக்க சந்தை ஆராய்ச்சி - மொஸ்கோ மற்றும் எக்டரின் போர்க்) இச் சந்தை ஆய்வுகள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் ரஷ்யா இலங்கை தேயிலை வர்த்தக மூல உபாய அபிவிருத்தி மற்றும் இலங்கைத் தேயிலை உலகளாவிய பிரச்சாரங்களுக்காவும் பயன்படுத்த முடிந்தது.

### 3.3.5 தனி தேசிய இலங்கை தேயிலை ஊக்குவிப்பு

UNI National ''இலங்கை தேயிலை'' ஊக்குவிப்பு வேலைத்திட்டம் சர்வதேச வகையில் காணப்படும் தேயிலையுடன் போட்டிகரமான முறையில் இலங்கைத் தேயிலை UNI National ஊக்குவிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. வெளிநாடுகளின் அமைந்துள்ள இலங்கைத் தேயிலை பிரச்சார அலகுகள் மற்றும் தூதரக சேவைகளை அமுலில் உள்ள வர்த்தகப் பிரிவின் மூலம் இலங்கை தேயிலை சபை வெளிநாட்டு சந்தைகளில் இலங்கைத் தேயிலைக்காக UNI National ஊக்குவிப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. ஊடகப் பிரச்சாரம், திறந்த வெளியரங்கு பிரச்சாரம், தேயிலை சேவைகள், தேயிலை தொடர்பான செயலமர்வு மற்றும் கருந்தரங்குகள் போன்று ஏனைய மக்கள் தொடர்பாடல் பணிகள் சபையினால் நடாத்தப்பட்ட UNI National தேயிலை ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களின் பிரதான பிரிவுகளாகும்.

### 3.3.6 வகைகளுக்கமைய தேயிலை ஊக்குவிப்புக்கள

ஏனைய பாண வகைகளுக்கு மத்தியில் போட்டிகரமாக தேயிலை ஊக்குவிப்பு வகைப்படுத்தல் தேயிலை ஊக்குவிப்பு செயற்பாடுகளில் அடங்குகின்றன. இலங்கை தேயிலை சபை உணவு மற்றும் விவசாய அமைப்பின் தேயிலை தொடர்பான இராட்ச்சியங்களுக்கிடையிலான குழுக்கள், ஐக்கிய அரபு எமிர் இராட்சிய தேயிலை அமைப்பு, ஐக்கிய இராட்சிய சர்வதேச தேயிலைக் குழு மற்றும் ஜப்பான் தேயிலை சங்கம் ஆகிய நிறுவனங்களின் அங்கத்தவர்களாகும். வகைப்படுத்தல்களுக்கமைய தேயிலை ஊக்குவிப்புச் செயற்பாடுகள் இவ்அமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. வகைப்படுத்தப்பட்ட தேயிலை ஊக்குவிப்பின் போது பிரதானமாக தேயிலை மற்றும் சுகாதாரம் ஆகிய சிந்தனைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அது நுகர்வோரை அறிவுறுத்தும் வேலைத்திட்டம் மற்றும் பொதுமக்கள் உறவு செயற்பாடுகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. மேற்கூறப்பட்டவாறு இலங்கைத் தேயிலை சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளில் வகைப்படுத்தப்பட்ட தேயிலை ஊக்குவிப்புப் பணிகள் 2017 ஆம் ஆண்டில் தேயிலை சங்க மற்றும் சபைகளுக்காக பிரச்சாரச் செலவினங்களுக்காக பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### தேயிலை சங்கம் மற்றும் தேயிலை அமைப்புக்களுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்

### வருடாந்த தேயிலை அதிஷ்ட சீட்டெழுப்பு (2017 ஜனவரி 31 தொடக்கம் நவம்பர் 15 வரை)

.ஐக்கிய அமெரிக்க தேயிலை சங்கத்தின் தலைவரின் கோரிக்கைக்கமைய இலங்கை தேயிலை சபையின் நிறைவு அடிப்படையில் இலங்கை தேயிலை பிரச்சாரப் பொருள் ஊடக சமூக அனுசரனை மற்றும் தனிநபர் இணையத்தளங்களுக்கு அனுப்பப்பட்டன.

## இலங்கை தேயிலை தூதுவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்

2017 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடாவில் இலங்கை தேயிலைக்கான தூதுவராக கடமையாற்றிய் டேவிட் பீ கென்டியா அவர்களினால் அமெரிக்காவில் நடாத்தப்பட்ட இலங்கை தேயிலை கூட்டிணைப்பு மற்றும் சுவை பரிட்சித்தல் தொடர்பான பல வேலைத்திட்டங்களில் இலங்கை தேயிலை சபை கலந்து கொண்டது.

படம் **3.78:** உணவு மற்றும் விவசாய அமைப்பு தொடர்பான சர்வதேச இராட்சியக் குழு **(FAO/IGG)** இடைக்கால அமர்வு கொழும்பு, 2017 ஆகஸ்ட் 12 - 13



### 3.3.7 இலங்கை தேயிலை நாமத்தின் உலகளாவிய போட்டியின் கீழ் பிராந்திய நாமம் மற்றும் இலட்சினையினைப் பதிவு செய்தல். (Gis)

'Ceylon Tea' நாமம் மற்றும் ஏனைய விவசாய காலநிலை வலயங்களில் 7 தேயிலை வகைகள் (நுவரெலியா, உடபுசல்லாவ, திம்புல, ஊவா, கண்டி, சப்ரகமுவ மற்றும் (ருஹுனு) உலகளாவிய சுட்டியாகப் பாதுகாப்பதற்கு உலக வர்த்தக அமைப்பின் TRIPS உடன்படிக்கைக்கமைய இலங்கை தேயிலை சபையினால் தேவையான சட்டங்கள் மற்றும் ஒழுங்குக் கோவைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் விசேடமாக வெளிநாட்டு ஒப்பந்தப் பொதியிடலாளர்களினால் சிலோன் ரீ நாமம் மற்றும் ஏனைய பிராந்திய தேயிலை நாமத்தின் முறையற்ற பயன்பாடுகளைத் தடுப்பதற்கு ஒத்துழைப்பது மாத்திரமன்றி உலகாளவிய சுட்டியின் கீழ் சந்தைப்படுத்தல் செயற்பாடுகள் இலங்கைத் தேயிலைக்கான பெறுமதி மற்றும் சிறப்பினை சேர்க்கக்கூடியதாக இடம்பெறுகின்றது.

### 3.3.8 வர்த்தக இலட்சினையைப் பாதுகாத்தல்




சிங்க இலட்சனை வர்த்தக அடையாளத்தைப் பதிவு செய்தல் *(712)*

**Ceylon Tea** சிங்க இலட்சினை வர்த்தக அடையாளத்தின் சட்ட ரீதியிலான உரிமையாளராக காணப்படுவது இலங்கை தேயிலை சபையாகும். இலங்கை மற்றும் ஏனைய நாடுகளில் சிலோன் ரீ சிங்க இலட்சினையின் பதிவு / சமகாலப்படுத்தல், இலங்கை தேயிலை சபையின் பிரச்சாரப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டளவில் இவ் இலட்சினை 98 நாடுகளில் பதிவு செய்யப்படுகின்றது. சிங்க இலட்சினையை பயன்படுத்துவது அதிகார சபையினால் வழங்கப்பட்டிருப்பது 100% இலங்கைத் தேயிலை அடங்கும் ISO 3720 தரத்திற்கு அமைவாக அவ்வவ் சந்தைகளில் குறைந்தபட்ச தரத்தைவிடக் கூடுதலான பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை உற்பத்தி (தேயிலை பக்கட் மற்றும் பொதி) வர்த்தக நாமத்திற்காக மாத்திரமாகும். அத்துடன் இவை இலங்கையில் முன்னர் பொதியிடப்பட்ட தேயிலையாக இருக்க வேண்டும். மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் அவுஸ்திரேலியா புஜி தீவில் சிங்க இலட்சனை பதிவினை சமகாலப்படுத்தும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### 3.3.9 வர்த்தக நாமத்தை ஊக்குவித்தல

சிங்க இலட்சனை கொண்ட சிலோன் ரீ வர்த்தக நாமத்தை ஊக்குவிப்பதற்காக நிதி உதவிகளை பெற்றுக் கொள்ளும் யோசனை 2017 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட தேயிலை வரவு செலவுத் திட்ட யோசனையினை அடிப்படையாகக் கொண்டு அமுல்படுத்தப்பட்டது. இதற்கமைய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில தனியார் கம்பனிகள் மற்றும் இலங்கைத் தேயிலை சபைக்கிடையே 2015 / 2016 ஆம் ஆண்டுக்காக வர்த்தக நாமத்தை உக்குவிக்கும் மானிய உதவி யோசனைத் திட்டத்திற்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கமைய வர்த்தக நாமம் யோசனைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இருப்பினும் இச் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது இனங்காணப்பட்ட தேவைகளுக்கமைய இச் செயற்திட்டம் 2017 ஜூன் மாதம் 30 ஆம் திகதி 177.32 மில்லியன் ரூபா நிதி தனியார் துறைக்கு மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது. 11 சந்தைகளின் கீழ் 10 கம்பனிகளுக்கிடையே இதன் மூலம் செயற்திட்டத்தின் கீழ் பிரதிலாபங்கள் பெறப்பட்டுள்ளன.

### 3.3.10 ஓசோனுக்கு உகந்த Pure Ceylon Tea இலட்சனையினை பதிவு செய்தல்

ஓசோன் படலத்திற்குப் பொருத்தமான தேயிலை ஊக்குவிப்பினை நோக்காகக் கொண்டு இலங்கை தேயிலை சபையினால் உறுதிப்பாட்டு அடையாளமாக ஓசோனுக்கு உகந்த **Pure Ceylon Tea** சுத்தமான இலங்கைத் தேயிலை இலட்சினை இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மொன்றியல் உடன்படிக்கை (Montreal Protocol) இற்கமைய தேயிலை பரிசோதனை மற்றும் கப்பல் ஏற்றுவதற்கு முன்னரான ஆய்வுச் செயற்பாடுகளுக்காக மிபோய் புரோமைட் பயன்படுத்தாமை தொடர்பான மொன்றியல் பிரகடனத்தின் கீழ் இலங்கையினால் இரு செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. தேயிலைச் செய்கையின் போது மிதேல் புரோமைன் பயன்படுத்தாத சுழலுக்கு உகந்த தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி தேயிலைத் துறைக்கான இச்செயற்திட்டம் 2002 ஆம் ஆண்டில் வெற்றிகரமான அமுல்படுத்தப்பட்டதுடன் 2007 ஆம் ஆண்டில் இலங்கையினால் Montrel Protocal Implementers Awards விருது வெற்றி கொள்ளப்பட்டது. இவ்வாறு ஓசோனுக்கு பொருத்தமான வகையில் தேயிலை உற்பத்தி செய்யும் உலகின் முதலாவது தேசம் இலங்கை என்பதுடன் தொடர்ந்தும் இக்கௌரவத்துடன் தேயிலை உற்பத்தி செய்யும் ஒரேயொரு தேசம் இலங்கையாகக் கருத்தப்படுகின்றது.

இதற்மைய 2017 ஆம் ஆண்டில் 08 ஏற்றுமதியாளர்களினால் 11 வர்த்தக நாமங்களுக்காக Ozone friendly Pure Ceylon Tea பலம் பொருந்திய அதிகாரம் கிடைக்கப் பெற்றது.

### 3.3.11 Ceylon Tea 50 வது ஆண்டு நிறைவு

கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கத்துடன் இணைந்து இலங்கை தேயிலை சபை ஆண்டு நிறைவை கொண்டாடுவதற்காக 2017 ஆண்டு பூராகவும் பல விழாக்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இந்நிகழ்வுகளின் ஆரம்பத்தை குறிக்கும் வகையில் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி இலங்கை தேயிலை சபையின் பிரதான வளாகத்தில் ஜேம்ஸ் டெயிலரின் உருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது.

படம் **3.79**



படம் **3.80**



படம் **3.81**



150 வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதற்காக 2017 ஜூலை 11 ஆம் திகதி 10 ரூபா பெறுமதியான நாணயக் குற்றி வெளியிடப்பட்டது.
இலங்கை தேயிலைக்கக்காக 150 வது ஆண்டு நிறைவு மற்றும் அதன் மூலம் இலங்கையில் நீண்ட காலம் தொடக்கம் ஏற்றுமதியினை நோக்காகக் கொண்டு முக்கியத்துவம் வாய்ந்த வா்த்தகப் பொருளாக தேசிய பொருளாதாரத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பங்களிப்புக்களை நினைவு கூறுவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் 10 ரூபா பெறுமதியான ஞாபகார்த்த நாணயக் குற்றி வெளியிடப்பட்டது.

படம் **3.82**



படம் **3.82**



படம் **3.82**



2017 ஜூலை மாதம் 13 ஆம் திகதி முதல் நாள் உறை மற்றும் முத்திரை வெளியிடல்.
அமுலில்உள்ள இலங்கை தேயிலையின் 150 ஆண்டு கால மைல்கல்லினை கொண்டாடுவதற்காக இலங்கை முத்திரைப் பணியகம், கொழும்பு தேயிலை வா்த்தக சங்கம் மற்றும் இலங்கை தேயிலை சபையின் உதவியுடன் 35 வீதம் இரண்டு தபால் முத்திரை மற்றும் முதல் நாள் கடித உறை வெளியிடப்பட்டது.

படம் **3.85**




படம் **3.86**




படம் **3.87**



உள்நாட்டு சமூகத்திற்கு மேற்கொள்ளும் நற்பணிக்கமைய இலங்கையில் தேயிலை உற்பத்தி செய்யும் 07 மாகாணங்களைத் தழுவக்கூடிய வகையில் கல்விக் கண்காட்சித் தொடரை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இது இலங்கைக்கு தேயிலை கைத்தொழிலில் காணப்படும் தொடர்பு மற்றும் முக்கியத்துவத்தைக் குறித்து விளக்கத்தினை வழங்குவதும் இக் கைத்தொழிலில் காணப்படும் தொழில் வாய்ப்புக்கள் மற்றும் வரலாற்று நிகழ்வுகளின் முக்கியத்துவம் தொடர்பில் அறிவுறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பயனாக இனங்காண முடியும். இதன் கீழ் நுவரெலியா, பிலிமத்தலாவ, பதுளை, யடியன்தொட்ட, நெலுவ, கொத்மலை ஆகிய பிரதேசங்களில் கண்காட்சிகள் நடாத்தப்பட்டன.

படம் **3.88**



படம் **3.89**



படம் **3.90**



இலங்கையில் பழமை வாய்ந்த விஸ்கட் உத்தியாளரான மலிபன் விஸ்கட் உற்பத்தியாளர்களினால் தயாரிக்கப்பட்ட விஸ்கட்டுடன் அதி உண்ணத இலங்கை தேயிலையை வழங்கி ஜூலை 06 ஆம் திகதி உலகெங்கிலும் அவ்வவ் காலப்பகுதிகளில் பி.ப 5.00 மணிக்கு உலக அரச துாதரக அலுவலகங்களில் அதிசிறந்த இலங்கைத் தேயிலைக்கான உலகளாவிய சிலோன் தேநீர் விழா நடாத்தப்பட்டது.

படம் **3.91**



படம் **3.92**



படம் **3.93**



2017 ஜூன் மாதம் 20 ஆம் திகதி நலன்புரி தேயிலை ஏல விற்பனை நடாத்தப்பட்டது. இதன் மூலம் ஈட்டப்பட்ட மொத்த நிதி பெருந்தோட்டக் கைத்தொழிற் துறையின் தொழிலாளர்களின் பயன்பாட்டிற்கான நலன்புரி வேலைத்திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டன.

படம் **3.94**




படம் **3.95**



படம் **3.96**



2017 ஜூலை 20 ஆம் திகதி இலங்கைத் தேயிலையின் 150 வருடகால வரலாறு தொடர்பான ஞாபகார்த்த நூல் வெளியிடப்பட்டது.

படம் **3.97**




படம் **3.98**



படம் **3.99**



சர்வதேச கொழும்பு தேயிலை மாநாடு 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 தொடக்கம் 11 வரை நடாத்தப்பட்டது.. இதற்காக 300 க்கும் அண்மித்த வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன், அதேபோன்று விசேட அதிதிகள் உள்நாட்டிலும் கலந்து கொண்டனர். வெளிநாடு மற்றும் உள்நாட்டு ரீதியில் உலகளாவிய தேயிலைக் கைத்தொழில் மற்றும் சர்வதேச வர்த்தக உலகின் புத்திஜீவிகளுடனான கலந்துரையாடலுக்கான களமும் உருவாக்கப்பட்டது. பல்வேறுபட்ட கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கு வழிவகுக்கும் வகையில் தமது நிபுனத்துவ மற்றும் அனுபவங்களுடன் இம்மாநாட்டில் தமது கலைசார் தகைமைகளை சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டன. உலக தேயிலை உற்பத்தி மற்றும் நுகர்வு ஆகிய இரு வகையிலும் தொடர்புபட்ட நாடுகளிலிருந்து கூடுதலானோர் பங்கேற்றனர். இவர்களின் கவர்ச்சியினை வெற்றிகொள்ள சர்வதேச மட்டத்தில் வேறு விழாக்களும் கொழும்புத் தேயிலை மாநாட்டுக்கு இணைவாக நடாத்தப்பட்டது.

படம் **3.100**




படம் **3.101**




2017 ஆகஸ்ட் 12 மற்றும் 13 ஆகிய இரு தினங்கள் கொழும்பு சினமன் கிரான்ட் ஹோட்டலில் உணவு மற்றும் விவசாய அமைப்பின் தேயிலை தொடர்பான இராட்சியக் குழுக்களுக்கிடையிலான (FAO/IGG on Tea) இடைக்கால அமர்வு நடாத்தப்பட்டது.

தெங்கு, இறப்பர் மற்றும் தேயிலைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குனர்களை வலுவூட்டும் நோக்குடன் அவர்களின் உற்பத்தி மற்றும் சேவைகளை காட்சிப்படுத்துவதற்காக தெங்கு, இறப்பர் மற்றும் தேயிலை தொடர்பான சர்வதேச கண்காட்சி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2017 ஆகஸ்ட் 11 - 13 வரை நடைபெற்றது.

படம் **3.102**



படம் **3.103**



படம் **3.104**



தேயிலைத் துறையுடன் தொடர்புபட்ட கருத்தரங்கு அமர்வு தேயிலை நவீனமயப்படுத்தல் என்ற கருத்தரங்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப மிஹிலக்க மண்டபத்தில் 2017 ஆகஸ்ட் 11 ஆம் திகதி நடைபெற்றது. 275 தேயிலை கைத்தொழிற் தரப்பினர் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது. இலங்கைத் தேயிலை சபையின் தலைவர் கலாநிதி ரொகான் பெத்தியாகொட அவர்களின் தலைமையில் இரண்டு சர்வதேச விரிவுரையாளர்கள் கொண்ட 08 அதிதிகள் இந்தக் கருத்தரங்கில் விரிவுரையினை நிகழ்த்துவதற்காக பங்கேற்றனர்.

படம் **3.105**



படம் **3.106**



இலங்கைத் தேயிலை மற்றும் தேயிலைக் கலாசாரத்தின் அடையாளச் சுற்றுலா மற்றும் இளைஞர்களுக்கிடையே ஊக்குவிக்கும் நோக்குடன் 2017 ஆகஸ்ட் 12 ஆம் திகதி தெரு நிகழ்ச்சியும் நடாத்தப்பட்டது. தேயிலை வர்த்தகக் கூடங்கள், உணவு வர்த்தகக் கூடங்கள் மற்றும் தேயிலை சார்ந்த செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட இசைக்கச்சேரி உள்ளிட்ட கழியாட்ட நிகழ்வுகளும் தேயிலை விழாவில் இடம்பெற்றது. இந்த விழாவை எதிர்காலத்தில் வருடாந்தம் நடாத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

படம் **3.107**



படம் **3.108**



### தேசிய தேயிலை விருது விழா 2017

2017 ஆம் ஆண்டில் இடம்பெற்ற நீண்ட நினைவு தின விழா செயற்பாடுகளின் இறுதியில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சியாக தேசிய தேயிலை விருது விழா காணப்படுகின்றது. இலங்கை தேயிலையின் 150 வருடகால நினைவு தினத்தை அனுஷ்டிப்பதற்கான பிரதான அதிதியாக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் கௌரவ நவீன் திசாநாயக்க அவர்களின் ஏற்பாட்டில் தாமரைத் தடாக தேசிய கலையரங்கில் இவ் விழா நடைபெற்றது.

படம் **3.109**



படம் **3.110**



இவ்விழாவின் மூலம் இலங்கை தேயிலை சபை தேயிலைக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டதுடன் இது தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுத்து அனைத்துத் தரப்பினர்களினதும் வெற்றி, பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்பு பாராட்டப்பட்டது. இது வெறுமனே செயற்சாதனையினை அடிப்படையாகக் கொண்டதுடன் பல்வேறுபட்ட தரப்பு நிறுவனங்களில் ஆலோசனைகளை பெற்று வெற்றியாளர்கள் தோந்தெடுக்கும் முறை ஊடாக இத்தேசிய தேயிலை விருது விழா திட்டமிடப்பட்டிருந்தது.

**கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரிவுகள் ஊடாக 150 விருதுகள் வழங்கப்பட்டன.**

சிறந்த தேயிலைக் கொழுந்து வர்த்தகர், சிறந்த தேயிலைக் காணி, சிறந்த கைத்தொழிற்சாலை, சிறந்த புகைப்படக் கலைஞர், தேயிலை ராஜா மற்றும் ராணி, சிறந்த தேயிலை ஏற்றுமதியாளர்கள், சிறந்த தேயிலை சுவைப் பரிட்சிப்பாளர், சிறந்த தேயிலை நடனம், சிறந்த சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் சங்கத்திற்காக விருதுகள் மற்றும் ஆயுட்கால 06 விருதுகள் தேயிலை கைத்தொழிலின் அபிவிருத்திக்காக பங்களிப்புச் செய்வதற்காக வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

படம் **3.111**




படம் **3.112**




படம் **3.113**




### 3.3.12 பிரச்சாரம் / தகவல் வெளியீடுகள்

இவ் ஆண்டுக்குள் கீழ் குறிப்பிடப்பட்ட ஊக்குவிப்புக்கள் / தகவல் வெளிப்பாடுகள் வெளியிடப்பட்டன

i. இரு மாத சஞ்சிகைகள் (06)

ii. மும்மாத தேயிலை சந்தைப்படுத்தல் மீளாய்வு - 2017 (04)

### 3.3.13 உள்நாட்டு தேயிலை ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள்

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் இலங்கை தேயிலை சபை கீழ் குறிப்பிடப்பட்ட உள்நாட்டு வர்த்தகக் கண்காட்சி மற்றும் நிகழ்ச்சியில் பங்கேற்றதுடன் ஊடக பிரச்சாரம், தேயிலை சார்ந்த சேவைகள், தேயிலைப் பாண உபசரனை இலங்கைத் தேயிலை சபையின், பொதிகள் விற்பனை ஊக்குவிப்புப் பொருள் விநியோகம் போன்ற ஊக்குவிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### சுற்றுலாவின் தங்கப் பாத வேலைத்திட்டம் 2017 - களணி பல்கலைக்கழகம

2017 நவம்பர் மாதம் 27 ஆம் திகதி களணி பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கீழ்க் குறிப்பிடப்பட்ட சுற்றுலாவில் தங்கப் பாத நிகழ்ச்சி கல்விக் கண்காட்சியில் இலங்கை தேயிலை சபையின் பங்கேற்பு இலங்கைத் தேயிலையினை உக்குவித்தல மற்றும் அக்காட்சியினை பார்வையிட வருகை தருவோருக்கு இலங்கை தேயிலை தொடர்பான அறிவினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இக்கண்காட்சியின் போது பங்கேற்றோருக்காக தேநீர் உபசரனை நடாத்தப்பட்டதுடன் தேநீர் சுவையினைப் பரிட்சிக்கும் பல அமர்வுகளும் நடாத்தப்பட்டதுடன் அத்துடன் இலங்கை தேயிலை சபையின் தேயிலை ஊக்குவிப்பு குழுவினால் வீட்டில் சுவையான தரமான தேயிலையினை தயாரிப்பது மற்றும் உள்நாட்டு வர்த்தகர்களுக்கு உயர் தரத்திலான தேயிலையினை எவ்வாறு கொள்வனவு செய்வதைப் போன்று தேயிலை நுகர்வோருக்கு கிடைக்கும் சுகாதாரப் பயன்கள் தொடர்பிலும் பங்கேற்றோருக்காக விளக்கத்தினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### கிரிஸ்மஸ் பீஸ்ட் 2017

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்துடன் இணைந்து இலங்கை சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிருஸ்தவ விவகார அமைச்சு நத்தார் பண்டிகையினை கொண்டாடுவதற்காக ஆகேட் வளாகத்தில் பிரதான சுற்றுலா நிகழ்ச்சி 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 - 22 ஆகிய இரு தினங்களில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இக்கண்காட்சி நடைபெறும் கால எல்லையின் போது இலங்கை தேயிலை சபையின் கண்காட்சி கூடத்தினை முன்னெடுத்து இலங்கை தேயிலை ஊக்குவிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை தேயிலை சபையின் தேயிலை ஊக்குவிப்புக் குழுவினால் இலங்கை தேயிலை ஊக்குவிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு தேயிலை மாதிரிகள் இலவசமாக விநியோகித்து வீட்டில் சுவையான தரம் கொண்ட தேநீர் கோப்பையினை தயாரிக்க மற்றும் உள்நாட்டு சந்தையில் உயர் தரத்திலான தேயிலையை எவ்வாறு கொள்வனவு செய்ய முடியும் என்பது தொடர்பில் பங்கேற்போருக்கு விளக்கத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டன. கௌரவ சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிருஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க அவர்கள் கண்காட்சியின் போது இலங்கை தேயிலை சபையின் கண்காட்சிக் கூடத்திற்கு வருகை தந்தார்.

படம் **3.114**



படம் **3.115**



படம் **3.116**



படம் **3.117**



**கொழும்பு சர்வதேச வர்த்தக கழியாட்ட நிகழ்வு 2017 (ஒக்டோபர் 20 - 22)**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிருஸ்தவ விவகார அமைச்சு கொழும்பு சர்வதேச வர்த்தக கழியாட்ட நிகழ்வு 2017 ஒக்டோபர் 20 - 22 ஆகிய தினங்களில் கொழும்பு இலங்கை கண்காட்சி மற்றும் கருத்தரங்கு மத்திய நிலையத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிந்தது.

இலங்கை தேயிலை சபையும் இக்கழியாட்ட நிகழ்வில் பங்கேற்று வர்த்தக மற்றும் தகவல் நிலையத்தை நடாத்தியது.

படம் **3.118**




படம் **3.119**




**சார்க் சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் மாநாடு**

இலங்கை தேயிலை சபை 2017 ஒக்டோபர் 4 - 5 ஆகிய தினங்களில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலின் சார்க் சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பிற்காக நடாத்தப்பட்ட மாநாட்டில் தேயிலை விற்பனை மற்றும் தேயிலை ஊக்குவிப்பு உட்பட கல்விக் கண்காட்சி நடாத்தப்பட்டது.

படம் **3.120**



படம் **3.121**



**தேயிலை உற்சவம் - கெடபறு விகாரையை அடிப்படையாகக் கொண்டு தெற்கு வலயம் (2017 மே மாதம் 11)**

தனியார் துறையின் உதவியுடன் இலங்கை தேயிலை சபை சுமார் 15,000 பேர்களின் பங்கேற்புடன் 2017 மே மாதம் 11 ஆம் திகதி தென் மாகாணத்தின் கெடபறு விகாரையில் தூய தேயிலை உற்வசம் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் பங்கேற்றோருக்காக தேநீர் உபரசனை வழங்கப்பட்டதுடன் தேயிலை விற்பனை கரும பீடமும் திறந்து வைக்கப்பட்டது.

படம் **3.122**




படம் **3.123**



கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடாத்தப்பட்ட **ICAN** மாநாடு (2017 டிசம்பர் 4 - 8)

2017 ஆம் ஆண்டுக்காக 10 வது - ICAO விமான சேவை உரையாடல் (ICAO Air Service Negotiation - ICAN) 2017 டிசம்பர் 4 - 8 ஆகிய தினங்களில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடாத்தப்பட்டது. இச் சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பு ICAO இன் பிரதான சர்வதேச கரும பீடமாகும். முன்னைய சந்தர்ப்பத்தில் இதற்காக அனுசரனை பகமாஸ், ஜமேக்கா, அன்டாலியா, பாலி மற்றும் டோவன் போன்ற பிரதான சுற்றுலா கேந்திர நிலையங்கள் மூலம் அனுசரனை வழங்கப்பட்டது. 72 நாடுகளிலிருந்து வருகை தந்த 500 வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு மேற்பட்ட அளவினர் இம்மாநாட்டை பிரதிநிதித்துவப்படுத்தினர். இலங்கை சுற்றுலா அதிகார சபை, இலங்கை இரத்தினக்கல் தங்காபரண அதிகார சபையுடன் இணைந்து இலங்க தேயிலை சபையும் இதில் பங்கேற்றது. இலங்கை தேயிலை சபை 2017 ஆம் ஆண்டில் நடாத்திய இவ் ICAN மாநாட்டில் சந்தைப்படுத்தல் விற்பகை கூடத்துடன் தகவல் கூடமும் முன்னெடுக்கப்பட்டது.

படம் **3.124**




படம் **3.125**




கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கு - 2017

இலங்கை இராணுவத்தின் வருடாந்த பாதுகாப்புக் கருத்தரங்கு 'Colombo Defence Seminar - 2017' கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2017 ஆகஸ்ட் 28 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கு சர்வதேச மட்டத்திலான கண்காட்சியுடன் நடைபெற்றது. கண்காட்சியில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு கைத்தொழில் சார்ந்த 50 க்கும் மேற்பட்ட சர்வதேச பிரதிநிதிகளின் கவனத்தை ஈர்க்கச் செய்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது.

கருத்தரங்கு மற்றும் இக்கண்காட்சி வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பங்காளர் தரப்பினர்களுக்காக தமது உற்பத்திகள் மற்றும் சேவைகளை ஊக்குவிப்பதற்கு வாய்ப்பாக அமைந்தது. இதற்கு மேலதிகமாக இலங்கைத் தேயிலையினை வெளிநாட்டு அதிதிகளுக்கிடையே ஊக்குவிப்பதனை நோக்காகக் கொண்டு இலங்கைத் தேயிலை சபை தகவல் கரும பீடம் மற்றும் தேநீர் பாண உபசரனையும் நடாத்தப்பட்டது.

படம் **3.126**




படம் **3.127**



**3.3.14 வெளிநாட்டுப் பிரதிநிதிகள்**

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் சீனா, சிங்கப்பூர், ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, தென்கொரியா, ஐக்கிய இராட்சியம் மற்றும் துருக்கி போன்ற நாடுகளிலிருந்து வருகை தரும் பிரதிநிதிகளுக்காக இலங்கை தேயிலை சபையினால் வசதிகள் வழங்கி உபசரனைகள் வழங்கப்பட்டதுடன், வர்த்தகச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்து இப் பிரதிநிதிகளுக்கு இலங்கையின் தேயிலை கைத்தொழிலின் தரப்பினர்களை சந்திப்பதற்காக வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. இவ் வர்த்தக சந்திப்புக்களுக்கான நோக்கமாக அமைந்தது ஒவ்வொருக்கு இடையிலும் பரஸ்பர ரீதியில் பயன்களைப் பெற்றுக் கொள்ள கூடிய வர்த்தக உறுவுகளை கட்டியெழுப்புதல், அறிவினைப் பகிர்ந்து கொள்வதாகும்.

**மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் இலங்கை தேயிலை சபை கீழ்க் குறிப்பிட்ட கூட்டங்களில் பங்கேற்றுள்ளது.**

2017 ஒக்டோபர் 24 தொடக்கம் 26 வரை கொழும்பில் இடம்பெற்ற இலங்கை மற்றும் ரஷ்யாவிற்கு இடையிலான வர்த்தக பொருளாதார விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான சர்வதேச ஆணைக்குழுவின் இரண்டாவது அமர்வு.

இலங்கை தேயிலையினை ஊக்குவிப்பது தொடர்பாக தேயிலை முகவர்களை ஈரானுக்கு அனுப்புதல்/ வோல்ட்ஒப் ரீ 2017 இற்காக பங்கேற்றல் மற்றும் வர்த்தகம் உட்பட அரச உத்தியோகத்தர்களுக்கிடையே இரு தரப்பு வர்த்தக சந்திப்பு 2017 ஒக்டோபர் 22 - 27 வரை

ரஷ்யாவிற்கு அமைச்சு மட்டத்திலான தேயிலை தூதுக்குழு

2017 நவம்பர் 11 - 12 ஆகிய இரு தினங்கள் அவுஸ்திரேலியா கன்பெறாவில் அவுஸ்திரேலியா தேயிலைக் கலாசாரம் என்ற பெயரில் கருத்தரங்கு இடம்பெற்றது.

அவுஸ்திரேலியா கன்பெறாவில் உள்ள உயர்ஸ்தானிகர் 2017 நவம்பர் 11 - 12 ஆகிய இரு தினங்கள் கன்பெறா நகரில் தேயிலை கருத்தரங்கை ஒழுங்கு செய்தனர். தேயிலை தொடர்பான நிபுனர் டேவிட் லயன்ஸ் இக்கருத்தரங்கை நடாத்தியதுடன் இதற்காக அதிதிகளாக பங்கேற்றோருக்கு இலங்கைத் தேயிலை பரிசுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன.

2017 செப்ரெம்பர் 25 - 30 வரையில் சீன குபேய் (Hubei) மாநிலத்தின் என்சி (Enshi) நகரில் 70 சர்வதேச தேயிலைக் கருத்தரங்கு இடம்பெற்றது.

"The Belt and Road Deliver Tea and Health" மற்றும் சுகாதாரம் என்ற தெனிப்பொருளில் இக்கருத்தரங்கு ஆரம்பமாகியது. இதன் நோக்கமாக அமைந்தது தேயிலைக் கைத்தொழில் முன்னணி சந்தைகள், வர்த்தக ஊக்குவிப்பு, கலாசார ஒழுங்கமைப்பு, சீனா மற்றும் சர்வதேச தேயிலை கைத்தொழிலாளர்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு தொடர்பில் சமகாலப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் புதிய முன்னேற்றம் குறித்து விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு சர்வதேச தேயிலைக் கைத்தொழிலில் ஈடுபட்டோருக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.

படம் **3.128**




படம் **3.129**



**3.3.15** தேயிலை விற்பனை மத்திய நிலையம

இலங்கைத் தேயிலை சபை வளாகத்தில் அமைந்துள்ள தேயிலை விற்பனை மத்திய நிலையத்தின் ஊடாக தேயிலை பொதியிடல் தனியார் தேயிலை கம்பனிகள் 28 தேர்ந்தெடுக்கப்பட்ட தேயிலை உற்பத்தி தொடர்கள் விற்பனை செய்யப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் தேயிலை விற்பனை மத்திய நிலையத்தின் விற்பனை மூலம் 101.9 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டதுடன் இது கடந்த காலத்துடன் ஒப்பீடு செய்யும் போது 3.3% வளர்ச்சியை காண்பித்துள்ளது. இலங்கை தேயிலை சபை பொதி விற்பனை மூலம் 22.08 மில்லியன் ரூபா வருமானம் உழைக்கப்பட்டதுடன், தனியார் துறையின் தேயிலை உற்பத்தி வகைகள் விற்பனை மூலம் 79.8 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது..

**3.3.16** ஊக்குவிப்பினை நோக்காகக் கொண்ட தேயிலை விநியோகம

Ceylon Tea நாமத்தை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டு இலங்கைத் தேயிலை சபையின் பரிசு அடிப்படையில் 6.14 மில்லியன் ரூபா பெறுமதியான தேயிலை விநியோகிக்கப்பட்டது.

1) பரிசு அடிப்படையில் வெளிநாடுகளில் இலங்கை தூதுக்குழுவின் 51 அலுவலங்களுக்குத் தேயிலை விநியோகம

2) சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளின் போது தேயிலை பாண உபசரனை நடாத்துதல் மற்றும் தேயிலையை விநியோகித்தல்.

3) ஊக்குவிப்புக்காக விசேட பிரபுக்களுக்கு / உத்தியோகத்தர்களுக்குத் தேயிலை விநியோகம்

## **3.4** தேயிலை சுவைப் பரிட்சிப்புப் பிரிவு

### **3.4 .1.**பிரதான பணிகள்/ நோக்கம்

தரங்களுக்கமைய குறைந்தபட்ச பண்புசார் தரத்தைப் பேணல்/ மேற்பார்வை நுகர்வோர் பொதிடலுக்கான நாமங்கள் கொண்ட உற்பத்திகளுக்கு சிங்க இலட்சினை சான்றிதழை வழங்குதல் மற்றும் அங்கீகாரம் வழங்குதல் உட்பட தனியார் மற்றும் நேரடி விற்பனைகள் உட்பட எதிர்கால ஒப்பந்த மேற்பார்வை உட்பட அது சார்ந்த செயற்பாடுகள் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

### **3.4 .2.**பிரதான பணிகள்/ நோக்கம்

இச் சுயாதீன சபை கீழ்க் குறிப்பிடப்பட்ட இரு அங்கத்தவர்களைக் கொண்டமைந்துள்ளது.

திரு. சி.என்.ஜி.டி. சில்வா (40 ஆண்டுகளை விட மேற்பட்ட தேயிலை சுவைப் பரிட்சிப்பு அனுவபம் கொண்ட)

திரு. பி.ஏ. பெரேரா (30 வருடங்களை விட மேற்பட்ட தேயிலை சுவை பரிட்சிப்பு அனுவபம் கொண்ட)

கீழ்க் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பங்காளர் தரப்பினர்களைக் கொண்ட பிரதிநிதிகள் குழுவினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கம் - **CTTA**

கொழும்பு தேயிலை தரகர்களின் சங்கம் - **CBA**

இலங்கை பெருந்தோட்டக் கைத்தொழிலாளர்கள் சங்கம் - **CPA**

இலங்கை சிறுதேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்க சம்மேளனம் - **SLFTSHDS**

தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம் - **TEA**

தனியார் தேயிலை தொழிற்சாலைகள் உரிமையாளர்கள் சங்கம் - **PTFOA**

### 3.4.3 தேயிலை சுவைப் பரிட்சிப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் தேயிலை சுவைப் பரிட்சிப்பு முறைகள்

இலங்கை தேயிலை சபை ஐம்புல உணர்வுப் பரிசோதனையை பயன்படுத்த தேயிலை தயாரிப்பு தொடர்பான செயற்பாடுகளின் போது பயன்படுத்தப்படும் ஒழுங்குபடுத்தல்களின் ISO 3102 முறைகள் பின்பற்றப்படுகின்றது. தேயிலை வகைகளின் சொற்றொடர்களுக்காக ISO 6078 தேயிலை சுவைப் பரிட்சிப்பு, இலங்கைத் தேயிலை உற்பத்தி தொடர்பான விடயப் பரப்புக் கொண்ட நூல் இலக்கம் 04 **Monograph on Tea Production in Ceylon no: 4 Tea Manufacture in Ceylon.**

### 3.4.4 நிபுனத்துவ சபையினால் தேயிலை பரிட்சிப்பு தொடர்பான அமர்வை நடாத்துதல்.

கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் சுயாதீன மதிப்பீடுகளை மேற்கொள்ள நிபுனத்துவ சபை பிரதானமாக திங்கள் மற்றும் வியாழக்கிழமை என்ற அடிப்படையில் வாரத்திற்கு இரண்டு தடவைகள் கூடுகின்றனர்.

ஆரம்ப ஏல விற்பனைத் தேயிலை
விசேட ஆய்வுத் தேயிலை
இறக்குமதிக்கு முன்னர் மாதிரி
நேரடி விற்பனை
புதிய ஏற்றுமதி சங்கங்களுக்கான தேயிலை சுவைப் பரீட்சிப்பாளர்களின் மதிப்பீடுகள்
கப்பலேற்றுவதற்கு முன்னர் மேற்பார்வைகள் தொடர்பான
நாளாந்த மதிப்பீடுகள்

தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நிபுனத்துவ சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் உரிய பிரிவு, தேயிலை ஆணையாளர் பிரிவு, முகவர் தேயிலை ஆணையாளர் (ஏற்றுமதி) க்கு சமர்ப்பித்தல்

### 3.4.5 சிங்க இலட்சினை பொதியிடல் பதிவுகளை மேற்கொள்ளல

இலங்கை தேயிலை சபையின் முழுமையான உரிமையினைக் கொண்ட உற்பத்தி செய்யும் நாடு மற்றும் பண்புசார் தரத்தின் குறியீடாக சிங்க இலட்சனை தமது நுகர்வுப் பொதிகளில் காட்சிப்படுத்த எதிர்பார்க்கும் ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி செய்யும் இடம் மற்றும் சந்தைக்கமைய தமது உற்பத்தி மதிப்பீடுகளை மேற்கொள்ள முடிவதுடன் இதற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

இலங்கைத் தேயிலை சபையினால் உரிய நாமத்திற்காக ஒரு வருட கால செல்லுபடியாகும் சிங்க இலட்சினை கொண்ட இலட்சினை வழங்கப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டில் புதிய நாமம் / புதுப்பித்தல், மேலதிக பொதியிடலுக்கு உரிய விண்ணப்பப்படிவம் 758 தொடர்பிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு சில்லறைப் பொதியிடலுக்காக சிங்க இலட்சினையினை பயன்படுத்துவதற்கான உரிமையினை வழங்குதல்.

### 3.4.6 சிங்க இலட்சனையை இடும் பொதிகளின் பண்புசார் தரத்தினை மேற்பார்வை செய்தல் (உள்நாடு, வெளிநாடு, தேயிலை சபைப் பொதிகள்)

2017 ஆம் ஆண்டில் புதிய நாமம் / புதுப்பித்தல், மேலதிக பொதியிடலுக்கு உரிய விண்ணப்பப்படிவம் 758 தொடர்பிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு சில்லறைப் பொதியிடலுக்காக சிங்க இலட்சினையினை பயன்படுத்துவதற்கான உரிமையினை வழங்குதல்.

#### 3.4.6.1 உள்நாடு

எழுமாறாக கொழும்பு பிரபல வர்த்தக நிலையங்கள் மற்றும் சில்லறை வர்த்தக நிலையங்களின் பெற்றுக் கொண்ட விசேடமாக சிங்க இலட்சனை கொண்ட நாமங்கள் மூலம் தேயிலை மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. பிரதானமாக இலங்கைத் தேயிலை சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள பிரபல குறிப்படத்தக்க சந்தைப் பங்குகளுக்கு உரிமை கோரும் பொதியிடலாளர்களுக்கான சிங்க இலட்சினையை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படுவதுடன் பின்னர் மேற்பார்வைப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

#### 3.4.6.2 வெளிநாட்டு மேற்பார்வை

இதன் கீழ் சிங்க இலட்சனை கொண்ட கப்பலேற்றும் தொகை மாதிரிகள் உட்பட சகல ஏற்றுமதி மாதிரிகள், கப்பலேற்றுவதற்கு முன்னர் மேற்பார்வைக்காக பி.தே.ஆ (ஏற்றுமதியினால்) தொகை இருப்பு மேற்பார்வை செயற்பாடுகளின் கீழ் பரிட்சிப்புப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.
எமது வெளிநாட்டுப் பணியகம் மற்றும் இலங்கைத் தூதுவர் அலுவலகத்தில உள்ள வர்த்தக ஆலோசகர்களினால் தொடர்ந்தும் வெளிநாட்டுச் சந்தையினால் காணப்படும் சிங்க இலட்சினையில் குறிப்பிடப்பட்ட பொதிகள் பரிசோதனைகள் மற்றும் அறிக்கைப்படுத்துவதற்காக தேயிலை சுவைப் பரிட்சிப்பு பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 3.4.6.3 தேயிலை சபையின் பொதியிடல்கள்

இலங்கைத் தேயிலை சபையின் பொதிகள் பிரதானமாக எமது விற்பனை கூடங்களில் விற்பனை செய்யப்படுவதுடன், வெளிநாட்டுத் தூதுச்சபை, பணியகங்கள் மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு அனுப்பப்படுகின்றது. இலங்கை தேயிலை சபைக்காக சுவைப் பரீட்சிப்பு அங்கீகாரத்துடன் உத்தியோக பூர்வ பொதியிடலில் தேயிலை ஏலவிற்பனை, தனியார் விற்பனை மார்க்கங்கள் மூலம் தேர்ந்தெடுத்து கொண்டு செல்லப்படுகின்ற கொள்வனவு செய்யப்படும் மாதிரி, மேலதிக மாதிரிகள் மற்றும் கலப்பு மாதிரிகள் இறுதிப்பொதிடலுக்கு முன்னர் தேயிலை சுவைப் பரீட்சிப்புப் பிரிவினால் பரிசோதனைக்கு உட்படுத்தி அங்கீகரிக்கப்படுகின்றது.

எப்.எப்.சீ.ரீ. (500 கிராம்)

பிலான்டஸ் பஞ்சி (100 கிராம் மற்றும் 250 கிராம்)

மிஸ்ட் ஹில்ஸ் (200 கிராம்)

ரோயல் சிலோன் (உலோகப்பொதி 200 கிராம்)

பெமிலிபக் (500 கிராம் மற்றும் 250 கிராம்

பொலிபக் (250 கிராம்)

கிரீன்டீ. (100 கிராம்)

டீ பிளக்கர் (250 கிராம் மற்றும் 100 கிராம்)

லக்சரி பிரேன்ட் - வூடின் ( 125 கிராம்)

லக்சரி பிரேன்ட் - கார்டொன் (125 கிராம்)

கொனைசர் (250, 200, 125 மற்றும் 100 கிராம்)

### 3.4.7 ஏல விற்பனைக்கு முன்னர் தேயிலைத் தர நிருவாகத்திற்காக சுவைப் பரிட்சிப்பு

08 தரகர்களினால் அவர்களின் ஏல விற்பனைக்கு முன்னர் தேயிலை மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தி விற்பனைக்கு இரு வாரங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுகின்றன. இவைகள் முதலில் off- grade, Dust, premium Flowery iy BOP 1A தேயிலை மாதிரி கற்புலன் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து உயிரியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது. மதிப்பீடுகளைத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகள் அடுத்த ஏல விற்பனைக்காக சமர்ப்பிக்கப்படுகின்றதா இல்லையா என்பது குறித்து கூட்டுத் தீர்மானம் எடுப்பதற்காக சுவைப் பரீட்சிப்பு சபைக்கு அனுப்பப்படுகின்றது. இதற்கு மேலதிமாக தரகர்களினால் உயர் மற்றும் மத்தி, லீபி மற்றும் டிப்பி மாதிரிகள் எழுமாறாக மதிப்பீட்டுக்குட்படுத்தப்படுகின்றது. பின்னர் அந்தத் தீர்மானம் பி.தே.ஆ. (ஏற்றுமதி) இற்கு அறிவிக்கப்படும்.

| | |
|---|---|
| கற்புல பரிசோதனைக்குட்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | 181,344 |
| உயிரியல் பரிசோதனை | 18,560 |
| சபையினால் நிராகரிக்கப்பட்ட ஏல விற்பனைக்கு முன்னர் தேயிலை மாதிரிகளின் எண்ணிக்கை (போதை கலக்கப்பட்டுள்ளதா என சந்தேகத்தின் பெயரில்) | 650 |
| சிலிக்கன் பதார்த்தம் | 190 |
| பச்சை நார் | 675 |
| பி.தே.ஆ (ஏற்றுமதியினால்) எழுமாறான அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட ஏல விற்பனைக்கு முன்னரான தேயிலை மாதிரி (BSL/ESL) | |
| பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட தேயிலை அளவு | 6,664 |
| சந்தேகத்திற்கிடமான மாதிரி | 198 |

### 3.4.8 தேயிலை கப்பலேற்றுவதற்கு முன்னர் தர நிருவாகத்திற்கான தேயிலை வகைகளின் சுவைப் பரிட்சிப்புக்கள்

மேற்கூறப்பட்ட மதிப்பீட்டு யோசனை முறைமைகளுக்கமைய பரிட்சாத்தலுக்கு உட்படுத்தப்பட்ட தேயிலை மாதிரி கப்பலேற்ற முன்னர் அவற்றை சிங்க இலச்சினைப் பயன்பாடு (ISO 3720) தரம் தொடர்பாக அல்லது ஏனைய ஏதேனும் அசுத்தம் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்ளும் வகையில் பி.தே.ஆ (ஏற்றுமதி) இனால் தேயிலை மாதிரிகளின் உப ஆவணத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

கப்பல் ஏற்றுவதற்கு முன்னர் மேற்பார்வைகளை மேற்கொள்ளும் முறையின் கீழ் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட மாதிரி அளவு - 6,649

### 3.4.9 இறக்குமதிக்கு முன்னர் தேயிலை தர நிருவாகத்திற்காக சுவைப் பரிட்சிப்பு

இறக்குமதிக்காக உள்ள பொருத்தமான நிலைமைகள் தொடர்பில் ஆய்விற்குப்படுத்துவதற்காக பி.தே.ஆ (ஏற்றுமதி) இனால் மாதிரிப்படிவத்துடன் இறக்குமதிக்கு முன்னர் தேயிலையின் மாதிரி சமர்ப்பிக்கப்படுகின்றது. சகல விண்ணப்பப்படிவங்களும் மாதிரியின் விபரங்கள் குறிப்பிடப்படுகின்றன.

சுவைப் பரிட்சிப்பு பிரிவினால் தேயிலை பரிட்சிப்பு மேற்கொள்ளப்படுவது இலங்கை தேயிலை சபையின் சுற்றறிக்கைக்கமைய இலக்கம் OR/1/65 மற்றும் அதன் மறுசீரமைக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமையவாகும்.

தேயிலை சுவைப் பரிட்சிப்பு பிரிவினால்

பரிட்சாத்தலுக்குட்படுத்தப்பட்ட மாதிரிகளின் அளவு 1,067

### 3.4.10 இறக்குமதிக்கு பின்னா் தேயிலைத் தரத்தை நிர்வகிப்பதற்காக சுவைப் பரிட்சிப்பு

இறக்குமதி செய்யப்பட்ட தேயிலைத் தொகை கிடைக்கப்பெற்றதன் பின்னர் அவற்றின் மாதிரிகளைப் பெற்று தேயிலை ஏற்றுமதிப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஏற்றப்படாத மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது.

வழங்கப்பட்டுள்ள மாதிரிகளுக்கு அமைவாக இம்மாதிரிகள் தேயிலை சுவைப் பரிட்சிப்பு பிரிவிற்கு கிடைக்கப்பெற்றதன் பின்னா் பிரதிப் பணிப்பாளா் (தொழில்நுட்பம்) இனால் இம்மாதிரிப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிகளுடன் ஒப்பீடு செய்து மதிப்பீடு செய்யப்படும்.

பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட மாதிரிகளின் அளவு - 1,138

### 3.4.11 விசேட ஆய்வின் கீழ் சுவைப் பரிட்சிப்பு

தேயிலை வகைகளின் தரம், அசுத்தமடைதல், ஐ.எஸ்.ஓ. அல்லது ஏனைய ஏதேனும் விசேடங்கள் தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளும் வகையில் தேயிலை ஆணையாளர் அல்லது பி.தே.ஆ. (ஏற்றுமதி) இனால் தேயிலை மாதிரி அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுடன் வியாழக்கிழமை குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும்.

### 3.4.12 தனியாா் விற்பனை மதிப்பீட்டுச் சான்றிதழை அங்கீகரித்தல்

சுயாதீன தரகர்களின் அங்கீகாரத்துடன் விற்பனைத் தரகர்களின் தேயிலை மாதிரிகள் இப்பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படும் வேளையில் இப்பிரிவினால் தனியார் விற்பனைக்காக அங்கீகாரம் வழங்கப்படும். மேற்கூறப்பட்ட சேவையினை வழங்கும் போது தொகைக்கு ரூபா. 500 + (VAT + NBT) வட் அங்கீகரிக்கும் கட்டணம் அறவிடப்படுகின்றது. தற்போது மேற்கூறப்பட்ட யோசனைத் திட்டத்தில் பச்சைத் தேயிலை, சேதனப் பசளைத் தேயிலை, விசேட தேயிலை மற்றும் கொழும்பு ஏல விற்பனையின் போது விற்பனை செய்யப்படாத சிறுதுண்டுத் தேயிலை வரையறுக்கப்பட்டுள்ளது

பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தேயிலை தொகை அளவு 8,557 ஆகும்.

### 3.4.13 சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தத்தை அங்கீகரித்தல்

கொள்வனவு செய்யப்படுபவரின் தேவைக்கமைய தேர்ந்தெடுக்கப்படும் பல்வேறுபட்ட வகைகளுக்காக உரிய கால எல்லையில் இவ் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. விற்பனையாளர், கொள்வனவாளர், தரகா் மற்றும் தேயிலை சபை விற்பனை ஒப்பந்தத்தை அங்கீகரித்துள்ளது. மேற்கூறப்பட்ட சேவைக்காகவும் தொகைக்கு ரூபா. 500 + (VAT + NBT) வீதம் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் அறவிடப்படுகின்றது.

அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஒப்பந்த அளவு -36

### 3.4.14 நேரடி விற்பனை அங்கீகாரம

மேற்கூறப்பட்ட யோசனைத் திட்டத்தின் கீழ் உற்பத்தியாளருக்கு மற்றும் ஏற்றுமதியாளருக்கு தமது உற்பத்தியினை நேரடியாக வெளிநாட்டுக் கொள்வனவாளருக்கு விற்பனை செய்வதற்காக அனுமதி வழங்கப்படும். இதற்கு மேலதிமாக பச்சைத் தேயிலை, சேதனப் பசளைத் தேயிலை மற்றும் விசேட தேயிலை உள்நாட்டுக் கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்ய முடியும். வியாழக்கிழமை இடம் பெறும் பரிசோதனை சபையில் நேரடி விற்பனை அங்கீகரிக்கப்படும். மொத்த அங்கீகரிக்கப்பட்ட தனியார் சந்தைப்படுத்தல் அளவு 2110 ஆகம்.

## 3.5 பகுப்பாய்வு இரசாயன ஆய்வுகூடம

### 3.5.1 பகுப்பாய்வு இரசாயண ஆய்வுகூடம் - அதன் சான்றுப்படுத்தல் சேவைக்கான சர்வதேச வரவேற்புக்கள்

1986 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட இலங்கை தேயிலை சபை பகுப்பாய்வு பரிசோதனை ஆய்வுகூடம் 2017 ஆம் ஆண்டில் 30 வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடியதுடன் 2017 ஆம் ஆண்டில் ISO 17025 : 2015 என்ற சர்வதேச தரத்தை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச தர அங்கீகார தரத்தை 4 வது ஆண்டுக்காகவும் பெற்றுக் கொள்ள முடிந்தமை நாம் பெற்ற பாரிய வெற்றியாகும். அரசாங்க நிறுவனங்களைப் போன்று தனியார் துறையின் பரிசோதனை சேவை வழங்குனர்களுக்கிடையே காணப்படும் தேயிலைக்கான விசேட, சர்வதேச தர அங்கீகாரம்பெற்ற முன்னணி ஒரேயொரு இலங்கையில் அமுலில் உள்ள பகுப்பாய்வு ஆய்வுகூடம் சபைக்குரிய இவ் விசேட ஆய்வுகூடமாகும். 2014 மார்ச் மாதம் தொடக்கம் இலங்கையின் தராதர அங்கீகார சபை (SLAB) மூலம் பரஸ்பர அடிப்படையில் அங்கீகரிக்கும் சர்வதேச இரசாயன ஆய்வுகூட தராதர அங்கீகார ஒத்துழைப்பு (ILAC) நிறுவனத்தின் கீழ் இலங்கை தராதர அங்கீகார சபை (SLAB) மூலம் சான்றுப்படுத்தப்பட்டது. இப்பகுப்பாய்வு பரிசோதனை ஆய்வுகூடத்தின் தராதர அங்கீகார விடயப்பரப்பில் ஒப்பீட்டு மதிப்பீடாகும். இரசாயன, கிரிமிநாசினி ஒழிப்பு மற்றும் நுண்ணுயிரியல் பகுப்பாய்வு ஆகிய 03 பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக இப்பகுப்பாய்வு இரசாயன கூடத்தின் தராதர அங்கீகாரத்தைத் தொடர்ந்தும் பேணக்கூடிய வகையில் பகுப்பாய்வு இரசாயன ஆய்வுகூடத்தின் தராதர அங்கீகார சான்றுப்படுத்தப்பட்ட நிறுவனமான இலங்கை தராதர அங்கீகார சபை (SPAB) மூலம் 2017 ஆம் ஆண்டில் இரண்டாவது காலப்பகுதியில் இரசாயன ஆய்வுகூடத்தை மீண்டும் சான்றுப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டது.

### 3.5.2 பரிசோதனை சேவைகளின் அடைவு மட்டங்கள்

2017 ஆம் ஆண்டில் பரிசோதனை சேவைகளில் சுமார் 15% முன்னேற்றங்கள் எட்டப்பட்டது. தேயிலைக் கைத்தொழிலின் பரிசோதனை சேவைகள் 02 மார்க்கங்கள் ஊடாக இப்பகுப்பாய்வு பரிசோதனை ஆய்வு கூடத்திற்கு கிடைக்கப் பெறுகின்றது. உள்ளக மேற்பார்வை சேவை (IMS) மூலம் அறிமுகப்படுத்தப்படும் தேயிலை ஆணையாளர் பிரிவு உட்பட உள்ளகப் பிரிவுகளினால் அல்லது வெளிசான்றுப்படுத்தும் சேவை (ECS) மூலம் அறிமுகப்படுத்தப்படும் தேயிலை உற்பத்தியாளர்கள், தேயிலைத் தரகர்கள், தேயிலை ஏற்றுமதியாளர்கள் மற்றும் தேயிலை இறக்குமதியாளர்கள் உட்பட வெளி வாடிக்கையாளர்கள் மூலமும் தேயிலைக் கைத்தொழிலின் பரிசோதனைகளுக்கான மாதிரிகள் இப் பகுப்பாய்வு ஆய்வுகூடத்திற்கு கிடைக்கின்றது. வேலை கொள்வோரினால் கட்டணம் செலுத்தும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சேவைகளுக்காக உதாரணமாக வெளிச் சான்றுப்படுத்தும் சேவை (ECS மூலம்) மேற்கொள்ளப்பட்ட மொத்த பரிசோதனைகளை மேற்கொள்ளும் பணிகளில் 68.3% (உதாரணமாக - 9603 பரிசோதனைகள்) ஆராய்ச்சி ஆய்வுகூடத்திற்கு கிடைக்கும் வருமானமாக கணக்குகளில் பதியப்பட்டுள்ளது. எஞ்சிய 31.7% அளவு (4467 பரிசோதனைகள் மாத்திரம்) உள்ளக மேற்பார்வை சேவை (IMS) வகைகளில் உள்ளடங்குவதுடன் தேயிலை நிருவாகச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட மேற்பார்வை தேவைகளுக்காக மேற்கொள்ளும் பரிசோதனை இவ்வகையில் உள்ளடங்குகின்றது. 2017 ஆம் ஆண்டுக்கு இணைவாக பகுப்பாய்வு இரசாயன ஆய்வுகூடத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் சுருக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

அட்டவணை 3.16 : பகுப்பாய்வு இரசாயன ஆய்வுகூடத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் சுருக்க அடைவு மட்டங்கள

| பரிசோதனைகளின் பெயர் | | பரிசோதனைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | 2016 | 2017 |
| **இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவு** | | | |
| 1. | தேயிலையின் காற்றின் ஈரழிப்பு அளவினைத் தீர்மானித்தல் | 342 | 349 |
| 2. | தேயிலையின் மொத்தச் சாம்பல் அளவினை நிர்னயித்தல் | 365 | 291 |
| 3. | தேயிலையின் நீரின் கரையும் சாம்பல் அளவினை நிர்னயித்தல் | 355 | 291 |
| 4. | தேயிலையின் நீரில் கரையும் சாம்பலின் அமிலத்தின் அளவினை நிர்னயித்தல் | 355 | 291 |
| 5. | தேயிலையின் நீர்க் கரைசல் அளவை நிர்னயித்தல் | 365 | 293 |
| 6. | தேயிலையின் நீரில் கரையும் சாம்பலின் காரத்தன்மையினை நிர்னயித்தல் | 387 | 299 |
| 7. | தேயிலையின் நீரில் கரையும் சாம்பலின் நார் அளவினை நிர்னயித்தல் | 858 | 396 |
| 8. | அடிப்படை கதிர்வீச்சினைத் தீர்மானிக்கும் பரிசோதனை | 116 | 164 |
| 9. | ஏனைய பரிசோனைகள் (சேர்க்கப்பட்ட வர்ணம், சீனி, ஜெலி, போதை, இரசாயனத்தை இனங்காணல், காபனைட், ஏனைய பொருட்கள்) | 11 | 73 |
| 10. | தரத்தை இனங்காணுதல் பரிசோதனை / வடிசல் பகுப்பாய்வு | 49 | 51 |
| **நுண்ணுயிரியல் பகுப்பாய்வுப் பிரிவு** | | | |
| 1. | தேயிலையின் மொத்தக் கலங்களின் அளவினைத் தீர்மானித்தல் | 780 | 629 |
| 2. | ஈஸ்ட் மற்றும் வெற்று அளவினை தீர்மானித்தல் | 783 | 631 |
| 3. | தேயிலையின் கிருமி மற்றும் ஏனைய அசுத்தங்கள் / வெளிப் பொருட்கள் தொடர்பிலான நுணுக்குக் காட்டிப் பரிசோதனை | 40 | 51 |
| 4. | தேயிலையில் இனப்பெருக்க மாற்றங்கள் மேற்கொள்ளக்கூடிய பதார்த்தங்கள் தொடர்பிலான தீர்மானம் | 828 | 951 |
| 5. | Faecal Coliforms Escherichiacoli(E.coli -வெளிப்படுத்தல் மற்றும் கணிப்பீடுகள்) | 782 | 629 |
| 6. | .மொத்த Coliform அளவு வெளிப்படுத்தல்கள் மற்றும் கணிப்பீடுகளை மேற்கொள்ளல் | 789 | 633 |
| **கிருமிநாசினி பகுப்பாய்வுப் பிரிவு** | | | |
| 1. | ஈகோன் | 668 | 1006 |
| 2. | மலத்தீன் | 668 | 1006 |
| 3. | Cypermethrin | 668 | 1006 |
| 4. | Endosulfan | 668 | 1006 |
| 5. | Bifenthrin | 217 | 1006 |
| 6. | Bromopropylate | 668 | 1006 |
| 7. | Tetradifon | 668 | 1006 |
| 8. | Endo Sulphan sulphate | 668 | 1006 |
| 9. | Bitertanol | 90 | - |
| **மொத்தம்** | | **12188** | **14070** |

இலங்கை தராதர அங்கீகார சபையுடன் இவ் ஆராய்ச்சி ஆய்வுகூடத்தின் தராதர அங்கீகாரங்கள் மறுசீரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து தேயிலைக் கைத்தொழிலின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக புதிய ஆராய்ச்சி ஆய்வுகூடத்தின் பரிசோதனைகளை அறிமுகப்படுத்த பகுப்பாய்வு இரசாயன ஆய்வுகூடம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகள் மூலம் தாபிக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஆவியாகும் மட்டம் (MRLS) இற்கு அமைவாக இருப்பதற்கான பிரதான ஆராய்ச்சி தேவைகளான ஈதோன், மலத்தீன், சைபர்மேத்திரின், என்டர்சல்பன் சல்பேட், மற்றும் என்டர்சல்பன் ஆகிய பரிசோதனை கிரிமிநாசினி அழிப்பு பகுப்பாய்வுப் பிரிவின் மூலம் இனங்காணப்பட்டுள்ளது.

### 3.5.3 தேயிலை சபையின் வருமானத்திற்கான பங்களிப்பு

“ECS வகைப்படுத்தலின்” கீழ் இரசாயன ஆய்வுகூட சேவைக்கான பங்களிப்புக்கள் மற்றும் இனங்காணப்பட்ட மற்றும் அறிக்கைப்படுத்துவதற்காக தேயிலை ஆணையாளரினால் மதிப்பீடுகள் மற்றும் அறிக்கைப்படுத்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட உத்தியோகபூர்வ மாதிரி பரிசோதனைப் பெறுபேறுகளில் காண்பிக்கப்படும் குறைந்தபட்ச தரங்களுக்கு அமையவில்லை என இனங்காணப்பட்ட தேயிலை மாதிரிகளுக்காக மேற்கொள்ளும் பரிசோதனை பிரதானமாக சபையின் வருமானத்திற்காக பங்களிப்புச் செய்யப்படுகின்றது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுக்கு இணைவாக பகுப்பாய்வு இரசாயன ஆய்வுகூடத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த வருமானச் சுருக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | 2016 (ரூபா.) | 2017(ரூபா.) |
|---|---|---|
| மொத்த வருமானம் | 20,143,500.00 | 23,197,100.00 |

உரிய கால எல்லைக்குள் தேயிலை சபையின் ஆராய்ச்சி அலுவலகத்தின் மூலம் எட்டப்பட்ட சர்வதேச தாரதர அங்கீகார தரச் சான்றுப்படுத்தல்கள் காரணமாக கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு “ECS வகைப்படுத்தல்” இன் கீழ் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக கூடுதலான கேள்விகள் உருவாகியிருப்பதை முக்கிய அடைவு மட்டமாக குறிப்பிட முடியும். மொத்த ஆராய்ச்சி ஆய்வுகூடத்தின் மூலம் IMS மற்றும் ECS ஆகிய முறைகள் மூலம் கிடைக்கும் மொத்த வருமானங்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

அட்டவணை 3.17 : IMS மற்றும் ECS முறைகள் மூலம் முழுமையான ஆராய்ச்சி ஆய்வுகூட வருமானப் பங்குகள்

| | 2016 (ரூபா.) | % | 2017 (ரூபா.) | % |
|---|---|---|---|---|
| உள்ளக மேற்பார்வை சேவை (IMS) | 8,404,000 | 41.72 | 6,391,500 | 27.55 |
| வெளிச் சான்றுப்படுத்தல் சேவை (ECS) | 11,739,500 | 58.28 | 16,805,600 | 72.45 |
| **மொத்த வருமானம்** | **20,143,500** | | **23,197,100** | |

### 3.5.4 தேயிலைக் கைத்தொழிலிற்காக வசதிகளை வழங்குதல்

உத்தியோகபூர்வமாக பெற்றுக் கொள்ளும் சந்தேகத்துக்குரிய தேயிலை மாதிரிகளின் பண்புசார் தரம் தொடர்பில் தீர்மானிக்கும் போது இலங்கைத் தேயிலை சபையின் உள்ளகப் பிரிவு தேயிலை ஆணையாளர் பிரிவு மற்றும் தேயிலை ஏற்றுமதிப் பிரிவிற்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவது பகுப்பாய்வு இரசாயன கூடத்தின் பொறுப்பாகும். பயிற்சித் தேயிலை மாதிரிகளைப் பெற்றுக் கொளளும் குழு (தேயிலை ஆராய்ச்சியாளர்கள் - பிராந்திய தேயிலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்) தேயிலை ஆணையாளர்/ பிரதி தேயிலை ஆணையாளர் (ஏற்றுமதி/ அபிவிருத்தி/ மேற்பார்வை) ஆகியோரின் உத்தரவுகளுக்கமைய ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வெளியேற்றும் இடங்களில் விரிவடைந்துள்ள உத்தியோகபூர்வமாக தேயிலை மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளும் பணியில் ஈடுபட்டுள்ளது. (அதாவது தேயிலைத் தொழிற்சாலைகள், தேயிலை தரகர்கள், தேயிலை ஏல விற்பனை மற்றும் ஏற்றுமதியாளர்கள்) அதனைத் தொடர்ந்து எல்லைக்குள் மற்றும் எல்லைக்கு கீழாகக் காணப்படுவதாக இனங்காணப்பட்ட மாதிரிகள் விஞ்ஞான அறிக்கைக்காக பகுப்பாய்வு இரசாயன கூடத்திற்கு அனுப்பப்படுகின்றது.

பகுப்பாய்வு இரசாயன ஆய்வுகூடத்தின் பிரதான செயற்பாடுகளின் ஒன்றாக அமைவது ISO குறைந்தபட்ச தரத்தின் ஒப்பளவுகளுக்கமைய விசேடமாக ISO 3720 இற்கமைய தேயிலை மாதிரிகளின் குறைந்தபட்ச பண்புசார் தரத்தை பரிசோதனை செய்வதும் அறிக்கைப்படுத்துவதுமாகும். கருந்தேயிலை தொடர்பான விளக்கங்களை வழங்குதல் மற்றும் கருந்தேயிலையின் அடிப்படைத் தேவைகள் உட்பட ISO11287 பச்சைத் தேயிலை வரைவிலக்கணப்படுத்துவது அடிப்படை தேவையாகும். ISO தரம் தொடர்பில் சர்வதேச ரீதியில் தர அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்ட பகுப்பாய்வு ஆராய்ச்சி ஆய்வுகூடத்தின் இரசாயன பகுப்பாய்வுப் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற மாதிரிக்காக அதன் சான்றிதழ்கள் வெளியிடப்படுவதுடன், மேற்பார்வைப் பணிகளுக்காக தேயிலை ஆணையாருக்கு குறைந்தபட்ச பண்புசார் தரம் தொடர்பில் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. 1957 இலக்கம் 51 கொண்ட தேயிலை நிருவாகச் சட்டம் மற்றும் அதற்குரிய ஒழுங்குக் கோவைகள் உட்பட தேயிலை சபை வழிகாட்டல ஆலோசனை / தரம் - 2010 இன் மூலம் பணிக்கப்பட்டுள்ள தேவைகளைப் பின்பற்றி தேயிலை ஆணையாளரினால் அது தொடர்பில் உத்தியோகபூர்வ செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டுக்குள் மொத்தப் பரிசோதனைகளின் எண்ணிக்கையான 4467 இல் ISO குறைந்தபட்ச தரங்களை விடக் குறைந்த 1371 மாதிரிகளை இனங்காண்பதற்கு பகுப்பாய்வுப் பரிசோதனை ஆய்வுகூடத்திற்கு முடிந்தது. 03 பரிசோதனைத் துறைகள் உள்ளடங்கக்கூடிய வகையில் மேற்கூறப்பட்ட வகைகளின் கீழ் நிராகரிக்கப்பட்ட தேயிலை மொத்த இருப்பு அளவு தொடர்பில் அடிப்படை தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான சுருக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 3.18 : தேயிலை இருப்பு நிராகரிப்பு

| பகுப்பாய்வுப் பிரிவு | ISO குறைந்தபட்ச தரத்தை விடக் குறைந்த மட்டத்திலான தரம் (பரிசோதனைகளின் எண்ணிக்கை) |
|---|---|
| நுண்ணுயிரியல் பகுப்பாய்வு | 1162 |
| இரசாயனப் பகுப்பாய்வு | 209 |
| கிரிமிநாசினி பகுப்பாய்வு | 52 |

### 3.5.4.1 கிரிமிநாசினி ஒழிப்பு பகுப்பாய்வுப் பிரிவின் செயற்சாதனைகள்

1959 இலக்கம் 16 கொண்ட தேயிலை வரி மற்றும் ஏற்றுமதி நிருவாகச் சட்டம் உட்பட அதற்குரியதான ஒழுங்குக் கோவைகளுக்கமைய பெறுமதி சேர்க்கப்பட்ட மற்றும் அதனைத் தொடர்ந்து மீள ஏற்றுமதி செய்வதற்காக இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள ஏனைய வகைகளைக் கொண்ட தேயிலைக்கான கிரிமிநாசினி பகுப்பாய்வு சான்றிதழ்களை வழங்குவது அவசியமாகும். 2017 கால எல்லைக்குள் தேயிலை இறக்குமதியாளர்களினால் ஆரம்பிக்கப்பட்ட பகுப்பாய்வு இரசாயன ஆய்வுகூடத்தின் மூலம் மேற்கொள்ளுமாறு கோரப்பட்டிருந்த மொத்தப் பரிசோதனைகளின் எண்ணிக்கை 8048 ஆகும். (மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பரிசோதனைகள் 57.2%) ஆகும். தேயிலை ஆணையாளரினால் வெளியிடப்பட்ட இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை வெளியிடும் தேவைகள் நிவர்த்தி செய்யப்படுகின்றதா என பகுப்பாய்வு இரசாயண ஆய்வுகூடத்தின் கிரிமிநாசினி ஒழிப்புப் பிரிவினால் பரிசோதனைகளை மேற்கொண்டு இறக்குமதி செய்வதற்கு முன்னர் இறக்குமதி தேயிலை சான்றுப்பத்திரம் வழங்கப்படுகின்து. எனவே எவையேனும் இறக்குமதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மாதிரி அங்கீகரிக்கப்பட்ட குறைந்தபட்ச எச்சங்களின் மட்டங்கள் (MRLs) இனை விடக் கூடுதலாக எச்சங்கள் இருப்பதாக இனங்காணப்படும் பட்சத்தில் தேயிலை ஆணையாளரினால் இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை நிராகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். தேயிலைக் கைத்தொழிலின் தேவையை நிவர்த்தி செய்வதற்காக நவீன உயர் தொழில்நுட்ப உபரணங்களைக் கொண்ட முழுமையான பகுப்பாய்வு இரசாயன ஆய்வுகூடத்தின் கிரிமிநாசினி பகுப்பாய்வுப் பிரிவிற்கு தேர்ச்சி பெற்ற பணியாளர் சபை சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் இதன் நாளாந்த இலக்கினை நிவர்த்தி செய்வதற்காக உரிய நேரத்திற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளும் இயலுமை இப்பிரிவிற்கு காணப்படுகின்றது. கிரிமிநாசினி பகுப்பாய்வுப் பிரிவு ஆராய்ச்சி ஆய்வுகூடத்தின் வருமானத்திற்கு தனியாக பங்களிப்பு செய்வதாகக் குறிப்பிடுவது முக்கியம் என்பதுடன் 2017 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை 8048 என்பதுடன் இரசாயன ஆய்வுகூடத்தின் மொத்த வருமானம் ரூபா. 15,094,100.00 என பதிவாகியுள்ளது.

கிரிமிநாசினி எச்சப் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முழுமையான பரிசோதனைகளில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட் தொகையினை பிரதிநிதித்துவப்படுத்தும் 52 மாதிரிகள் கீழக் குறிப்பிடப்பட்டவாறு நிராகரிக்கப்பட்டதாக குறிப்பிடுவது முக்கியமானதாகும்.

அட்டவணை 3.19 : இறக்குமதி செய்யப்பட்ட மாதிரிகளில் நிராகரிக்கப்பட்டவைகள

| கிரிமிநாசினி பரிசோதனை வகை | தரம் / வழிகாட்டலை விடக் குறைந்த மட்டம் (பரிசோதனைகளின் எண்ணிக்கை) |
|---|---|
| Ethion | 10 |
| Cypermethrin | 28 |
| Endosulfan sulphate | 10 |
| endosulfan | 3 |
| Bifenthrin | 1 |

### 3.5.4.2 நுண்ணுயிரியல் புகுப்பாய்வுப் பிரிவின் செயற்சாதனைகள

தேயிலை வகைகளின் தரம்/ வழிகாட்டல் ஆலோசனை - 2010 பின்பற்றி நுண்ணுயிரியல் கொண்டதாக சந்தேகிக்கப்பட்ட தேயிலை மாதிரிகளை பரிசோதனை செய்து பகுப்பாய்வு இரசாயன கூடத்தின் நுண்ணுயிரியல் பகுப்பாய்வுப் பிரிவின் உயரிய மட்டக் கொள்ளளவில் செயற்படுவதுடன் அது வழங்கப்பட்டுள்ள தராதர அங்கீகாரத் தரத்திற்கமைய தேயிலை மாதிரி மதிப்பீடு மற்றும் சான்றிதழ்களை வெளியிடுவதன் மூலம் இலங்கை தேயிலை வர்த்தகத்திற்கான உயரிய மட்டப் பங்களிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் இதன் தகைமைகள் முழுமையாக தொழில்நுட்பப் பணியாளர் சபையினால் 3524 பரிசோதனைகள் (சுமார் **25.0%**) செயற்படுத்தப்பட்டது. பகுப்பாய்வு இரசாயன கூடத்திற்காக பிரதான வருமானத்தை ஈட்டும் மார்க்கமான நுண்ணுயிரியல் பகுப்பாய்வுப் பிரிவினால் 3524 பரிசோதனைகளை மேற்கொண்டு 2017 ஆம் ஆண்டில் ரூபா. **6,449,500.00** நிதி ஆய்வுகூடத்தின் வருமானத்திற்கு பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது. கீழக் குறிப்பிடப்பட்டவாறான மாதிரி எண்ணிக்கைகளில் 1162 மாதிரிகள் நுண்ணுயிரியல் கொண்ட மாதிரிகளாக இனங்காணப்பட்டுள்ளன.

அட்டவணை 3.20 : நுண்ணுயிரியல் மாதிரிகளின் உள்ளடக்கம்

| நுண்ணுயிரியல் பரிசோதனை | தரம் / வழிகாட்டலை விடக் குறைந்த மட்டம் (பரிசோதனைகளின் எண்ணிக்கை) |
|---|---|
| மொத்தக் கலங்களின் அளவு | 348 |
| ஈஸ்ட் மற்றும் வெற்று அளவு | 451 |
| கொலிபோம் அளவு | 350 |
| E-coli | 13 |

உள்ளக சான்றுப்பத்திர சேவை மூலம் உரிய தரங்களை விடக் குறைந்த மட்டம் கொண்ட நுகர்விற்குப் பொருத்தமற்றதாக இனங்காணப்பட்ட மாதிரிகளின் இயற்கையின் அடையாளங்களை மாற்றியமைப்பதற்கு உட்படுத்தி தேயிலை சபையின் மேற்பார்வை செயற்பாட்டு ஒழுங்கு முறைகளைப் பின்பற்றி அவை முறைமையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

### 3.5.4.3 இரசாயன பகுப்பாய்வுப் பிரிவின் செயற்சாதனைகள்

கருந்தேயிலை மற்றும் பச்சைத் தேயிலைக்காக அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரத் தொடர்களுக்கமைய **ISO** 3720 மற்றும் **ISO** 11287 தரங்களுக்கமைய தேயிலை மாதிரியின் குறைந்தபட்ச பண்புசார் தரத்தை மதிப்பீட்டுக்குட்படுத்தி பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் அறிக்கைப்படுத்துவதற்காக 07 இரசாயனகூட பரிசோதனைகளை மேற்கொள்வது கட்டாயமானதாகும். 2017 ஆம் ஆண்டுக்குள் பகுப்பாய்வு இரசாயன ஆய்வுகூடத்தின் இரசாயன பகுப்பாய்வுப் பிரிவின் மூலம் 2428 பரிசோதனைகள் (மொத்த பரிசோதனைகளில் சுமார் **17.8%**) மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 209 மாதிரித் தரத்தை விடக் குறைந்த மாதிரியாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இப்பெறுபேறுகளை மேற்பார்வை செய்வதற்காக தேயிலை ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. கடந்த காலத்திற்குள் இது ரூபா **1,653,500.00** நிதி ஈட்டப்பட்டுள்ளது. குறைந்தபட்ச தரங்களுக்கமைய பொருத்தமற்றது எனத் தீர்மானிப்பதினால் அளிக்கப்பட்ட மாதிரிகளுக்கு வரையறுக்கப்பட்ட பரிசோதனைத் தரங்கள் மூலமான விபரங்கள் கீழ்க் குறிப்பிட்டவாறு சுருக்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

அட்டவணை 3.21 : உரிய குறைந்தபட்ச தகைமைகள் அற்ற மாதிரிகளை அழித்தல்.

| இரசாயண பரிசோதனைகளின் வகைகள் | தரம் / வழிகாட்டலை விடக் குறைந்த மட்டம் (பரிசோதனைகளின் எண்ணிக்கை) |
|---|---|
| மொத்த நார் அளவினை இனங்காணல் | 151 |
| கரைசலை இனங்காணல் | 34 |
| சிலிக்கோன் பொருள் - அசிட் கரைசல் | 10 |
| சீனி போன்றவைகளின் உள்ளடக்கம் | 10 |
| ஏனைய கழிவுக் காரணிகள் | 4 |

### 3.5.4.4 தரப் பரிசோதனைப் பிரிவின் செயற்சாதனைகள்

பகுப்பாய்வு இரசாயன ஆய்வுகூடத்தில் பயிற்சிபெற்ற தொழில்நுட்பப் பணியாளர் சபை மூலம் கப்பலேற்றும் மொத்தத் தொகையின் கீழ் வகைப்படுத்தப்பட்ட சந்தேகத்திற்குரிய தேயிலையான பிரச்சினைகள் எழுந்த தேயிலைகளின் மாதிரி துறையில் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகள் மற்றும் இலங்கை தேயிலை சபையின் அதிஉயரிய உற்பத்தி உறுதிப்படுத்தல் வேலைத்திட்டங்களுக்காக கலப்புத் தேயிலை மாதிரிகளை சேகரிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சகல பரிசோதனைகளினதும் உண்மைத் தன்மை மாதிரியினை பெற்றுக் கொள்வது உண்மைத் தன்மையில் தங்கியிருப்பதனால் இத்தேர்ச்சி பணியாளர் சபையினால் விஞ்ஞான ரீதியிலான செயற்பாடுகளை பின்பற்றி மாதிரிகள் பெற்றுக் கொள்ள வேண்டும். தேயிலை பரிசோதகர்கள், பிராந்திய தேயிலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உதவித் தேயிலை ஆணையாளர்கள் மற்றும் பிரதித் தேயிலை ஆணையாளர்கள் ஆகிய தேயிலை ஆணையாளர் பிரிவின் தேயிலை மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் பகுப்பாய்வு இரசாயன ஆய்வுகூடத்தின் மூலம் பெயரிடப்பட்ட விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் உதாரணமாக மாதிரி பெற்றுக் கொள்ளும் போது விசேட கருவியாகப் பயன்படுத்தல் மற்றும் மாதிரி பெற்றுக் கொள்ளும் திறன் முறைகளை பயன்படுத்துவது தொடர்பில் நிபுனத்துவ அறிவு கொண்ட பகுப்பாய்வாளர், தர முகாமைத்துவ உத்தியோகத்தர், தொழில்நுட்ப உதவியாளர் போன்ற உத்தியோகத்தருடன் சகல சந்தர்ப்பங்களிலும் இணைந்து செயற்பட வேண்டும். 2017 ஆம் ஆண்டில் பகுப்பாய்வு ஆராய்ச்சி நிறுவகத்தின் தொழில்நுட்பப் பணியாளர் சபை மூலம் விஞ்ஞான முறைகளை பின்பற்றி மாதிரிகளை பெற்றுக் கொள்ளல், மீளப் மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் 61 செயற்பாடுகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

## 3.6 நிர்வாகப் பிரிவு

இலங்கைத் தேயிலை சபையின் நிர்வாகப் பிரிவினால் சகல மானிட வள முகாமைத்துவம் மற்றும் மானிட வள அபிவிருத்திப் பணிகளை வகுத்தல், அமுல்படுத்தல், மேற்பார்வை மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல், தகவல் தொழில்நுட்ப சேவைகளை அமுல்படுத்தல் மற்றும் முன்னெடுத்தல், சபையின் திட்டமிடல்களை மேற்கொள்ளல், மேற்பார்வைகளை மேற்கொள்ளல் மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளின் இணைப்புப் பணிகள் மற்றும் வசதிகளை வழங்குதல், புள்ளிவிபரம் சார்ந்த தகவல்களை விநியோகித்தல் மற்றும் இலங்கை தேயிலை சபை நூலகத்தை முன்னெடுத்துச் சென்று தேயிலைத் தரப்பினர்களின் தரப்பினர்களுக்கு தேவையான தகவல் சேவைகளை வழங்குதல், சபையின் பராமரிப்புப் பணிகள், போக்குவரத்து வசதிகளை வழங்குதல், பெறுகைச் செயற்பாடுகள், பாதுகாப்புச் செயற்பாடுகளை வழங்குதல் போன்ற பிரதான பொறுப்புக்கள் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.6.1 இலங்கை தேயிலை சபையின் பணியாளர் சபை

அட்டவணை **3.22 :** இலங்கை தேயிலை சபையின் பணியாளர் சபை 2017 டிசம்பர் 31 ஆம் திகதியன்று

| வகை | ஊழியர் எண்ணிக்கை | | மட்டம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| சிரேஷ்ட மட்டம் | 04 | 01 | 5(1.7%) |
| மூன்றாம் நிலை மட்டம் | 38 | 25 | 63(22.6%) |
| இடைநிலை மட்டம் | 51 | 91 | 142(50.9%) |
| ஆரம்ப மட்டம் | 63 | 06 | 69 (24.8%) |
| **மொத்தம்** | **156** (55.9%) | **123** (44.1%) | **279(100%)** |

அட்டவணை 3.23 : ஆண்டுக்கான மானிட வளப் பாய்ச்சல் 2017

| விபரங்கள் | ஊழியர் எண்ணிக்கை |
|---|---|
| இராஜினாமா | 10 |
| ஓய்வுபெறல் | 07 |
| சேவையை இடைநிறுத்தல் | 00 |
| சேவையை விட்டு விலகல் | 00 |
| **மொத்தம்** | **17** |

### 3.6.2 மானிட வள அபிவிருத்தி

அட்டவணை 3.24 : உள்நாட்டு பயிற்சி (தனிப்பட்ட)

| வகை | பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை |
|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 00 |
| மூன்றாம் நிலை மட்டம் | 29 |
| இடைநிலை மட்டம் | 27 |
| ஆரம்ப மட்டம் | 16 |
| **மொத்தம்** | **72** |

**உள்ளக பயிற்சி வேலைத்திட்டங்கள் - 2017 செயலமர்வு**

**1. பெறுகை மற்றும் விலைமனு மதிப்பீடுகள் தொடர்பான செயலமர்வு**

இப்பிரயோக பயிற்சி வேலைத்திட்டத்திற்காக பங்கேற்றோருக்கு பொது பெறுகைச் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் விலைமனு மதிப்பீடு தொடர்பாக தீர்க்கமான பிரிவுகள் தொடர்பில் விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள உதவும் நோக்குடன் நடாத்தப்பட்டது. 2017 பெப்ரவரி 17 ஆம் திகதி நடாத்தப்பட்ட செயலமர்விற்காக முகாமைத்துவ மட்டத்தின் உத்தியோகத்தர்கள் (சிரேஷ்ட முகாமையாளர்கள், இடைமட்ட முகாமையாளர் மற்றும் கனிஷ்ட முகாமையாளர்கள்) 75 பேர் கலந்து கொண்டனர்.

**2. அலுவலக முகாமைத்துவ மற்றும் அலுவலக செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பான செயலமர்வு**

அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலுவலக செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பில் தீர்க்கமான பிரிவு தொடர்பில் விளக்கம் பெறுவதற்காக பங்கேற்றோருக்கு வாய்ப்பினை வழங்கும் வகையில் இவ் உள்ளக பயிற்சி வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவது நோக்கமாக அமைந்தது. 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) 15 ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளிநாட்டுப் பயிற்சி**

அட்டவணை 3.25 : வெளிநாட்டுப் பயிற்சி

| வகை | பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கை |
|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 01 |
| மூன்றாம் நிலை மட்டம் | 00 |
| இடைநிலை மட்டம் | 12 |
| ஆரம்ப மட்டம் | 00 |
| **மொத்தம்** | **13** |

**தேயிலை சபைத் தினம் 2017 - குழு உணர்வினைக் கட்டியெழுப்பும் விழா**

குழு உணர்வினை கட்டியெழுப்பும் இவ் வருடாந்த விழாவில் அதற்காக பங்கேற்றோருக்கு அவர்களின் குழு உணர்வினை வலுவூட்டுவதற்காக உதவும் நோக்குடன் நடாத்தப்பட்டது. இலங்கை தேயிலை சபையின் சகல பணியாளர் சபையினரும் 2017 மார்ச் 25 ஆம் திகதி வாதுவ விலா ஓசன் ஹோட்டலில் நடாத்தப்பட்ட விழாவில் கலந்து கொண்டனர்.






3.6.3. சமூக நலன்புரி செயற்திட்டம் - 2017

**வெள்ளப் பெருக்கு மற்றும் மண் சரிவுகளுக்கு இலக்கான தேயிலைக் கைத்தொழில் தரப்பினர்களுக்காக 2017 மே மாதத்தில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.**

2017 மே மாதத்தில் நாட்டில் இடம்பெற்ற அனர்த்த நிலைமைகளை கருத்திற் கொண்டு தேயிலை சபையின் முகாமைத்துவம் வெள்ளப்பெருக்குக்கு உட்பட்டோர் மற்றும் மண்சரிவிற்கு இலக்கானோருக்காக விசேடமாக வெள்ளப்பெருக்கு மற்றும் மண் சரிவுகளுக்கு உட்பட்ட பணியாளர் சபையின் அங்கத்தவர்கள், தேயிலை கைத்தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் களுத்துறை, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களின் சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன. இச் செயற்திட்டத்தின் மொத்தப் பெறுமதி ரூபா 5,828,219/- ஆகும்.

## 3.7. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

இலங்கைத் தேயிலை சபையின் உள்ளகக் கணக்காய்வு சுயாதீன மதிப்பீட்டுப் பணியாகும். இதன் மூலம் முகாமைத்துவத்தின் சகல மட்டங்களுக்காகவும் தேவையான செயற்பாடுகள் ஆய்விற்கு உட்படுத்தப்படுகின்றன. இந்நிறுவனத்தின் வளத்தினை வினைத்திறனுடன் பயன்படுத்தும் பங்களிப்பு வழங்கும் வகையில் நிதி மற்றும் நிதிசாரா உள்ளக நிர்வாகத்தின் உற்பத்தித் திறன் தொடர்பான அளவீடுகள், மதிப்பீடுகள் மற்றும் அறிக்கைப்படுத்துவது இப்பிரிவின் செயற்பாடுகளாகும்.

இலங்கைத் தேயிலை சபையின் கணக்காய்வு குழுவினால் 2017 ஆம் ஆண்டுக்காக உள்ளகக் கணக்காய்வு வேலைத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டதுடன், உள்ளக கணக்காய்வுப் பணியின் சுயாதீன விடய இணைப்பு மற்றும் செயற்சாதனைகள் உட்பட அதில் காணப்படும் வளங்களின் அளவு தொடர்பாகவும் ஆய்விற்குட்படுத்தப்பட்டது. குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் அவ் அறிக்கைகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு வெளிப்படுத்தல்களுக்காக கவன அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட்டது. பிரிவுப் பொறுப்பாளர்கள் / உத்தியோகத்தர்கள் தேவையானவாறு வழங்கப்பட்ட அழைப்புக்களுக்கமைய குழுக்கூட்டங்களில் பங்கேற்றனர். பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு முன்னர் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் கணக்குகள் தொடர்பான கணக்காய்வாளர் அறிக்கையில் அடங்கும் விடயங்கள் மற்றும் அதற்காக வழங்கப்பட்டுள்ள பதில்கள் இக்குழுவினால் மீளாய்விற்குட்படுத்தப்பட்டன.

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் கணக்காய்வுக் குழுவின் 04 கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் தேவையானவாறு அமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் இக்குழுக் கூட்டங்களில் பிரிவுப் பொறுப்பாளர்கள்/ உத்தியோகத்தர்களை பங்கேற்கச் செய்ய முடிந்தது. கூட்டங்களின் அறிக்கைகளுடன் பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட பொருத்தமான திருத்தியமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாத உறுதிப்படுத்துவதற்கு பின்னூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன.

## 3.8. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

இலங்கை தேயிலை சபையின் செயற்சாதனைகளுக்கு 150 ஆண்டுக்குள் பூர்த்தினை நினைவு கூறும் வகையில் 2017 ஆம் ஆண்டு இலங்கை தேயிலை சபைக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாக அமைந்தது. இவ் நினைவு தின விழாக்களில் பங்கேற்று தேயிலை சபையின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் “ரந்தியசேயா” என்ற புகைப்பட போட்டித் தொடர் மற்றும் கண்காட்சி தாமரைத் தடாக கலையரங்கில் நடாத்தப்பட்டது. தேயிலை தொடர்பான விசேட புகைப்பட போட்டி மற்றும் கண்காட்சி வரலாற்றில் முதற் தடவையாக நடாத்தப்பட்டது. இலங்கைத் தேயிலை சபையின் 150 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மேலும் ஊடக வேலைத்திட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பான சமூக ஊடக வேலைத்திட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. நினைவு தின விழாவிற்காக யூரியும் ஊடகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஒரு சில வீடியோ ஒலிநடா மற்றும் முகப்புத்தகத்தில் வெளியிடப்பட்ட ஒரு சில புகைப்படங்களுக்கு பாரிய வரவேற்புக்கள் உட்பட பாராட்டுக்களும் கிடைக்கப்பெற்றன.

இலங்கை தேயிலை சபையின் ஊழியர்களுக்கு நிலையான அடிப்படையில் தடைகள் இன்றி இணையத்தளத்தில் பிரவேசிப்பதற்காக மிகவும் வேகமான இணையத்தள இணைப்புக்களை வழங்கும் எதிர்பார்ப்புடன் இடம்பெற்ற இணையத்தள வலையமைப்பின் உயரிய வேகம் கொண்ட பலம் பொருந்திய வலையமைப்பை தொடராக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டன. மேலும் தேயிலை சபையின் பாதுகாப்பு உட்பட மேற்பார்வைப் பணிகளை விருத்தி செய்வதற்காக CCTV கமரா தொகுதியை CCTV IP கமராத் தொகுதியாக விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டன.

தேயிலையின் பெறுமதி மற்றும் தேயிலை காணிகளை பதிவு செய்யும் முறைமை தொடர்பான கற்கை ஆய்வுகளை ஆரம்பித்தல் போன்ற பல செயற்திட்டங்கள் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் TI - மொடியுள் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் புதிய மானிய வள முறைமையினை ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டன. மிகவும் பாதுகாப்பான மற்றும் துரித இணையத்தள தகவல் முறைமையினைப் பெற்றுக் கொள்வதற்காக மிகுந்த நவீனமயப்படுத்தப்பட்ட சேவர் பொருத்தப்பட்டதுடன் சகல பிரதான தகவல் முறைமைகளுக்காவும் நவீனமயப்படுத்தப்பட்ட தொழில்நுட்பச் செயற்பாட்டுத் தொகுதிகள் வழங்கப்பட்டன.

# இலங்கை தேயிலை சபை

## நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடுகள்

2017 டிசம்பர் 31 ஆம் திகதியன்று

| | குறிப்பு | 2017 ரூபா. | 2016 ரூபா. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள் ஆவணங்கள் மற்றும் உபகரணங்கள் | F | 829,161,619 | 813,201,842 |
| காணிக்கான முற்கொடுப்பனவு நீண்டகால உரிமைகள் | G | 9,862,034 | 23,113,785 |
| கற்புலனாகச் சொத்துக்கள் | H | 16,981,727 | 12,347,345 |
| | | 856,005,379 | 848,662,972 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பொருள் இருப்பு | I | 25,014,407 | 35,538,627 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைப்பனவு நிதி | J | 46,174,062 | 33,230,237 |
| வைப்பு மற்றும் முற்கொடுப்பனவு | K | 61,388,571 | 53,015,712 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | L | 6,353,072,570 | 6,139,953,803 |
| கடன் | M.(1) | 1,374,763,479 | 1,123,463,950 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | M | 290,531,715 | 65,406,603 |
| | | 8,150,944,804 | 7,450,608,932 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **9,006,950,183** | **8,299,271,903** |
| **உரிமை மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| பங்காளர் மூலதனம் | | 672,012,202 | 672,012,202 |
| தேக்கி வைக்கப்பட்ட உழைப்பு | | (172,191,903) | (267,880,212) |
| ஊக்குவிப்பு மற்றும் விற்பனை வரி | N | 6,806,198,361 | 5,794,718,308 |
| மீள் மதிப்பீட்டுக் குழாம் | | 508,216,543 | 508,216,543 |
| **மொத்த உரிமைகள்** | | 7,814,235,203 | 6,707,066,841 |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | |
| ஊழியர் பிரதிலாபங்கள் | O | 52,857,507 | 63,623,185 |
| வங்கிக் கடன் | P | 344,669,271 | 676,300,000 |
| | | 397,526,778 | 739,923,185 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் | Q | 156,397,653 | 110,361,032 |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | R | 417,644,722 | 733,427,052 |
| வங்கிக் கடன் | | 217,685,862 | - |
| வங்கி மேலதிகப் பற்று | S | 3,459,964 | 8,493,793 |
| | | 795,188,201 | 852,281,877 |
| **மொத்த உரிமை மற்றும் பொறுப்புக்கள்** | | **9,006,950,183** | **8,299,271,903** |

பக்க இலக்கம் 104 தொடக்கம் 110 வரையான கணக்குக் கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 111 தொடக்கம் 119 வரையான குறிப்புக்கள் இந்நிதி வெளிப்பாடுகளுக்கு அமைவான பெறுமதியாகும்.

இந்த வெளிப்பாடுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

பணிப்பாளர் சபையினால் இந்நிதி வெளிப்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டதுடன் அவர்கள் சார்பில் ஒப்பமிடப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| ...................... | ........................... | .............................. | ...................... |
| பணிப்பாளர் நிதி | பணிப்பாளர் நாயகம் | தலைவர் | பணிப்பாளர் |

# இலங்கை தேயிலை சபை

## வருமானம் மற்றும் செலவினக் கூற்று

2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

| | குறிப்பு | 2017 ரூபா. | 2016 ரூபா. |
|---|---|---|---|
| **வருமானம்** | A | 554,825,938 | 444,769,549 |
| **செலவினம்** | | | |
| தேயிலைத் துறையின் அபிவிருத்தி செலவினம் | B | (128,769,009) | (86,381,964) |
| நிருவாகச் செலவினம் | C | (351,504,928) | (364,205,491) |
| **செயற்பாடுகள் இலாபம் / (நட்டம்)** | | 74,552,001 | (5,817,906) |
| நிதிச் செலவினம் | D | (80,863,240) | (35,223,182) |
| நிதி வருமானம் | E | 109,265,725 | 54,715,509 |
இவ் ஒழுங்குக் கோவை (2010 ஒக்டோபர் 27 ஆம் திகதிய இலக்கம் 167714 கொண்ட வர்த்தமாணி அறிவித்தல்) அமுல்படுத்தும் போது உரிய கணக்கில் இலங்கை தேயிலை சபைக்கு வைப்பிலிடப்பட்டுள்ள சகல நிதியும் சபையினால் இலங்கையில் மற்றும் வெளியே மேற்கொள்ளப்படும் ஊக்குவிப்பு உட்பட சந்தைப்படுத்தல் செயற்பாடுகளுக்குரிய பணிகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும்.

| | | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|---|
| ஆரம்ப நிலுவை | | 5,794,718,308 | 5,512,850,781.60 |
| முன்னைய ஆண்டு மற்றும் ஏனைய சீராக்கல்கள் | | 256,456,775 | (8,681,565) |
| ஏற்றுமதியாளர்கள் மூலம் சேகரிக்கப்பட்ட நிதி | | 1,020,142,674 | 1,021,044,786 |
| முதலீட்டின் மீது வட்டி | 594,881,802.73 | | 417,952,898 |
| **கழி** : வட்டி வருமானத்திற்கமைய செலுத்தப்பட்ட வரி | (266,845,495.40) | | (235,211,480) |
| பிரதான அலுவலகத்திற்கு மாற்றப்பட்ட வட்டி * | (45,500,000.00) | 282,536,307 | (30,044,000) |
| கிரிக்கட் ரீ-சேட் விற்பனை | | 228,500 | 940,500 |
| கோளமயச் சுட்டியினை பதிவு செய்தல் | | 12,440 | 17,683 |
| பி.பெ.தோ.கம்பயினியன் இடர் கடனுக்கமைய வட்டி | | 28,828,714 | - |
| நினைவுமலர் , வர்த்தக விளம்பரங்கள் மூலம் வருமானம் | | 425,000 | - |
| பிரச்சார பொருள் விற்பனை | | 5,400 | - |
| தேயிலை புத்தக விற்பனை | | 1,140,600 | - |
| கல்விக் கண்காட்சி கூலி வருமானம் | | 75,000 | - |
| | | 7,384,569,717 | 6,678,869,604 |
| நன்கொடை மற்றும் விசேட பிரச்சார பணிகளுக்கான பரிசுத் தேயிலை | | 3,522,597 | 5,892,207 |
| உள்நாட்டு கண்காட்சி மற்றும் வர்த்தக விற்பனைக் கூடங்களில் பங்கேற்றல் | | 290,287,045 | 13,924,198 |
| தொடர்புசாதனப் பொருட்கள் (ATL/BTL) K இற்காக பதிவுச் செலவினம் | | 666,878 | 133,462 |
| சர்வதேச வர்த்தக விற்பனைக் கூடம் மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்றல் | | 117,189,387 | 100,765,771 |
| விழாச் செயற்பாடுகள் | | 17,254,678 | 5,093,279 |
| புலமைச் சொத்துச் செயற்பாடுகள், கவுன்சல் அங்கத்தவர்கள், புலமைச் சொத்து அனுசரனை | | 2,630,561 | 12,469,055 |
| சந்தை ஆராய்ச்சி மற்றும் ஏனைய சந்தைப்படுத்தல் உதவிச் சேவை | | 3,573,270 | 4,380,401 |
| வங்கிக் கட்டணம் | | 88,369 | 86,980 |
| இலங்கை கிரிக்கட்டுக்கான அனுசரனை | | 1,179,250 | 86,413,625 |
| ரீ ஹவுஸ் செயற்பாட்டுச் செலவினம் | Note 1 | 18,169,120 | 9,799,269 |
| தேயிலை நூதனசாலைக்கான ஒதுக்கீடு | | 1,500,000 | 2,300,000 |
| வெளிநாட்டு அலுவலகங்களின் பராமரிப்புப் பணிகள் | | 36,474,579 | 45,158,971 |
| ஆண்டின் வருடாந்த தோட்டத் தேயிலை | | 180,011 | 355,091 |
| பிரயாணச் செலவினம் - வெளிநாடு | | 12,986,047 | 11,336,478 |
| ஏனைய ஏற்றுமதியுடனான கூட்டிணைந்த ஊக்குவிப்பு | | 1,086,730 | 552,160 |
| தொலைக்காட்சி / வானொலி / பத்திரிகை நிகழ்வுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட உயரிய மட்ட பிரச்சாரம் (ATL) | | 27,315,789 | 141,124,181 |
| திறந்த வெளியரங்கு பிரச்சாரம் (BTI) | | 20,864,581 | - |
| பொது மக்கள் இணைப்பு வேலைத்திட்டம் | | 7,049,660 | 1,228,240 |
| தூதரக அலுவலகங்கள் உடனான வேலைத்திட்டம் | | 7,309,179 | 13,327,894 |
| செலாவணி வித்தியாசம் | | 135,699 | 52,936 |
| பட்டியல்படுத்தல் கட்டணம் மற்றும் வர்த்தக நாமத்தை சந்தைப்படுத்துவதற்கான மானிய உதவி | | - | 429,679,935 |
| தோட்டத் தொழிலாளர்களுக்கான CSR செயற்திட்டம் | | 5,774,624 | 77,164 |
| ITPF | | 2,024,864 | - |
| வகைப்படுத்தல் பிரச்சாரம் | | 135,699 | - |
| தேயிலை நூதனசாலை வழங்கல் | | 1,108,439 | - |
| மொத்தச் செலவினம் | | **578,371,356** | **884,151,296** |
| **2017.12.31 ஆம் திகதியன்று ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் வரி நிதி நிலுவை** | | **6,806,198,361** | **5,794,718,308.00** |

**குறிப்பு - சிலோன் ரீ ஹவுஸ் செயற்பாடுகளை இடைநிறுத்தல்**

அமைச்சரவை உத்தரவிற்கமைய 2017.01.01 ஆம் திகதி தொடக்கம் சிலோன் ரீ ஹவுஸ் சின் செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டன. குத்தகைக் கட்டணம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளித்ததுடன் ரூபா 17,142,720/- மீளச் செலுத்தாத வைப்பு நிதியை 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதி வெளிப்பாடுகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

இலங்கை தேயிலை சபை

நிதி வெளிப்பாடுகளுக்கான குறிப்பு

2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக

**O ஊழியர் பிரதிலாபப் பொறுப்புக்கள்**

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| பணிக்கொடை ஆரம்ப நிலுவை | 63,623,185 | 55,562,838 |
| ஆண்டுக்கான அளவீட்டு சீராக்கல் | (3,354,903) | 18,663,915 |
| ஆண்டுக்குள் செலுத்தப்பட்ட / செலுத்த வேண்டிய பிரதிலாபம் | (7,410,774) | (10,603,568) |
| | 52,857,507 | 63,623,185 |

**P வங்கிக் கடன்**

| | மக்கள் வங்கி | இலங்கை வங்கி | மொத்தம் |
|---|---|---|---|
| 2017.01.01 ஆம் திகதியன்று நிலுவை | 493,000,000 | 183,300,000 | 676,300,000 |
| 2017 ஆம் ஆண்டில் பங்கினைத் தீர்த்தல் | (35,000,000) | - | (35,000,000) |
| தவணைக் கொடுப்பனவு | (53,486,532) | (25,458,335) | (78,944,867) |
| 2017.12.31 ஆம் திகதியன்று நிலுவை | 400,513,486 | 157,841,665 | 562,355,133 |
| குறுகிய காலப் பொறுப்புக்கள் | 156,585,858 | 61,100,004 | 217,685,862 |
| நீண்டகால பொறுப்புக்கள் | 247,927,610 | 96,741,661 | 344,669,271 |
| | 404,513,486 | 157,841,665 | 562,355,133 |

**Q உள்நாட்டு வருமான ஆணையாளர் நாயகம்**

| | 2017 ஊக் மற் சந் வரி ரூபா. | 2017 இ.தே.ச ரூபா. |
|---|---|---|
| **வருமான வரி** | | |
| 2017.01.01 ஆம் திகதியன்று நிலுவை | 35,063,980 | 2,556,557 |
| ஆண்டுக்கான ஒதுக்கீடு | 162,480,303 | 7,908,469 |
| கழி : குத்தகைக் கொடுப்பனவு | 97,873,700 | 6,132,736 |
| தேக்கி வைக்கும் வரி | 50,902,331 | 1,862,378 |
| தேசிய வரி கடன் | 3,788,329 | 495,499 |
| 2017.12.31 ஆம் திகதியன்று நிலுவை | 44,979,923 | 1,974,413 |
| **இலாப வரி** | | |
| 2017.01.01 ஆம் திகதியன்று நிலுவை | 69,877,159 | 2,863,336 |
| ஆண்டுக்கான ஒதுக்கீடு | 104,356,192 | 5,078,125 |
| கழ - வரிக் கொடுப்பனவு | 69,877,159 | 2,863,336 |
| 2017.12.31 ஆம் திகதியன்று நிலுவை | 104,365,192 | 5,078,125 |
| **2017.12.31 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய மொத்த வரி** | **149,345,115** | **7,052,538** |
| **2017 ஆம் ஆண்டுக்கான மொத்த வருமானச் செலவினம்** | **266,845,495** | **12,986,594** |

**R வர்த்தக மற்றும் ஏனைய கிடைப்பனவுகள்**

| | | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|---|
| வர்த்தகக் கொடுப்பனவு | குறிப்பு 14.1 | 136,765,965 | 147,743,125 |
| ஏனைய கொடுப்பனவு | குறிப்பு 14.2 | 146,340,085 | 141,575,350 |
| திரண்ட செலவினம் | குறிப்பு 14.3 | 134,538,671 | 444,108,577 |
| | | 417,644,722 | 733,427,052 |

இலங்கை தேயிலை சபை

நிதி வெளிப்பாடுகளுக்கான குறிப்பு

2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக

| | | 2017 | 2016 |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| **S** | **வங்கி நிலுவை** | | |
| | இலங்கை வங்கி - தேயிலை மானிய உதவி | - | 6,951,690 |
| | இலங்கை வங்கி - சேகரிப்பு கணக்கு காலி | - | 154,299 |
| | இலங்கை வங்கி - சேகரிப்பு கணக்கு மாத்தறை | 180,714 | 120,200 |
| | இலங்கை வங்கி - சேகரிப்பு கணக்கு இரத்தினபுரி | 1,195,022 | 942,436 |
| | இலங்கை வங்கி - சேகரிப்பு கணக்கு மதுகம | 512,325 | 320,852 |
| | இலங்கை வங்கி - சேகரிப்பு கணக்கு பண்டாரவெல | - | 4,316 |
| | இலங்கை வங்கி - சேகரிப்பு கணக்கு கம்பொல | 1,564,002 | - |
| | இலங்கை வங்கி - சுதந்திர சதுர்க்கம் | 7,900 | - |
| | | **3,459,964** | **8,493,793** |

**மூலதன மற்றும் குழாம்**

2017 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்குள் மூலதனத்தின் எதுவித மாற்றங்களும் இடம்பெறவில்லை.

**மீள் மதிப்பீட்டுக் குழாம்**

கொழும்பு பிரதான அலுவலகத்தின் காணி, கட்டடம் மற்றும் மோட்டார் வாகனம் உட்பட கம்பொல காணி மீள் மதிப்பீட்டைத் தொடர்ந்து சபையினால் ரூபா 508,216,543 மீள் மதிப்பீட்டுக் குழாம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதேச மதிப்பீட்டாளர்களினால் 2016.07.25 ஆம் திகதி கம்பொல காணி மீள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

**பங்காளர் மூலதனம்**

2017 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 672,012,201.35 அரச வழங்கல் மூலம் பங்காளர் மூலதனம் வகுக்கப்பட்டுள்ளது.

# இலங்கை தேயிலை சபையின் அலுவலகங்கள்

**தலைமைஅலுவலகம்**

இலங்கை தேயிலை சபை
574, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை
த.பொ.இல: 1750, கொழும்பு, இலங்கை
தொலைபேசி: 011 2582121
துரித அழைப்பு: 0112587814
தொலைநகல்: 0112582122
மின்னஞ்சல்: teaboard@pureceylonte.com
இணையம்: www.pureceylontea.com

தலைவர்
தொலைபேசி: 011 2590968
தொலைநகல்: 011 2585701
மின்னஞ்சல்:chairman@pureceylontea.com

பணிப்பாளர் நாயகம்
தொலைபேசி: 011 2508991
பெக்ஸ்: 0112582122
மின்னஞ்சல:dgsltb@pureceylontea.com

தேயிலை ஆணையாளர் பிரிவு

தேயிலை ஆணையாளா
தொலைபேசி: 011 2580182 / 011 2580152
பெக்ஸ்: 011 2580161
மின்னஞ்சல்:tcd@pureceylontea.com

தேயிலை ஊக்குவிப்பு பிரிவு

பணிப்பாளர் (தேயிலை ஊக்குவிப்பு)
தொலைபேசி: 011 2583343 / 011 2581418
பெக்ஸ்: 011 2587341
மின்னஞ்சல்:promotion@pureceylontea.com

தேயிலை ஏற்றுமதிகள் பிரிவு

பிரதி தேயிலை ஆணையாளர் (ஏற்றுமதி)
தொலைபேசி: 011 2504090
பெக்ஸ்: 011 2584844
மின்னஞ்சல்:exports@pureceylontea.com

பகுப்பாய்வு பரிசோதனை ஆய்வு கூடம்

பணிப்பாளர் (ஆய்வு கூடம்)
தொலைபேசி: 011 2581576
பெக்ஸ்: 011 2581576
மின்னஞ்சல்:lab@pureceylontea.com

# பிராந்திய அலுவலகங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | உதவி தேயிலை ஆணையாளர்<br>பிராந்திய அலுவலகம்<br>இலங்கை தேயிலை சபை<br>140, அம்பகமுவ வீதி, கம்பஹா<br>தொலைபேசி/ பெக்ஸ் : 081-2352279<br>மின்னஞ்சல்:atcgampola@pureceylontea.com |
| மாத்தறை | உதவி தேயிலை ஆணையாளர்<br>பிராந்திய அலுவலகம்<br>இலங்கை தேயிலை சபை<br>46, வில்ப்ரெட் குணசேகர மாவத்தை,<br>துறைமுகம், மாத்தறை<br>தொலைபேசி/ பெக்ஸ்: 041-2222636<br>மின்னஞ்சல்:atcmatara@pureceylontea.com |
| பதுரலிய | உதவி தேயிலை ஆணையாளர்<br>பிராந்திய அலுவலகம்<br>இலங்கை தேயிலை சபை<br>281, பதுரன வீதி, பதுரலிய<br>தொலைபேசி/ பெக்ஸ்: 034-2247444<br>மின்னஞ்சல்:atcmathugama@pureceylontea.com |
| இரத்தினபுரி | உதவி தேயிலை ஆணையாளர்<br>பிராந்திய அலுவலகம்<br>இலங்கை தேயிலை சபை<br>61/1, புதிய நகரம், இரத்தினபுரி<br>தொலைபேசி/ பெக்ஸ்: 045-2222136<br>மின்னஞ்சல்: atcrathnapura@pureceylontea.com |
| பண்டாரவெல | உதவி தேயிலை ஆணையாளர்<br>பிராந்திய அலுவலகம்<br>இலங்கை தேயிலை சபை<br>விசாகா மாவத்தை, புதிய பதுளை வீதி, பண்டாரவெல<br>தொலைபேசி/ பெக்ஸ்: 057-2222812<br>மின்னஞ்சல்: atcbandarawela@pureceylontea.com |
| காலி | உதவி தேயிலை ஆணையாளர்<br>பிராந்திய அலுவலகம்<br>இலங்கை தேயிலை சபை<br>20, தாழ் டிக்சன் வீதி, காலி<br>தொலைபேசி/ பெக்ஸ்: 091-2232052<br>மின்னஞ்சல்: atcgalle@pureceylontea.com |

# வெளிநாட்டுக் கிளை

இலங்கை தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு பணிப்பாளர் (தேயிலை ஊக்குவிப்பு M.E./Gulf/N.A)
தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு
ஐக்கிய அரபு எமிரேட்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்
கௌன்சலர் ஜெனரல்
தபால் பெ. இல 51528,
டுபாய், ஈ.அ.எ.இ

தொலைபேசி : 00971 4 3987871
தொலைபேசி (Direct) : 00971 4 3989349
பெக்ஸ்: 00971 4 3987872
மின்னஞ்சல்:ctbureau@emirates.nrt.ae / ceylonte@eim.ae

இலங்கை தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு

ரஷ்யா / CIS

தேயிலை ஊக்குவிப்பு உத்தியோகத்தர்
தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்
தூதரக அலுவலகம்
யுலிரிசா சுஜேப்கினா - 24
மொஸ்கோ 129090
ரஷ்யா

தொலைபேசி : 007 495-688-1620
495-68811651/495-688-1463
பெக்ஸ்: 007-495-688-1757
மின்னஞ்சல்: tea@srilankaembassy.org

இலங்கை தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு
சீனா

தேயிலை ஊக்குவிப்பு உத்தியோகத்தர் (3rd Secretary) - சீனா,
தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு
இலங்கை தூதரக அலுவலகம்,
இல. 3, ஜிலான் ஹுவா லூ,
பீஜிங் - 100600,
சீனக் குடியரசு

தொலைபேசி : 00-86-10-65322919
பெக்ஸ்: 00-86-10-65325426
மின்னஞ்சல்: ceylontea@slemb.com

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. My No. } பீஎல்ஏ/பீ/எஸ்எல்டீபீ/1/17/05

මබේ අංකය
உமது இல. Your No. }

දිනය
திகதி Date } 2018 ஜூலை 31

தலைவர்,
இலங்கை தேயிலை சபை.

**இலங்கை தேயிலை சபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தேயிலை சபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவுகள் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலை சபைச் சட்டத்தின் 15(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2018 மே 31 திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முமைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இலங்கை போக்குவரத்து சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

நியமத்தின் 132 ஆம் பந்தியின் பிரகாரம் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு ஒன்று நிதிக் கூற்றுகளுடன் வெளிப்படுத்தப்பட வேண்டுமெனினும் சபையினால் அரச மானியங்களை கணக்கீடு செய்தல் தொடர்பாக கடைபிடிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையினால் ரூபா 74,615,225 தொகை கிரயத்திற்கான இயந்திர உபகரணங்கள் இரசாயன ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் தளபாடங்களும் பொருத்துக்களும் ஆகிய சொத்துக்கள் முற்றாக பெறுமானத் தேய்வு கழித்திருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றது. அதன் பிரகாரம் காணப்பட்ட மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தி அமைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

நியமத்தின் 57(உ) பந்தியின் பிரகாரம் ஊழியர்களின் பணிக் கொடை தொடர்பாக ஆயுள் கணிப்பு இலாபம் அல்லது நட்டத்தை கணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெளிநாட்டு தேயிலை மேம்படுத்தல் பணியகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட வைப்புகள் மற்றும் முற் கொடுப்பனவுகள் என நிதி நிலையாக கூற்றில் ரூபா 23,159,935 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறு செலவாணி விகிதாசாரத்தின் பிரகாரம் அப்பெறுமதியினை சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்ட 04 வாகனங்கள் தொடர்பாக மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தில் உள்ளடங்கியிருந்த ரூபா 6,250,000 தொகைக்கான மீள்மதிப்பீட்டு இலாபம் தடுத்து வைக்கப்பட்ட இலாபத்துடன் சீராக்கல் செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது பிராந்திய அலுவலகங்களின் சேகரிப்பு வங்கி கணக்குகளுக்கு நேர் வைப்புகள் என கிடைத்திருந்த ரூபா 363,624 தொகையினை இணங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுகளின் பிரகாரம், முன் பெறப்பட்ட பிரசார மற்றும் மேம்படுத்தல் கட்டணங்களின் பெறுமதி ரூபா 28,441,373 தொகை ஆக காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக பேணப்பட்டிருந்த பதிவேட்டின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 35,892,100 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 7,450,727 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக் கூற்றுகளின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஐக்கிய அராபிய எமீர் இராச்சிய மேம்படுத்தும் பணியகத்தின் பணம் மற்றும் வங்கி மீதி ரூபா 4,499,717 தொகை எனக் காட்டப்பட்டிருந்த போதிலும் ரூபா 2,470,416 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 2,029,301 இற்கான விளக்கமளிக்கப்படாத வித்தியாசமமொன்றினை சித்தரித்து காட்டியது மேலும் மீளாய்வாண்டு இறுதிவரையும் சபையினால் இந்த வித்தியாசத்தை இணங்காண்பதற்கு முடியாதிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்கள் எதிராக சுட்டிக்காட்டியும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி<br>(ரூபா) | சமர்பிக்கபடாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | 06 உயர் தூதுவராலயங்களில் இருந்து அனுப்பியிருந்த பணம் | 1,175,374 | மீதிகளை உறுதிப்படுத்தல்கள் |
| (ஆ) | இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்திற்காக குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்திருந்த கட்டிடம் | 3,435,000 | கொடுப்பனவுகளை உறுதிபடுத்துவதற்கான சான்றுகள் |

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) போலந்தில் வெளிநாட்டு தேயிலை மேம்படுத்தும் அலகு ஒன்று நடத்துவதற்காக வாடகை அடிப்படையில் பெற்றிருந்த கட்டிடத்தின் உடன்படிக்கை 2010 ஆண்டில் முடிவடைந்திருந்த போதிலும் அதற்காக செலுத்தப்பட்டிருந்த ஆரம்ப பணம் ரூபா 207,360 தொகை இந்த அறிக்கை திகதி வரையும் திருப்பி அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) குதிரை பந்தய திடலில் நடாத்துபட்டு வந்த தேயிலை விற்பனை நிலையத்தை நடாத்துவதற்காக பெற்றிருந்த கட்டிடத்திற்காக 2014 ஆண்டின் போது வைப்புச் செய்திருந்த ரூபா 100,000 இற்கான திருப்பி செலுத்தும் கேள்வி வைப்புத் தொகை மீளாய்வாண்டு இறுதிவரையும் அறவீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு திருப்பி செலுத்தும் கேள்வி வைப்பு ரூபா 200,983 தொகை மற்றும் தடுத்துவைக்கப்பட்ட பணம் ரூபா 2,191,499 தொகை மூன்று வருடங்களை மிகைத்துள்ள போதிலும் அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2012 ஆண்டின் போது சிரியாவில் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த "புட் எக்ஸ் சிரியா" கண்காட்சிக்காக தனியார் நிருவனமொன்றிற்கு ரூபா 629,261 இற்கான கொடுப்பனவு செய்திருந்த போதிலும் அந்த கண்காட்சி இரத்து செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதிவரை அப் பணத்தை திருப்பி பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களினால் பச்சை தேயிலை வழங்குனர் கொடுப்பனவு செய்வதற்காக சபையில் வைப்புச் செய்திருந்த 1 வருடம் முதல் 15 வருடங்கள் வரையான கால வீச்சினை சேர்ந்த ரூபா 6,698,817 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1975 இன் 14 ஆம் இலக்க தேயிலை சபை சட்டத்தின் பிரிவுகள் 13 மற்றும் 14 | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செஸ் நிதியம் ஆரம்பித்தல் மற்றும் செயற்படுத்துதல் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் தற்போது செஸ் வரி அறவீடு செய்தல் திறைசேரியினால் மேற்கொள்ளப் படுவதை அதன் பிரகாரம் சட்டத்தை திருத்தி அமைப்பது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. |
| (ஆ) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த வேலை சட்டத்தின் பிரிவுகள் 8 மற்றும் 12 | பொது ஒப்பந்த வேலைகள் பதிவாளரின் கீழ் செல்லுபடியாகும் பதிவு செய்த சான்றிதழ் ஒன்று காணப்படாத ஒப்பந்தகாரர்களுடன் பெறுகைகள் மற்றும் மதிப்பாய்வு குழுக்களின் அலுவலர்கள் செயற்படக் கூடாது எனினும் நுவரெலிய கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் தொடர்பான ஒப்பந்த வேலை தொடர்பாக சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) 2003 ஜுன் 02 திகதி பீஈடி/92 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 9.14 | சபையினால் மனித வள முகாமைத்துவம் தொடர்பாக சட்டங்கள் விதிகள் வழங்குவதற்கு உரிய செயற்படு முறைமைக் கைநூல் ஒன்று தயாரித்து திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தை பெறவேண்டுமெனினும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தபடாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளபபடுகின்றன.

(அ) 2000 ஜனவரி 11 ஆம் திகதிய பீஎப்/பீஈ/05 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஏதேனும் நிதிநலன் ஒன்று கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் திறைசேரியின் அங்கீகாரத்தை பெற வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது ஓய்வு பெற்றிருந்த உத்தியோகத்தர்களின் சேமிக்கப்பட்ட ஓய்வு விடுமுறைகளுக்காக திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 542,548 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2010 அக்தோபர் 27 திகதிய 1677/14 ஆம் இலக்க வர்த்த மானியின் பிரகாரம் மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நிதியத்தின் நிதி, அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக மாத்திரம் ஈடுபடுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது மாத்திரம் அந்த நிதியத்தின் வட்டி வருமானத்தில் இருந்து முறையே ரூபா 45,500,000 தொகை மற்றும் ரூபா 30,044,000 தொகை சபையின் வருமானம் என இனங்கண்டு செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிவிளைவுகள் ரூபா 89,967,892 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,677,534 தொகை ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுகளில் ரூபா 85,290,358 இற்கான அதாவது 1,823 சதவீத வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 55,594,152 இனால் அதிகரித்து இருத்தலும் அபிவிருத்தி செலவுகள் மற்றும் நிருவாக செலவுகள் ரூபா 24,775,756 இனால் குறைவடைதலும் மேற்கூறிய வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 4 ஆண்டுகளின் நிதிவிளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 19,071,236 தொகையான சபையின் மிகை 2015 ஆண்டு இறுதி அளவில் ரூபா 86,256,974 தொகை வரை .இடையறாது

அதிகரித்திருந்த போதிலும் 2016 ஆண்டின் போது ரூபா 4,677,534 தொகை வரை 85 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும் மீளய்வாண்டின் போது ரூபா 89,967,892 இற்கான மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன் 2016 ஆண்டிற்கு ஒப்பாக அதனது வளர்ச்சி 1823 சதவீதமாகும். எவ்வாறாயினும், நிதி விளைவுகளில் ஊழியர் வேதனம் நடைமுறை அல்லாத சொத்துக்காக பெறுமானத் தேய்வு சீராக்கல் செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 180,968,362 தொகையாக காணப்பட்ட சபையின் பங்களிப்பு 2015 ஆண்டளவில் ரூபா 332,983,533 தொகை வரை இடையறாமல் வளர்ச்சியடைந்திருந்த போதிலும் 2016 ஆண்டின் போது ரூபா 240,115,107 தொகை வரை குறைவடைந்திருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது மீண்டும் ரூபா 304,945,902 தொகை வரை பங்களிப்பில் அதிகரிப்பு ஒன்று ஏற்பட்டிருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) சபையினால் 2016 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை தயாரித்திருந்த தந்திரோபாய திட்டத்திற்காக 2003 ஜுன் 02 திகதி பீஈடீ/12 இலக்கம் கொண்ட பொது முயற்சி சுற்றறிக்கையின் பந்தி 5.1.3 இன் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றிருக்காததுடன் நாளது வரை ஆக்கப்பட்ட தந்திரோபாய திட்டத்தின் பிரதி ஒன்று நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்கம் கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒழுங்குபடுத்துதல் நிறுவனத்தினால் சட்டத்தின் மூலம் விதித்துள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக செயற்பாடுகள் நீண்டகால தூரநோக்குடன் உட்படுத்தி செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்க வேண்டும். எனினும் 2017 ஆண்டிற்காக தயாரித்திருந்த செயல் நடவடிக்கை திட்டத்திற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க மானியங்கள், உழைப்புகள் மற்றும் மொத்த செலவுகளுடன் பாதீடு, ஒவ்வொரு செயற்பாடுகளின் மூலமும் எதிர்பார்க்கும் பெறுபேறுகள், திறைசேரியினால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் பாதீட்டு ஏற்பாடுகளின் மூலம் செயற்படுத்தப்படும் செயற்பாடுகள் தொடர்பான கட்டுநிதித் தேவைகள் தொடர்பான திட்டம் ஆகிய பகுதிகள் உட்படுத்தியிருக்கவில்லை.

### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

மீளாய்வாண்டின் போது சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்தும் உதவிப்பணத்திட்டம், தேயிலை மீள் பயிர்ச் செய்கை உதவிப் பணத்திட்டம், அறுவடையின் பின்னரான சேதங்களை குறைப்பதற்கான நிகழச்சித் திட்டம் , விளிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்கள் மற்றும் தேயிலை தோட்டங்களை பதிவு செய்தல் ஆகிய 05 அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் செயற்படுத்துவதற்கான ரூபா 104,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்தும் உதவித் திட்டத்தின் கீழ் 70 தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்துவதற்காக ரூபா 40,000,000 தொகை ஒதுக்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 7,834,287 தொகை செலவிடப்பட்டு 13 தொழிற்சாலைகள் மாத்திரம் நவீன மயப்படுத்தப்பட்டிருந்தது. அது உதவிப் பணம் வழங்குவதற்கு எதிர்பார்த்திருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் 18 சதவீதம் மாத்திரம் ஆகும்.

(ii) தேயிலை மீள் பயிர்ச்செய்கை உதவிப் பணத் திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டின் போது 250 ஹெக்டர் காணி பயிர் செய்கை மேற்கொள்வதற்காக ரூபா 40,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் சபையின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 177.64 ஹெக்டயர் காணி பயிர்செய்வதற்காக ரூபா 9,658,854 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நெருங்குவதற்கு இயலுமாக இருந்த நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் முறையே 24 சதவீத மற்றும் 71 சதவீதமாக காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் கடந்த இரண்டு ஆண்டுகள் தொடர்பாக உள்நாட்டு உற்பத்தித் தேயிலை ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதி தொடர்பாக விபரங்கள் பின்வருமாறாகும்.

| விபரம் | 2017<br>கி.கி. | 2016<br>கி.கி. | 2015<br>கி.கி. |
|---|---|---|---|
| தேயிலை ஏற்றுமதி | | | |
| உள்நாட்டு தேயிலை | 278,195,150 | 280,874,278 | 298,906,481 |
| இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை (மீள்) | 10,789,117 | 7,896,402 | 8,029,940 |
| ஓட்டுமொத்த தேயிலை ஏற்றுமதி | 288,984,267 | 288,770,680 | 306,936,420 |
| தேயிலை இறக்குமதி | 7,679,588 | 4,660,293 | 4,906,862 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வண்டிற்கான ஒட்டு மொத்த தேயிலை ஏற்றுமதி முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அதிகரித்திருந்த போதிலும் உள்நாட்டு உற்பத்தி தேயிலை ஏற்றுமதி 2,679,128 கிலோ கிராம்களினால் வீழ்ச்சியடைந்திருந்தது. மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையின் எண்ணிக்கை கடந்த வருடத்தை விட 65 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் அதன் பிரகாரம் மீள் ஏற்றுமதி தேயிலையின் எண்ணிக்கை 2,892,715 கிலோ கிராமினால் அதாவது 43 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ii) சபை செயற்படுத்திய வியாபாரச் சின்னம் மேம்படுத்தல் நிகழ்ச்சி திட்டத்திற்காக ரூபா 177,315,426 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் உள்நாட்டு தேயிலை ஏற்றுமதி குறைந்திருந்த காரணத்தினால் எதிர்பார்த்திருந்த புதிய சந்தைகளை இனங்காணல் மற்றும் ஏற்றுமதி மேம்படுத்தல் இலக்கினை நெருங்குவதற்கு முடியதிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(இ) தேயிலை மேம்படுத்தல் மற்றும் சந்தை தந்திரோபாயத்திற்காக 2010 அக்தோபர் 27 திகதிய 1677/14 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் தேயிலை ஏற்றுமதியாளர்களிடம் 2018 ஆண்டு திசெம்பர் 31 வரை சேகரமாகும் உரித்தொகையில் ரூபா எட்டு பில்லியன்களை ஈடுபடுத்தி “சிலோன் தேயிலை உலகளாவிய மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்” 2015 ஆண்டு முதல் 2018 வரையான காலப்பகுதியில்

செயற்படுத்துவதற்காக திட்டமிட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த மேம்பாட்டு நிகழ்ச்சி திட்டம் 2012 ஆண்டு முதல் 2016 வரையான காலப்பகுதியில் உற்பத்தி மற்றும் படைப்பாற்றலுள்ள அலுவல்கள், பொதுசன தொடர்பாடல் மற்றும் ஊடக விடயங்கள் ஆகிய கருமங்களின் ஊடாக செயற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவற்றை குறிப்பிட காலப்பகுதியில் நிறைவேற்றுவதற்கு இயலாதிருந்த காரணத்தினால் 2018 ஆண்டு வரை நீடிக்கப்பட்டிருந்தது.

மேலும், உற்பத்தி மற்றும் படைப்பாற்றலுள்ள அலுவல்களுக்காக தனியார் கம்பனி ஒன்றுடன் சபை 2,260,000 இற்கான அமெரிக்க டொலர் (ரூபா 328,423,200) ஒரு ஆண்டிற்கான உடன்படிக்கை ஒன்று 2015 நவம்பர் 06 திகதி மேற்காள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி அளவில் அதற்காக ரூபா 195,521,240 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஊடக விடயங்களுக்காக நிறுவனமொன்று உடன் நிகழ்வாக நியமனம் செய்வதற்கு இயலாதிருந்த கரணத்தினால் எதிர்பார்த்த கருமங்கள் நிறைவேற்றப்படவில்லை.

(ii) தொலைக்காட்சி வர்த்தக விளம்பரங்களில் படைப்பாற்றலுள்ள விடயங்கள் 2016 ஏப்ரல் அளவில் பூர்த்தி செய்யப்பட்டு மீளாய்வாண்டு இறுதி அளவில் 18 மாதங்கள் கடந்திருந்த போதிலும் அந்த அறிவித்தல்களை விளம்பரம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக அந்த அறிவித்தல்களின் மூலம் எதிர்கால மேம்பாட்டு அலுவல்கள் நடத்துவதன் மூலம் காலத்திற்கு சந்தை நிலைமைக்கு பொருந்தக்கூடிய விதமாக படைப்புக்கள் ஆக்கபூர்வமாவதற்கு காணப்படும் வசதிகள் குறைவடைகிறது என அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் போது காணப்பட்ட அதிக மழையின் காரணமாக ஏற்பட்டிருந்த வெள்ள நிலைமையின் காரணமாக சேதமடைந்திருந்த தொழிற்சாலைகளுக்கு உதவு நிதிகள் கொடுப்பனவின் போது தொழிற்சாலைகளினால் சமர்பிக்கப்படும் மாதாந்த அறிக்கைகளில் (ட.சீ.5) காட்டப்பட்டிருந்த சேதமடைந்திருந்த இருப்பின் எண்ணிக்கையை விட கூடுதலாக எண்ணிக்கையின் இருப்புக்காக கொடுப்பனவு செய்திருந்தமையால் 2 தொழிற்சாலைகளுக்கு ரூபா 819,567 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(உ) உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் தரம் மற்றும் நன்மதிப்பு என்பவற்றை பாதுகாப்பதற்காக ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்தி தேயிலையின் காணப்படும் பீடை நாசினிகள் மீதிகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளல் காலத்தின் தேவையாக இருந்த போதிலும் சபையின் இரசாயன ஆய்வு கூடத்தின் மூலம் அந்த பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆண்டின் போது பச்சை தேயிலை கொழுந்திற்காக ரூபா 80 இற்கு குறைந்தபட்ச விலை பேணுவதற்காக கொழுந்து வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு தனியார் தொழிற்சாலை ஒன்றிற்கு வழங்கியிருந்த ரூபா 3,489,773 இற்கான தொகை கொழுந்து வழங்குனர்களுக்கு கொடுத்திருக்காத போதிலும் மீளாய்வாண்டு இறுதிவரை அப்பணத்தை சபைக்கு மீண்டும் அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) 2012 ஜூலை 19 திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழு கூட்ட கட்டளையின் பிரகாரம், மக்கள் பெருந் தோட்ட அபிவிருத்தி சபையில் இருந்து பெற வேண்டிய ரூபா 25,000,000 தொகைக்காக மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் செந்தமான ஹந்தானையிலுள்ள "சிலோன் டி மியுஸியத்தின்" உரிமையை உரித்தாக்கும் மற்றும் மீதியை பதிவழிப்பதற்கும் மக்கள் பெருந்தோட்ட அதிகார சபை மற்றும் தேயிலை சபை தீர்மானம் ஒன்றிற்கு எட்டியிருந்த போதிலும் 2018 மார்ச் 31 திகதி வரையும் அச்செயற்பாடு முடிவடைந்திருக்கவில்லை.

(இ) 2015 ஆண்டின் போது பச்சை தேயிலை கொழுந்து ரூபா 80 குறைந்த விலை ஒன்றினை பேணுவதற்காக கொழுந்து வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக சபைக்கு திறைசேரியில் இருந்து கிடைத்திருந்த ரூபா 6,738,000,000 தொகைக்காக உதவிநிதி தொகையில் மீதியாகிய ரூபா 18,005,828 தொகை 2015 திசெம்பர் 31 திகதி முதல் திறைசேரி அனுப்பப்படாமல் மீளாய்வாண்டு இறுதி வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது சபையின் சீனா தேயிலை பணியகச் செலவுகளுக்காக வழங்கப்பட்டிருந்த முற்பணம் ரூபா 15,630,566 தொகை வருட இறுதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

2013 ஆண்டின் போது ரூபா 58,368,794 தொகை செலவிடப்பட்டு கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் நிறுவப்பட்ட தேயிலை விற்பனை நிலையம் மீளாய்வாண்டின் போது செயற்பாட்டு விடயங்கள் இடைநிறுத்தப்பட்டு மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. தேயிலை மேற்படுத்தல் தந்திரோபாய முறை ஒன்றாக ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்தச் செயற்திட்டம் ஆரம்பம் முதல் இலக்காகிய சந்தை மற்றும் எதிர்கால போக்குகள் தொடர்பாக கவனம் செலுத்தி மிகவும் ஆக்கபூர்வமான முறையில் செயற்படுத்தக்கூடிய எதிர்கால வேலைத் திட்டமொன்று சபையிடம் இருக்காமை காரணமாக இந்த செயற்திட்டத்தை ஆக்கபூர்வமான முறையில் செயற்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் செயற்திட்டத்தின் மூலம் ரூபா 42,994,720 இற்கான நிதி நட்டமொன்று மேற்கொள்வதற்கு சபைக்கு நேரிட்டிருந்தது.

## 4.4 நிதியம் குறைப்பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐக்கிய அரபு எமீர் இராச்சியம்(டுபாய்) இல் அமைந்துள்ள வெளிநாட்டு மேம்படுத்தல் அலகின் நடைமுறை கணக்கில் மீளாய்வாண்டு ஜனவரி முதல் திசெம்பர் வரை ஒவ்வொரு மாதமும் ரூபா 3,000,000 தொகையை மிகைத்த மீதியொன்று காணப்பட்ட போதிலும், அந்த பணத்தை ஆக்கபூர்வமான முறையில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான ரூபா 760,545 தொகைக்கான 5 வெளிநாட்டு வங்கிக் கணக்குகளின் மீதிகள் 01 வருடம் முதல் 5 வருடங்கள் வரையான காலம் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆண்டின் போது ரூபா 32,132,088 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட பீடை நாசினி இரசாயன மூலக்கூறு பகுப்பாய்வு இயந்திரம் மற்றும் ரூபா 5,592,421 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த LP – 3800 GAS Chromatography இயந்திரம் மீளாய்வாண்டு வரை பயன்படுத்தியிருக்கவில்லை. சபையின் எதிர்பார்க்கும் நியமக் குறியீடுகளுக்கு இணங்கியிருக்காமை மற்றும் இயந்திரத்தை

செயற்படுத்துதல் தொடர்பாக பயிற்சி ஒன்று வழங்குனர்களினால் வழங்கியிருக்காமை என்பன அதற்கு காரணமாகியுள்ளது.

(ஆ) 2015 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 5,140,707 தொகை பெறுமதியான அலுவல உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மற்றும் கணினி மயப்படுத்தப்பட்ட தேயிலை விற்பனவு நிலையத்தை மூடிவிட்டமை காரணங்களினால் பயன்படுத்தப்படாமலும் செயற்படாமலும் காணப்பட்டது.

**4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இணையத்தளம் ஒன்று வடிவமைப்பதற்காக 2013 ஆண்டின் போது தனியார் கம்பனி ஒன்றிற்கு முற்பணமொன்றாக ரூபா 330,850 தொகை கொடுப்பனவு செய்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி அளவில் இந்த விடயம் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலை சபை சட்டம், 1957 இன் 51 ஆம் இலக்க தேயிலை கட்டுப்பாட்டு சபை சட்டம் மற்றும் 1959 இன் 16 ஆம் இலக்க தேயிலை (வரி மற்றும் கட்டுப்பாட்டு) ஆகிய சட்டங்களை ஒன்றித்து புதிய சட்டமொன்று ஏற்படுத்துவதற்காக 2015 ஆண்டின் போது ஆலோசகர் ஒருவருடன் உடனடிக்கை ஒன்று மேற்கொண்டு ஆலோசனை கட்டணமாக ரூபா 105,000 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையினால் சட்டங்களை ஒன்றிணைக்கத் தேவையில்லை என தீர்மானித்து குறிப்பிட்ட விடயம் கைவிடப்பட்டிருந்தது.

(இ) சபையினால் குதிரை பந்தயத் திடலில் நடாத்தப்பட்டுவந்த தேயிலை விற்பனை நிலையம் மீளாய்வாண்டு ஆரம்பம் முதல் மூடப்பட்டிருந்த போதிலும் அதனை நடாத்திய கட்டிடத்திதை திருப்பி ஒப்படைப்பதில் காணப்பட்ட தாமதம் காரணமாக மாதாந்த வாடகையாக ரூபா 1,140,544 தொகை மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4.7 முறைசார் விதமாக உரித்தாக்கப்படாத காணிகள் மற்றும் ஆதனங்களின் செயற்திட்டங்கள் ஆரம்பித்தல்**

நுவரெலிய பிராந்திய அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டு வரும் வரையறுக்கப்பட்ட கலனிவலி பெருந்தோட்டக் கம்பனிக்கு சொந்தமான மற்றும் பண்டாரவளை பிராந்திய அலுவலக கட்டிடம் அமைந்துள்ள நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான காணிகளின் உரிமை இவ் அறிக்கை திகதி வரை சபைக்கு

உரித்தாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலைகளுக்காக ரூபா 114,335,962 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**4.8 பதவியணியினர் நிருவாகம்**

நிறுவனத்தின் அங்கீகாரிக்ப்பட்ட பதவியணி 317 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணி 281 ஆகும். சிரேஷ்ட, மூன்றாம், இரண்டாம் தர மட்டத்திலுள்ள அலுவலர்களின் முறையே 03 பேர், 04 பேர் மற்றும் 33 பேர் மற்றும் ஆரம்ப மட்ட உத்தியோகத்தர் 09 பேர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அங்கீரிக்கப்பட்டிருக்காத பதவியணியில் காணப்படாத சிரேஷ்ட பதவியொன்று, மூன்றாம் தர பதவியொன்று மற்றும் இரண்டாம் தரப் பதவிகள் 05 இற்காக முறையே உத்தியோகத்தர் 01 உம், 01 உம் மற்றும் 11 உம் சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர். மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத பதவிப் பெயர்களுடன் வேலை சாட்டுதல் அடிப்படையில் 05 உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

**4.9 வாகனப் பாவனை**

சபைக்குச் சொந்தமான பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த இரண்டு கப் வண்டிகள், பெறுமதி மதிப்பீட்டு தொகையை தவணைப் பணமாக சபைக்குச் செலுத்தும் அடிப்படையில் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திற்கு, மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த போதிலும், இவ்வறிக்கை திகதி வரை இது தொடர்பான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அந்த நிறுவனத்திலிருந்து தவணைப் பணம் செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.10 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த சட்ட சம்பவங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலை ஆணையாளர் பிரிவினால் பயன்படுத்தப்படும் கட்டிடத்தின் உரிமையாளரினால் கட்டிடத்திற்கு ஏற்பட்டிருந்த சேதம் தொடர்பாக மற்றும் அதன் காரணமாக கட்டிடத்தை வேறு தரப்பினர் ஒருவருக்கு வாடகைக்கு கொடுப்பதற்காக நிலத்தின் அசல் நிலைமைக்கு ஆக்க முடியாமையின் காரணமாக ரூபா 4,900,000 இற்கான தொகை ஒன்று கோரி 2008 அக்தோபர் மாதம் சபைக்கு எதிராக பிணக்கு தீர்ப்பவர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பிணக்கு தீர்ப்பு பிரகாரம் 2012 நவம்பர் 14 திகதியில் உள்ளவாறு மேற்கூறிய பணம் மற்றும் அதற்கான 20 சதவீத வருடாந்த கட்டணம் உட்பட மொத்தம்

ரூபா 13,828,600 தொகை செலுத்த வேண்டும் என கட்டளை ஒன்று விடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சபையினால் இந்த தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீடு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 6 வெளி நிறுவனங்களினால் சபைக்கு எதிராக நீதிமன்றங்களில் 07 வழக்குகள் மற்றும் பதவியணி பல்வேறு நீதி மன்றங்களில் 03 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

## 5. நிலை பெறுதகு அபிவிருத்தி

### 5.1 நிலைபெறு தகு அபிவிருத்தியின் குறிக்கோள்களை நெருங்குதல்

நிலை பெறு தகு அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அனைத்து நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டு தொடர்பாக இலங்கை தேயிலை சபையினால் தமது செயல் நோக்கின் கீழ் வரக்கூடிய கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை. பின்வரும் அவதானிப்புகள் மேற் கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபெறு தகு இலக்குகளை நோக்கி நெருங்குவதற்காக நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட விடயங்களை வருடாந்த திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்காததுடன் அவ்விடயங்களை நிறைவேற்றுவதற்காக தேவையான நிதி ஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) நிலை பெறுதகு அபிவிருத்தி இலக்குகளை நெருங்குவதற்காக தயாராகும் போது ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பு ஒன்றின் ஏற்பாடுத்தாமையின் காரணத்தினால் இலக்கான குறிக்கோள்கள் நோக்கி நெருங்குவதற்கு திட்டங்கள் தயாரிக்கும் மற்றும் முன் தயாரிப்பு செயற்பாடு மிகவும் மந்தமான நிலைமையில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

## 6 கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

சபையின் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருந்த போதிலும் அந்த பிரிவுக்காக போதியளவு பதவியணியினால் இணைக்கப்ட்டிருக்கவில்லை.

## 6.2 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செயற்பாடுகள்

### 6.2.1 பெறுகைகள்

பெறுகைகள் திட்டம் தயாரித்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 ஜனவரி 25 திகதி 08 ஆம இலக்க தேசிய பெறுகைகள் முகவராண்மையின் சுற்றறிக்கையின் 4.2 பந்தியின் பிரகாரம் பெறுகைகள் நிறுவனத்தின் குறைந்த அளவு 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கும் பெறுகைகள் நடவடிக்கைகள் அட்டவனைப்படுத்தப்பட்டு பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகைகள் திட்டம், ஆண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் மூலதனச் செலவுகள் மேற்கொள்வதற்கு எதிர்ப்பார்த்தல் பெறுமதிக்கு ஒன்றாகப் போகின்ற வகையில் தயாரிக்கப்பட வேண்டுமெனினும், மூலதனச் சொத்துக்கள் உரித்தாக்கலுக்காக பாதீட்டு நிதி ஏற்பாடுகள் ரூபா 379.381 மில்லியன் தொகை எனினும் ரூபா 401.694 மில்லியன் இனை கொண்ட பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(இ) தேயிலை ஆணையாளர் பிரிவின் மூலம் செயற்படுத்தப்படும் தேயிலை தோட்டங்களை பதிவு செய்ய நிகழ்ச்சி திட்டத்தை கணிணி மயப்படுத்துவதற்காக மென்பொருள் ஒன்று தயாரிப்பதற்காக 2017 அக்தோபர் 09 ஆம் திகதி ரூபா 8,620,000 இற்கான ஒப்பந்த வேலை ஒன்று வழங்கியிருந்த போதிலும் அதனை பெறுகைகள் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) சபையின் போக்குவர்த்து தேவைகளை நிறைவேறச் பூர்த்தி செய்வதற்காக 2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் நடைமுறையினை கடைபிடிக்காமல் தனியார் போக்குவர்த்து கம்பனி ஒன்றின் சேவையை பெற்றிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,813,578 இற்கான செலவு ஒன்று மேற்கொண்டுள்ளது.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளய்வாண்டின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைகளிடையே 12 சதவீதம் முதல் 58 வரை அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமாக முகாமைத்துவ கட்டுபாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 6.4 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வுப் பந்திகள்

1957 இன் 51 ஆம் இலக்க தேயிலை கட்டுபாட்டுச் சட்டத்தின் 49 ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 14 ஆம் இலக்க தேயிலை சபை சட்டத்தின் பிரிவு 25(3) இன் பிரகாரம் பதிவு செய்தல் கட்டணம், பதிவுகளை புதுப்பித்தல் கட்டணம், அனுமதி பத்திர கட்டணம் என்பவற்றை திருத்தும் போது அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெறல் மற்றும் இலங்கை சனனாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்படல் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் 2010 ஜுலை 29 ஆம் திகதி முதல் கட்டணங்களை திருத்தும் போது அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை என 2014 ஆண்டு முதல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் மீளாய்வண்டு வரை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 7 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு குறைபாடுகளை அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது கீழ் வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு பரப்புகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளின் கட்டுபாடு | நீண்ட காலமாக கணப்படும் மீதிகளை அறவீடு செய்வதற்காக மற்றும் தீர்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | சொத்துக்கள் முறைசார் விதமான உரித்தாக்காமை மற்றும் விளைவற்றுக் காணப்படும் சொத்துக்களை பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | பதவியணி முகாமைத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அடங்காத பதவிகளுக்காக ஆட்கள் சேர்த்தல். |

டப்ளியூ. பி.சீ விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி